# திராவிட மணிவாசகம்



600

5

OFFICE OF THE REGISTRAR

13 AU

MADRAS

600
3-56

TB
031(5)
N56
89445

ல் பப்ளிஷிங் கம்பெனி.

நுங்கம்பாக்கம், சென்னை.6

# திராவிட
# மணி வாசகம்

## ஐந்தாம் புத்தகம்

E. RATNABAI DAVIS, M. ED.
AND
REV. BR. M. A. MANUEL, S.H.J., B.A., L.T.,
Headmaster, Christuraja Training School,
Palamcotta.

இன்டர்நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி
நுங்கம்பாக்கம் : : சென்னை-6
பதிப்புரிமை]
[விலை அணா 11

# DRAVIDA MANI VACHAKAM

BY

E. RATNABAI DAVIS, M. ED.,

REV. BR. M. A. MANUEL, S.H.J., B.A., L.T.,

STANDARD V

*First Printed—Nov., 1954*
*Reprint (2)—1955*
*Reprint (3)—May., 1956*

TB
031(5)
N56

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
(Supplement to Part I-B, of The Fort St. George
Gazette dated 15—6—1955, Page. 3)

29445
சென்னை-600 008.

Rajan Electric Press, Madras-1.

# முன்னுரை

இந்நூல் வரிசையில் இஃது ஐந்தாம் புத்தகம். நானகாம் புத்தகத்தில் ஒரு பொருளைப் பற்றிய பல பத்திகள் கொண்ட பாடங்களைப் படித்துத் தேர்ந்த குழந்தைகள், இப்புத்தகத்தில். மேலும் பல பொருள்களைப் பற்றிய பாடங்களைப் படித்துத் தேர்ச்சி பெறும்படி நான்காம் வகுப்பைக் காட்டிலும் சற்று உயர்ந்த நடையில் பாடங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.


கற்ற பாடங்களின் பொருள் மாணவர் உள்ளத்தில் நன்கு பதிவதற்கு ஏற்றவாறு ஆங்காங்கே பயிற்சிகள் புது முறையில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. பாடங்களுக்கு விளக்கமாக இன்றியமையாத படங்கள் சேர்க்கப் பட்டுள்ளன. வகுப்பின் தரத்திற்கு ஏற்றபடி இடையிடையே பாட்டுக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல் நன்கு அமைவதற்கு இன்றியமையாத யாவும் இயன்ற வரை செய்யப்பட்டுள்ளன.

கிறிஸ்து ராஜா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்கள் தம் அனுபவத்தால் ஆராய்ந்து மாணவர்க்கு நேரிடையாகக் கற்பித்து, அதன் பயனைப் இந்நூல் சிறந்த முறையில் அமைய நேர்ந்தது குறிப்பிட்டத்தக்கது. அவர்கட்கு எமது மனமார்ந்த நன்றி. தமிழன்பர்கள் இப்புத்தகத்தை ஆதரித்து உதவுவார்கள் என்று திண்ணமாக நம்புகிறோம்.

பதிப்பாளர்கள்.

## பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நமது நாடு | ... | 2 |
| 2. | குடியரசுத் தலைவர் | ... | 7 |
| 3. | பொன் பெற்ற பாணன் | ... | 13 |
| 4. | பொற்கைப் பாண்டியன் | ... | 18 |
| 5. | நூல் நிலையம் | ... | 24 |
| 6. | கருணை வள்ளல் | ... | 29 |
| 7 | .தேனீ | ... | 36 |
| 8. | வேளாண்மை | ... | 43 |
| 9. | தமிழர் திருநாள் | ... | 47 |
| 10. | தேசிங்கு மன்னன் | ... | 52 |
| 11. | குருவியும் குரங்கும் | ... | 58 |
| 12. | சிறந்த வாழ்க்கை | ... | 61 |
| 13. | உள்ளன்பு | ... | 67 |
| 14. | மறையருளிய பெரியார் | ... | 70 |
| 15. | நூல் நூற்கும் புழு | ... | 74 |
| 16. | கறுப்பு வைரம் | ... | 79 |
| 17. | கடிதங்கள் | ... | 84 |
| 18. | அரசவையில் ஒரு நாள் | ... | 89 |
| 19. | காப்பிச் செடி | ... | 94 |
| 20. | மாணவர் கழக விழா | ... | 98 |
| 21. | இறந்தவன் எழுந்தான் | ... | 102 |
| | **செய்யுட் பாடங்கள்** | | |
| I | வணக்கம் | ... | 109 |
| II | நீதி | ... | 110 |
| III | சதகச் செய்யுட்கள் | ... | 113 |
| IV | பலவகை | ... | 115 |
| V | நாட்டுப் பாடல் | ... | 117 |
| | குறிப்புரை | ... | 117 |



நமது குடியரசுத் தலைவர்

டாக்டர் இராஜேந்திரப் பிரசாத்

# திராவிட மணி வாசகம்

## ஐந்தாம் புத்தகம்

---

## நாட்டு வாழ்த்து

ஜன கண மன அதி நாயக ஜயஹே
    பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராடா
    த்ராவிட உத்கல வங்க
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
    உச்சல ஜலதி தரங்க
தவ சுப நாமே ஜாகே
    தவ சுப ஆசிஷ மாகே
    காஹே தவ ஜய காதா.

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
    பாரத பாக்ய விதாதா
ஜயஹே ! ஜயஹே ! ஜயஹே !
    ஜய ஜய ஜய, ஜயஹே !!

## வந்தேமாதரம்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர் !
வாழிய பாரத மணித்திரு நாடு;
வந்தே மாதரம்; வந்தே மாதரம்;
வந்தே மாதரம்.

# 1. நமது நாடு

1. இந்தியா நமது நாடு; இந் நாட்டில் நாம் பிறந்தோம்; இந் நாட்டிலேயே வளர்ந்து வருகிறோம். இது பாரத நாடு என்றும் வழங்கப்படும். பல நூற்றாண்டுகட்கு முன் பரதன் என்ற பேரரசர் இந் நாட்டை ஆண்டு வந்தமையால், இதற்கு இப் பெயர் வழங்குகிறது.

2. நமது நாடு மிகவும் பழைமையானது; நீர் வளமும் நிலவளமும், இயற்கை வளமும் மிகுதியாகப் பெற்றுள்ளது. இந்நாட்டில் ஏறத்தாழ நாற்பது கோடி மக்கள் வசிக்கிறார்கள். இதில் வாழ்க்கைக்கு வேண்டும் வசதிகள் எல்லாம் நிறைந்துள்ளன. அதனால் அயலார் பலர் நம் நாட்டின் மேல் படையெடுத்து வந்தனர். அவர்களிற் பலர் இதையே தமது தாயகமாகக் கொண்டு இங்கேயே நிலைத்துவிட்டனர்.

3. பாரத நாட்டிற்கு வடக்கு எல்லை இமய மலை; தெற்கு எல்லை இந்தியப் பெருங்கடல்; கிழக்கிலும் மேற்கிலும் முறையே வங்காள விரிகுடாவும், அரபிக் கடலும் எல்லைகளாகும். இவை நமது நாட்டிற்கு இயற்கையாய் அமைந்துள்ள அரண்களாகும்.

4. இமயமலை மிகவும் உயரமானது. இதனைக் கடந்து யாரும் நம் நாட்டிற்குள் எளிதில் வர முடியாது. இம்மலையின் மேலே எப்பொழுதும் உறை பனி மூடியிருக்கும். இதன் முடிகள் வானையளாவியுள்ளன. இதனை வெள்ளி மலை எனவும் சொல்லுவார்கள். நமது நாட்டின் நடுப்பகுதியில் விந்திய மலை இருக்கிறது. விந்திய மலைக்கு வடக்கிலுள்ள

நிலப் பகுதி, இந்துஸ்தானம்; தெற்கில் உள்ளது தக்காணம். தமிழகம் தக்காணத்தின் தென் பகுதியில் உள்ளது. தக்காணத்தின் கிழக்கிலும் மேற்கிலும் இரு மலைத்தொடர்கள் உள்ளன; அவை கிழக்கு மலைத் தொடரும் மேற்கு மலைத் தொடரும் ஆகும்.

5. இந்துஸ்தானத்தில் கங்கை, சிந்து, பிரம புத்திரா என்னும் நதிகள் பாய்கின்றன. இவை, இமயமலையில் உற்பத்தியாகின்றன. கிருஷ்ணு கோதாவரி முதலான பல ஆறுகள் தக்காணத்தை வளம்படுத்துகின்றன. காவிரி, தென் பெண்ணை, பாலாறு, வையை, தாமிரவருணி முதலிய ஆறுகள் தமிழகத்தைத் தழைக்கச் செய்கின்றன.

6. இந் நாட்டிலுள்ள மலைகளும், காடுகளும், நதிகளும், சோலைகளும் நம் இயற்கைச் செல்வங் கள். காடுகளிலும் மலைகளிலும் பலவகை உயர்ந்த மரங்கள் வளர்கின்றன. நதிகள் பாயும் நிலப் பரப் பில் நெல், கோதுமை முதலான உணவுப் பொருள் கள் விளைவிக்கப்படுகின்றன. பொன்னும் மணியும் பல இடங்களில் கிடைக்கின்றன.

7. இந்நாள் வரையில் நாம் அன்னிய நாட்டி னருக்கு அடிமைப்பட்டிருந்தோம். அடிமை வாழ் வில் நாம் அமைதியைக் காணவில்லை. பல ஆண்டு க்ளாகச் 'சுதந்தரம் எமது பிறப்புரிமை' என நாம் முழங்கி வந்தோம். 'நமது நாட்டின் தந்தை, எனப் புகழப்படும் காந்தியடிகள், அறப்போர் தொடங்கி ஆங்கில ஆட்சியை அமைதியான முறையில் எதிர்க்கத் திட்டம் வகுத்தார். நாட்டு மக்கள் அவருக்குப் பேராதரவு அளித்தார்கள்

இறுதியில் நாம் வெற்றியடைந்தோம். 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் நாள் நமது நாடு சுதந்தரம் அடைந்தது. இன்று நாம் சுதந்தர இந்திய மக்கள்.

8. நாம் பண்டை நாள் முதல் நாகரிகத்தில் மேம்பாடு அடைந்துள்ளோம். நம் முன்னோர் அறிவிலும், ஆண்மையிலும், கல்வியிலும் புகழ் பெற்று விளங்கினர். இன்றும் பல மேன்மக்கள் நமக்குப் பேரும் புகழும் அளித்து வருகின்றார்கள்.

9. இப்பொழுது நாம் உரிமை பெற்றுவிட்டோம். நம் நாடு நலம் பெற நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்; சாதி, மத வேற்றுமைகளை மறந்து, நாட்டுப் பணியில் ஈடுபட வேண்டும்; நமது நாடு பெற்றிருந்த பழம் பெருமையை மீண்டும் நிலைநாட்ட வேண்டும். இந்திய மக்கள் ஒவ்வொருவரும் நாட்டுப் பற்றுக் கொண்டு நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடு பட வேண்டும்.

## சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்ந்து | நூற்றுண்டு | பேரரசர் | வந்தமையால் |
| இயற்கை | ஏறத்தாழ | கோடி | வழங்குகிறது |
| வாழ்க்கை | வசதி | அயலார் | நிறைந்துள்ளன |
| முறையே | எல்லை | நிலைத்து | படையெடுத்து |
| யாவும் | அரண் | கடந்து | உறைபனி |
| முடிகள் | பகுதி | சோலை | வானையளாவி |
| அன்னிய | அடிமை | அமைதி | செல்வங்கள் |
| முழங்கி | அரசியல் | வகுத்தார் | அறப்போர் |
| இறுதி | வெற்றி | நாகரிகம் | முன்னோர் |
| ஆண்மை | உரிமை | நாட்டுப்பற்று | முன்னேற்றம் |

## பயிற்சி

I. **விடை கூறுக :**

1. நமது நாட்டிற்குப் 'பாரத நாடு' என்று ஏன் பெயர் வந்தது?

2. நமது நாட்டின் இயற்கை அரண்கள் யாவை?

3. இமயமலையின் சிறப்பு யாது?

4. இந்நாட்டிலுள்ள நதிகள் யாவை?

5. நம் இயற்கைச் செல்வங்கள் யாவை?

6. நமக்கு எவ்வாறு உரிமை கிடைத்தது?

7. நம் நாட்டின் பண்டைச் சிறப்பு யாது?

II. **பிரித்து எழுதுக :**

நிறைந்துள்ளன ; படையெடுத்து ; அமைந்துள்ள; வானையளாவி ; வடக்கிலுள்ள ; பிறப்புரிமை.

III. **சேர்த்து எழுதுக :**

முன்+ஏற்றம் ; ஏற+தாழ; மலை+தொடர்.

VI. **தெரிந்து கொள் :**

நூறு+ஆண்டு—நூற்றாண்டு.

V. **எதிர்ச் சொற்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏற | × | தாழ | பழமை | × | புதுமை |
| நிறைந்து | × | குறைந்து | வெற்றி | × | தோல்வி |
| இயற்கை | × | செயற்கை | ஒற்றுமை | × | வேற்றுமை |

## இலக்கணம்

**நாடு சுதந்தரம் அடைந்தது.**

**மக்கள் அவருக்குப் பேராதரவு.**

இவற்றுள் ஒவ்வொன்றிலும் பல சொற்கள் தொடர்ந்து அமைந்துள்ளன. ஆகவே, இவை **சொற்றொடர்** எனப்படும். சொற்கள் சிலவும் பலவும் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்பது சொற்றொடர்.

இவற்றுள் 'நாடு சுதந்தரம் அடைந்தது' என்பது முடிவான பொருளைத் தருகிறது. இது **முற்றுச் சொற்றொடர்.** இவ்வாறு பொருள் முடிந்து (முற்றுப் பெற்று) நிற்கும் சொற்றொடர், முற்றுச் சொற்றொடர் ஆகும்.

'மக்கள் அவருக்குப் பேராதரவு' என்பதிலும் பல சொற்கள் தொடர்ந்து நிற்கின்றன. இதுவும் சொற்றொடரே; ஆனால் இது முடிந்த பொருளைத் தரவில்லை. பொருள் முடியாமல் குறைந்து (எஞ்சி) நிற்கிறது. இது **எச்சச் சொற்றொடர்.** இவ்வாறு பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொற்றொடர், 'எச்சச் சொற்றொடர்' ஆகும்.

முற்றுச் சொற்றொடர்களையும், எச்சச் சொற்றொடர்களையும் எடுத்து எழுதுக:

1. நாம் உரிமை பெற்று விட்டோம்.
2. அடிமை வாழ்வில் நாம் அமைதியை.
3. நமது நாடு மிகவும் பழமையானது.
4. இமயமலை மிகவும் உயரமானது.
5. தமிழகம் தக்காணத்தின் தென்பகுதியில்.

# 2. குடியரசுத் தலைவர்

1. நமது நாடு 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதி சுதந்தரம் பெற்றது; 1950-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இருபத்து ஆறும் நாள் முதல் நம் நாடு குடியரசாகத் திகழ்ந்து வருகின்றது. குடிமக்களால் நடத்தப் படும் அரசாங்கம் குடியரசு எனப்படுகிறது. குடியாட்சியின் தலைவர் ஜனாதிபதி எனப்படுவார். இப்பொழுது நமது நாட்டின் ஜனாதிபதியாக விளங்கி வருபவர் டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் அவர்களாவார்.

2. இராஜேந்திரப் பிரசாத், பீகார் மாகாணத்தில் சாரன் மாவட்டத்திலுள்ள ஜீராதேயி என்னும் சிற்றூரில் 1884-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூன்றும் நாளன்று பிறந்தார். இவரது தந்தையார் பெயர் மகாதேவ சகாயர் என்பது. மகாதேவ சகாயருக்கு இவர் ஐந்தாம் குமாரராகப் பிறந்தார்.

3. இராஜேந்திரர் இளமையில் முதன்முதலில் முஸ்லிம் மௌல்வி ஒருவரிடம் பாரசீக மொழியைக் கற்று அதில் தேர்ச்சி யடையந்தார். அதன்பின் சப்ரா என்னுமிடத்திலுள்ள ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்து உயர்தரக் கல்வி கற்ருர். உயர்தரக் கலாசாலைப் படிப்பு முடிந்ததும் அவர் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் கல்லூரிக் கல்வி கற்ருர். 1910-ஆம் ஆண்டு அவர் சட்டத் தேர்வில் தேறி பி. எல். பட்டம் பெற்ருர்.

4. கல்லூரிப் படிப்பு முடிந்ததும் இராஜேந்திரர் முஸபர்பூர் கல்லூரியில் பேராசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார். ஆங்கிலம், சரித்திரம், பொருளாதாரம் ஆகிய மூன்று பாடங்களையும் மாணவர்களுக்கு அவர் போதித்து வந்தார். இவ்வாறு ஒரே ஆசிரியர் மூன்று பாடங்களைக் கற்பிப்பது மிகவும் அரிது. சில ஆண்டுகளில் கல்வித் துறையில் அவர் புகழ் ஓங்கிற்று. அதன் காரணமாக அவர் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் சட்டப் பேராசிரியராக நியமனம் பெற்றார். அந்தப் பதவியை அவர் ஐந்தாண்டு திறம்பட வகித்தார். அப்பொழுது கல்கத்தாப் பல்கலைக் கழகம் அவருக்கு எம். எல்., டாக்டர் என்னும் பட்டங்களை வழங்கியது. அதன் பின், அவர் பாடலிபுரம் சேர்ந்து வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டு நேர்மையான முறையில் நடத்தி உயர் நீதிமன்றத்தினர் அனைவரும் போற்றும் வகையில் விளங்கினர்.

5. இராஜேந்திரர் அரசியலில் தீவிரமாக ஈடுபட நேர்ந்ததற்குச் சம்பரானில் நடந்த நிகழ்ச்சியே காரணமாகும். பீஹார் மாகாணத்தில் சம்பரான் மாவட்டத்தில் வாழ்ந்து வந்த விவசாயிகளை ஐரோப்பியர் மிகவும் துன்புறுத்தி வந்தனர். அவர்களுடைய உரிமைகளைக் காப்பதற்குக் குடி மக்கள் கிளர்ச்சி செய்தனர். காந்தியடிகளுடன் சேர்ந்து இராஜேந்திரர் இக் கிளர்ச்சியில் பெரும் பங்கெடுத்துக்கொண்டார். இறுதியில் அரசாங்கம் குடிமக்கள் கோரிக்கைகளுக்கு இணங்கியது.

6. சம்பரான் நிகழ்ச்சி தொடங்கியதிலிருந்து இராஜேந்திரர் காந்தியடிகளுடன் இருந்து, அவரது கொள்கைகளைப் பின்பற்றி உரிமைப் போரில் கலந்துகொண்டார். 1930-ஆம் ஆண்டு காந்தியடிகள் மேற்கொண்டு நடத்திய உப்புப் போரில் ஈடுபட்டு இராஜேந்திரர் நான்கு முறை சிறைப்பட்டார். 1934-ஆம் ஆண்டு பீகாரில் பூகம்ப விபத்துக்குள்ளானவர்களுக்கு இராஜேந்திரர் பெரிதும் உதவினார்; விரைவாகப் பலவிடங்களுக்கும் சென்று விபத்தினால் ஏற்பட்ட சேதங்களை விவரமாகக் கூறி, நிதி திரட்டினார்; சில நாட்களில் முப்பது லட்சம் ரூபாய் திரட்டி அவர்களுக்கு உதவி செய்தார். இம்மாபெரும் நிகழ்ச்சியே அவருக்குப் பேரும் புகழும் அளித்தது என்னலாம்.

7. இராஜேந்திரர் நமது உரிமைப் போரில் கலந்துகொண்டு மிகவும் தீவிரமாக உழைத்தார். நமது நாட்டு நன்மைக்காகப் போராடிய காங்கிரஸ் பேரவைக்கு இவர் மும்முறை தலைமை தாங்கியிருக்கிறார்.

8. 1946-ஆம் ஆண்டு தோன்றிய இடைக்கால அரசாங்கத்தின் உணவு, விவசாய அமைச்சராக இராஜேந்திரப் பிரசாத் நியமனம் பெற்றார். இதுவே இவர் வகித்த முதல் அரசாங்கப் பதவியாகும். அதன் பின் இவர், நமது அரசியலை வகுப்பதற்காக அமைந்த அரசியல் நிர்ணய சபையின் தலைவராக விளங்கினார். 1950-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் நாளன்று அவர் இந்தியக் குடியரசின் தலைவராகப் பதவி ஏற்றார். 1952-ஆம்

ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இவர் இரண்டாம் முறையாகத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவரது தலைமையில் நம் குடியரசு பலவகை நலன்களைப் பெற்று நீடூழி வாழ்வதாக.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| திகழ்ந்து | ஆங்கிலம் | சேதம் |
| குடியாட்சி | பொருளாதாரம் | திரட்டினர் |
| குடியரசு | சரித்திரம் | மாபெரும் |
| ஜனதிபதி | அரிது | பேரவை |
| டாக்டர் | நியமனம் | அமைச்சர் |
| மாவட்டம் | பதவி | அரசியல் |
| மௌல்வி | தீவிரமாக | நிர்ணய |
| கலாசாலை | கிளர்ச்சி | நீடூழி |
| கல்லூரி | கோரிக்கை | ஏற்றார் |
| தேர்வு | பூகம்பம் | தோன்றிய |
| பேராசிரியர் | விபத்து | பாரசீக |

## பயிற்சி

1. விடை கூறுக :

1. குடியரசு என்பது யாது ?

2. இராஜேந்திரர் கல்விப் பயிற்சியை விளக்கி எழுதுக.

3. கல்லூரிகளில் அவர் வகித்த பதவிகள் யாவை ?

4. பல்கலைக் கழகத்தில் அவர்பெற்ற பட்டங்கள் யாவை ?

5. இராஜேந்திரர் அரசியலில் ஈடுபட முதற்காரணமான நிகழ்ச்சி யாது ? அதன் முடிவு என்ன ?

6. இராஜேந்திரருக்குப் பேரும் புகழும் அளித்த மாபெரும் நிகழ்ச்சி எது ?

7. இராஜேந்திரர் வகித்த அரசாங்கப் பதவிகள் யாவை ?

II. தெரிந்து கொள் :

நிலநடுக்கம் — பூகம்பம்
மொழி — பாஷை
நிகழ்ச்சி — சம்பவம்
கற்பித்து — போதித்து
மாவட்டம் — ஜில்லா
மக்கள் — ஜனங்கள்

## இலக்கணம்

இராஜேந்திரர் பேராசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார்

இது பல சொற்கள் தொடர்ந்து நிற்கும் சொற்றொடர். இது வாக்கியம் என்று சொல்லப்படும். இதில் 'ஏற்றுக்கொண்டார்' என்பதிலேயே இதன் பயன் (பொருள் முடிவு) நிற்கிறது. ஆகவே, அது **பயனிலை** எனப்படும்.

பயன் தோன்றுவதற்கு (எழுவதற்கு) இடமாய் இருப்பது 'இராஜேந்திரர்' என்பது. ஆகவே, அது **எழுவாய்** எனப்படும்.

எழுவாயால் ஏற்றுக்கொள்ளப்பட்டதைக் குறிப்பது 'பேராசிரியர் பதவி' என்பது. இது **செயப்படுபொருள்** எனப்படும்.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இம்மூன்றும் சொற்றொடரின் (வாக்கியத்தின்) உறுப்புக்கள் ஆகும்.

பயனிலை பெரும்பாலும் வினைமுற்றாக இருக்கும். எழுவாயும் செயப்படுபொருளும் பெயர்ச் சொற்களாக இருக்கும். பயனிலையை அறிந்து, அதனோடு 'யார்' அல்லது 'எது' என்னும் கேள்வியைக் கேட்டால் அதற்கு

விடையாக வருவது எழுவாய். பயனிலையோடு 'யாரை' அல்லது 'எதை' என்னும் கேள்வியை எழுப்பினல் அதற்கு விடையாக வருவது செயப்படுபொருள்.

இவற்றுள் செயப்படுபொருள் இன்றியும் சில வாக்கியங்கள் அமைவதுண்டு.

இராஜேந்திரர் பிறந்தார்.

இதில் எழுவாயும் பயனிலையும் மாத்திரமே உள்ளன. செயப்படுபொருள் இல்லை.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கண்டு பிடித்து எழுதுக:

1. இராஜேந்திரர் பாரசீக மொழியைக் கற்றார்.
2. அவர் நிதியைத் திரட்டினர்.
3. அவர் நமது அரசியலை வகுத்தார்.
4. குடியரசு பலவகை நலங்களைப் பெறுகிறது.

# 3. பொன் பெற்ற பாணன்

## (மௌன வாசிப்பு)



1. வெகு காலத்திற்கு முன், ஐரோப்பிய நாட்டில் சிறு நகரம் ஒன்று இருந்தது. ஒரு சமயம் அந்த நகரத்தில் எலிகளின் தொல்லை மிகுந்துவிட்டது. நகரத்தின் எல்லா வீடுகளிலும் எலிகள் மிகுதியாகப் பெருகத்தொடங்கின. இந்த எலிகள் எந்நேரமும் அவர்களுக்குத் தொந்தரவளித்து வந்தன. அவை, அவர்களை உண்ணவும் உறங்கவும்கூட விடுவதில்லை. எலிகளின் தொந்தரவைத் தவிர்ப்பதற்கு அவர்கள் வழியொன்றும் காணாது திகைத்தார்கள்.

2. ஒரு நாள் நகரத்தார் அனைவரும் நகரத் தலைவரின் தலைமையின்கீழ் ஒருங்கு கூடினார்கள்; எலிகளை ஒழிப்பதற்கான வழிதுறைகளை ஆராய்ந்து

கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கு விநோத மான மனிதன் ஒருவன் வந்து சேர்ந்தான். அவன் நீண்ட அங்கி அணிந்திருந்தான்; கையில் ஓர் ஊது குழலைப் பிடித்திருந்தான்; நகரத்தார் பேசிக்கொண் டிருப்பதை அவன் கவனித்தான்; நகரத் தலைவர் முன் வந்து நின்று, "ஐயா, இந் நகரத்திலுள்ள எலி கள் அனைத்தையும் நான் ஒரு நொடியில் அகற்றி விடுகிறேன். எனக்கு நூறு பொன் அளிப்பீர்களா?" என்று கேட்டான். அனைவரும் வியப்புற்று, "மெய் யாகவே நீர் அவ்வாறு செய்வீரா?" என்று கேட்டார் கள். "ஆம், ஐயா, நான் செய்த பின்பு நீங்கள் அத் தொகையைக் கொடுங்கள், போதுமானது," என் ருன், அப்புதியவன். நகரத்தார் அதற்குச் சம்மதித் தார்கள்.

3. அப்புதிய மனிதன் தன் குழலை எடுத்து வாயில் வைத்துக் கொண்டான்; வீதியில் நின்று கொண்டு குழலை இசைத்தான். சற்று நேரத்தில் எல்லா வீடுகளிலிருந்தும் எலிகள் கூட்டங் கூட்ட மாக அவனை நோக்கி ஓடிவந்தன. குழலூதும் பாணன் தன் குழலை இசைத்துக்கொண்டே எல்லா வீதிகளிலும் சுற்றிவந்தான். பல்லாயிரக்கணக்கான எலிகள் அவனைப் பின்தொடர்ந்து வந்தன. இறுதி யில் பாணன், அந்நகரின் அருகேயுள்ள நீர் நிறைந்த ஆற்றில் இறங்கி நின்று குழலை ஊதினன்; எலி களும் ஆற்றில் குதித்தன. அவ்வளவு எலிகளும் ஆற்றில் விழுந்து மூழ்கி இறந்தன. அதைக் கண்ட நகர மக்கள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர்.

4. பாணன் நகரத் தலைவரிடம் சென்று, தனக்குச் சேரவேண்டிய நூறு பொன்னைக் கேட்

டான். தலைவர், "பாணரே, நீர் செய்த உதவிக்கு மிக்க நன்றி. ஆனால் நீங்கள் கேட்கும் தொகை மிகவும் அதிகம். பத்துப் பொன் தருகிறோம்; அதனைப் பெற்று மகிழ்வீராக," என்றார். பாணன் அதை வாங்கிக்கொள்ள மறுத்தான்; "ஐயா, நீங்கள் ஒப்புக்கொண்ட தொகையைக் கொடுக்க மறுக்கிறீர்கள். எனக்கு உங்கள் பொன்னே வேண்டா," என்று கோபத்தோடு சொல்லிக் கொண்டே பாணன் வெளியேறினர்.

5. பாணன் நடுவீதியில் நின்றுக்கொண்டான்; தன் குழலை எடுத்துப் புதிய மெட்டில் இசைக்கத் தொடங்கினன். குழலோசையைச் செவியுற்று வீடுகளிலிருந்த குழந்தைகள் அவனை நோக்கி ஓடிவந்தன; சின்னஞ் சிறு குழந்தைகளும் தவழ்ந்துவந்தன. பெற்றோர்கள் குழந்தைகளைத் தடுத்துங்கூட அவை நிற்கவில்லை. பல குழந்தைகள் புடைசூழப் பாணன் அந்நகரத்தில் சுற்றி வந்தான். ஆயிரக்கணக்கான குழந்தைகள் அவனைச் சுற்றி ஆடிப் பாடிக் களிப்புக்கொண்டு சென்றன.

6. இதனைக் கண்ணுற்ற நகரத்தார் திகிலடைந்தனர். எலிகளுக்கு நேர்ந்த கதி தம் குழந்தைகளுக்கும் நேர்ந்துவிடுமோ என்று அவர்கள் அஞ்சினர்; நகரத் தலைவரும் உடன்வர எல்லோரும் பாணனைப் பின்தொடர்ந்து ஓடிவந்தனர். பாணன் ஆற்றங்கரையை நெருங்கிவிட்டான். நகரத் தலைவர் 'இனியும் தாமதம் செய்யக்கூடாது' என்று எண்ணி, பாணனுக்கு முன் சென்று நின்றார். அவர் கையில் பணமுடிப்பு ஒன்று இருந்தது. அவர் அதை நீட்டிக்

கொண்டே, "பாணரே, எங்களுக்குப் புத்தி வந்தது. இதோ இம்முடிப்பில் ஐந்நூறு பொன்கள் இருக்கின்றன. நாங்கள் பேசியது போல் ஐந்து மடங்கு இருக்கிறது. தயை செய்து இதைப் பெற்றுக்கொண்டு உங்கள் இசையை நிறுத்துங்கள்; எங்கள் மக்களை எங்களுக்கு அளியுங்கள்," என்று வேண்டிக்கொண்டார்.

7. பாணன் பொன் முடிப்பைப் பெற்றுக் கொண்டான்; குழலோசையை நிறுத்தினன். உடனே குழந்தைகள் தத்தம் பெற்றோரை நோக்கி ஓடிச் சென்றன. பாணனும் மகிழ்ச்சியடைந்து தன் வழியே சென்றான். நகர மக்களும் தத்தம் குழந்தைகளை அழைத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு நகரத்திற்குச் சென்றனர்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| தொந்தரை | இசைத்தான் | மெட்டு |
| ஒருங்கு | மாண்டதை | ஐந்நூறு |
| மூழ்கி | செவியுற்ற | அனைவரும் |
| இறந்தன | நேர்ந்து | அங்கி |
| திகில் | திகைத்தனர் | நொடி |
| பாணன் | ஆராய்ந்து | மகிழ்வீராக |
| தவிர்ப்பதற்கு | மெய்யாக | வெளியேறினன் |
| வழிதுறை | மறுத்தான் | மடங்கு |

## அருஞ்சொற் பொருள்

*பாணன்-பாட்டிசைப்போன்; ஒருங்குகூடி - ஒன்றுகூடி; தொந்தரை - தொந்தரவு, துன்பம்; அங்கி - மேற்சட்டை; மெய் - உண்மை; அனைத்தும் - எல்லாம்; மெட்டு - இராகம்.*

## பயிற்சி

**I. விடை கூறுக:**

1. விநோத மனிதன் நகரத் தலைவரிடம் கூறியது என்ன ?

2. பாணன் எலிகளை எவ்வாறு மாளச் செய்தான் ?

3. பொன்னைக் கேட்கச் சென்ற பாணனிடம் தலைவர் கூறியதென்ன ?

4. இரண்டாம் முறையாகப் பாணன் குழலூதிய பொழுது நிகழ்ந்தது என்ன?

5. நகரத்தார் ஏன் திகிலடைந்தார்கள் ?

6. நகரத்தார் திரும்பவும் தம் மக்களை எவ்வாறு அடைந்தார்கள் ?

II 1. இந்தக் கதையைப் பாணன் கூறுவதுபோலக் கூறுக.

2. இந்தக் கதையை நகரத் தலைவர் கூறுவது போலக் கூறுக.

## இலக்கணம்

பல வாக்கியங்கள் கொண்டது ஒரு பத்தி அல்லது **பாரா** எனப்படும். ஒவ்வொரு பத்தியும் குறிப்பிட்ட ஒவ்வொரு கருத்தை விவரிக்கும். ஒரே பத்தியில் வேறு கருத்தைத் தெரிவிக்கும் வாக்கியங்களைக் கலத்தல் ஆகாது. ஒவ்வொரு பத்தியிலும் ஒரே கருத்தின் தொடர்பான வாக்கியங்கள் இருக்கவேண்டும். இவ்வகையான பத்திகளுள் ஒவ்வொன்றுக்கும் ஏற்ற தலைப்புக் கொடுக்கலாம்.

எடுத்துக்காட்டாக இப்பாடத்தின் பத்திகளுக்குக் கீழ்க்கண்டவாறு தலைப்புக்கள் கொடுக்கலாம் :

1. எலிகளின் தொல்லை.
2. பாணன் வருகை.
3. பாணனும் எலிகளும்.
4. பாணன் கோபம்.
5. பாணனும் குழந்தைகளும்.

இதுபோல் 6, 7 பத்திகளுக்கும் ஏற்ற தலைப்புக்கள் தருக.

# 4. பொற்கைப் பாண்டியன்



1. மதுரை மாநகரம் தமிழகத்தின் திலகம் போன்றது. அதனை முன்னாளில் பாண்டிய மன்னர் ஆட்சி புரிந்து வந்தனர். அந்நகரில் அந்தணர் வீதியில், கீரந்தை என்ற மறையவன் ஒரு நாள் நள்ளிரவில் தன் மனைவியுடன் உரை யாடிக்கொண்டிருந்தான். கீரந்தை, காசி நகரத் திற்கு யாத்திரை செல்ல விரும்பினான். அந்நாளில் யாத்திரிகர் பலர் ஒன்று கூடிக் கால்நடையாகவே காசிக்குப் போய்த் திரும்பி வருவது வழக்கம். அவ்வாறே கீரந்தையும் காசி நகரம் சென்று மீள எண்ணி, தன் விருப்பத்தை மனை வியிடம் தெரிவித் தான், அதுகேட்ட அவன் மனைவி தானும் உடன் வருவதாகக் கூறினாள். அந்தணன் தன் மனை விக்கு ஆறுதல் மொழிகளைக் கூறலானான்: "நீ

பெண். உன்னால் நெடுந்தூரம் நடக்க இயலாது. வழியில் பல இடையூறுகள் உண்டு. ஆதலால், இங்கேயே இரு,” என்று அத்தணன் புகன்றான். ஆனால், மனைவி மன்றாடி வேண்டினாள்.

2. அவ்வேளையில் பாண்டிய மன்னன், மாறு வேடம் பூண்டு, நகர சோதனையாக அவ்வீதி வழியே வந்தான்; காலமோ, நள்ளிரவு; கீரந்தையின் வீட்டில் மட்டும் பேசும் அரவம் கேட்க, மன்னன் கதவருகில் நின்று, அதை உற்றுக் கேட்கலானான். அந்தணன் தன் மனைவியை நோக்கி, “நீ தனித்திருப்பதற்கு அஞ்ச வேண்டா. நம் பாண்டிய மன்னரது அரசில் துன்பம் ஏது? உன்னை நம் அரசர் காப்பாற்றுவார். விடியற்காலையிலேயே நான் புறப்படுகிறேன். எனக்கு விடை கொடு,” என்று சொல்லி அவளை அமைதியுறச் செய்தான். விடியற்காலையில் அந்தணன் புறப்பட்டுச் சென்றான்.

3. கீரந்தை கூறிய வார்த்தைகளைக் கேட்ட மன்னன் வியப்புற்றான்; ‘இவ்வந்தணன் என்னை நம்பித் தன் மனைவியைத் தனியே விடுத்து யாத்திரை செல்கிறான். ஆதலால், இவன் வரும் வரையில் நான் அவளை எவ்விதக் குறைவுமின்றிக் காப்பாற்ற வேண்டும்,’ என முடிவு செய்தான். அடுத்த நாள் முதல் அத்தெருவிலுள்ள யாவருக்கும் அரசனாணையால் உணவுப் பண்டங்கள் குறைவின்றி அளித்து வரப்பட்டன; அந்தணன் மனைவியும் அதனைப் பெற்று வாழ்ந்து வந்தாள். தினந்தோறும் அரசன் அத்தெருவின் வழியே சென்று, அவ்வீட்டைக் காவல் காத்து வந்தான்.

4. ஆறு மாதங்கள் கடந்தன. ஒரு நாள் வழக்கம்போல் பாண்டியன் அத்தெரு வழியே சென்றான்; கீரந்தையின் வீட்டினுள் விளக்கு எரிவதையும், பேச்சுக் குரல் கேட்பதையும் அறிந்தான். அவனுக்கு ஐயம் தோன்றிற்று; மன்னன் ஆலோசிக்காமல் தெருக் கதவைத் தட்டினான். உள்ளிருந்து கீரந்தையின் குரல், 'யாரது?' என வினவிற்று. மன்னன் மருண்டான். 'ஐயோ! இது கீரந்தையின் குரல் அல்லவா! நான் கதவைத் தட்டியதைக் கேட்டு அந்தணன் யாது நினைப்பானோ!' என நினைத்து, அரசன் அத்தெருவிலுள்ள எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டியவண்ணம் அரண்மனை சேர்ந்தான்.

5. 'கதவை நள்ளிரவில் தட்டிய கயவன் யார்?' என அந்தணர் யாவரும் கவலைகொண்டனர். காலையில் யாவரும் அரசவை யடைந்து மன்னனைப் பணிந்து, நடந்ததை நவின்றனர்: "மன்னரே, உமது ஆட்சியில் நாங்கள் யாதொரு குறையும் இன்றி வாழ்ந்து வந்தோம். ஆனால், நேற்றிரவு எங்கள் தெருவில் ஒரு கயவன் வீட்டுக் கதவுகளைத் தட்டிவிட்டு மறைந்தான். அவன் ஒரு கள்வனாகவே இருத்தல் வேண்டும். அவனைப் பிடித்துத் தண்டிக்க வேண்டும்," என்று அந்தணர் யாவரும் முறையிட்டனர்.

6. "பிழைபுரிந்த கள்வனுக்கு விதிக்கவேண்டும் தண்டனை யாது?" என வேந்தன் அவர்களை வினவினான். "இக்குற்றம் புரிந்த கள்வனது வலக்கையைத் துணிப்பதே நேர்மை," என்றனர் அந்தணர். உடனே மன்னன் தன் உடை வாளை

உருவித் தனது வலக் கரத்தைத் துணித்துக் கொண்டான்!

7. அந்தணரும் சபையிலிருந்தவர்களும் வியப்பும் துயரமும் அடைந்தனர். மன்னன் நடந்ததை நவின்றான். அரசன் நீதியைக் கண்டு மக்கள் அவனைப் போற்றினார்கள். இயற்கைக் கையைத் துணிந்துக்கொண்ட பாண்டியன் பொன்னினால் கை செய்து வைத்துக்கொண்டான். அதனால் அம்மன்னன் பொற்கைப் பாண்டியன் என்ற சிறப்புப் பெயர் பெற்றான்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| திலகம் | நகர சோதனை | கரம் |
| முன்னாள் | வியப்பு | துணித்து |
| மறையவன் | யாதொரு | அமைதியுற |
| யாத்திரை | உருவி | ஆணை |
| சாத்திரிகர் | நள்ளிரவு | மருண்டான் |
| கயவன் | அரவம் | அரசவை |
| துணிப்பது | நிமித்தம் | நவின்றனர் |
| இடையூறு | விடுத்து | முறையிட்டனர் |
| புகன்றான் | காப்பாற்ற | துயரம் |
| மன்றாடு | மீள | ஆறுதல் |

## அருஞ்சொற் பொருள்

*துணிப்பது - துண்டிப்பது; இடையூறு - துன்பம்; அவரம் - சத்தம்; கயவன் - கீழ்மகன்; கரம்- கை; அரசவை-அரசனது சபை; புரிந்த-செய்த; வியப்பு- ஆச்சரியம்; துயரம் - துக்கம்; பொற்கை- பொன்னால் செய்யப்பட்ட கை.*

## பயிற்சி

**I. விடை கூறுக:**

*1. அந்தணன் தன் மனைவிக்கு எவ்வாறு ஆறுதல் கூறினான் ?*

2. கீரந்தையின் மனைவியை அரசன் எவ்வாறு பாது காத்து வந்தான் ?

3. அரசன் ஏன் எல்லாக் கதவுகளையும் தட்டிக் கொண்டே சென்றான் ?

4. அந்தணர் மன்னரிடம் முறையிட்டது என்ன ?

5. மன்னன் தன் கையைத் துணித்துக்கொண்டது ஏன் ?

6. மன்னனுக்கு ஏன் "பொற்கைப் பாண்டியன்" என்று பெயர் வந்தது?

II. 1. **இச்சொற்களுக்கு நேரான பொருளைக் கொண்ட வேறு சொற்களை எழுது:**

வேந்தன், கதிரவன், அந்தணன், அரவம்,
இடையூறு, கள்வன், நவின்றான்.

2. **எதிர்ச் சொற்கள்:**

இரவு × பகல்
முன்னாள் × பின்னாள்
நீதி × அநீதி

2. **தெரிந்துகொள்—ஒரே பொருள் குறிப்பன**

| (1) | (2) | (3) |
|---|---|---|
| வேதியன் | வேந்தன் | கூறினார் |
| மறையவன் | மன்னன் | புகன்றார் |
| அந்தணன் | அரசன் | நவின்றார் |
| பிராமணன் | | சொன்னார் |

## இலக்கணம்

இக்குறி முற்றுப்புள்ளி. இது வாக்கியம் முடிந்து விட்டதைக் குறிக்கிறது. ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் இக்குறி யிடவேண்டும். இப்புள்ளி யிட்ட இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தி, மேலே தொடர்ந்து படிக்கவேண்டும். ஒரு முறை கண்ணிமைக்கும் நேரம், ஒரு மாத்திரை எனப்படும்.

(உ - ம்.) பாண்டிய மன்னர் ஆட்சிபுரிந்து வந்தனர்.

! இக் குறி உணர்ச்சிக் குறி. இது வியப்பு, அச்சம், இரக்கம், சினம் முதலியவற்றைக் குறிக்கவேண்டிய இடங்களில் அமைக்க வேண்டும்.

(உ - ம்) ஐயோ ! இது சிரந்தையின் குரல் அல்லவா !

? இக் குறி வினாக்குறி. இது வினா வாக்கியங்களின் இறுதியில் அமைக்கப்படும்.

(உ - ம்.) கதவைத் தட்டிய கயவன் யார் ?

, இக் குறி காற்புள்ளி. இது ஒரே வாக்கியத்தில் வரும் சொற்களைத் தனித் தனியே பிரித்துக் காட்டும் பொருட்டு அமைக்கப்படும். இக்குறி உள்ள இடங்களில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்க வேண்டும்.

(உ - ம்.) அத்தெருவிலுள்ள யாவருக்கும் அரசனாணையால் அரிசி, பருப்பு, நெய், எண்ணெய், காய்கறிகள் ஆகிய உணவுப் பொருள்கள் குறைவின்றி அளித்து வரப்பட்டன.

; இக் குறி அரைப்புள்ளி. ஒரே எழுவாய் பல வினைமுற்றுக்களைக் கொண்டு முடியும்போது, முன்னுள்ள வினைமுற்றின் கடைசியில் இக்குறியை இட வேண்டும். இக்குறியுள்ள இடத்தில் இரண்டு மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்க வேண்டும்.


(உ - ம்.) பாணன் அதை வாங்கிக்கொள்ள மறுத்தான் ; கோபத்தோடு வெளியேறினன்.

: இது முக்காற்புள்ளி. ஒரு வாக்கியத்தின் கருத்தை, தொடர்ந்து வரும் வாக்கியமோ அல்லது வாக்கியங்களோ விளக்கிக் காட்டும்போது இக்குறி இட வேண்டும். இக்குறியிட்ட இடத்தில் மூன்று மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்கவேண்டும்.

(உ - ம்.) அந்தணன் தன் மனைவிக்கு ஆறுதல் மொழிகள் கூறலானான்: "நீ பெண். உன்னால் வழி நடக்க இயலாது. ஆதலால், நீ இங்கேயே இரு," என்று அந்தணன் புகன்றான்.

# 5. நூல் நிலையம்

1. நூல் நிலையம் என்பது பலவகை நூல்களைக் கொண்ட இடமாகும். நூல் நிலையத்தில் பல துறைகள் பற்றிய நூல்கள் காணப்படும். நூல் நிலையத்தின் உறுப்பினராக உள்ளவர்கள் அந் நிலையத்திலுள்ள நூல்களைப் பெற்றுப் படிக்கலாம். பொது நூல் நிலையமாயின் எல்லோரும் சென்று அங்குள்ள நூல்களைப் பெற்றுப் படிக்கலாம். ஒவ்



சென்னை கன்னிமரா நூலகம்—படிக்கும் கூடம்

வொருவரும் எல்லா நூல்களையும் சொந்தமாக வாங்கி வாசிப்பது இயலாது. ஆதலின், பொது நூல்நிலையங்கள் ஒவ்வோர் ஊரிலும் இருத்தல் இன்றியமையாதது.

2. நூல் நிலையத்தில் இலக்கிய இலக்கண நூல்கள், சிறு கதைகள், நவீனங்கள், வரலாற்று நூல்கள், தாவர நூல்கள் போன்ற பல துறை

பற்றிய நூல்களும் இருக்கும். அங்கு, ஒவ்வொரு கலையைப் பற்றிய நூல்களும் முறைப்படுத்தப் பட்டு, ஒழுங்காக எண் இடப்பெற்று, வரிசையாக அடுக்கப் பெற்றிருக்கும். புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ள இடங்கள், கண்ணுடி பீரோக்கள் முதலியன மிகவும் தூய்மையாய் இருக்கும். மக்கள் அமர்ந்து படிப்பதற்கு வசதியாகப் பல மேசைகளும் அவற்றைச் சுற்றிலும் நாற்காலிகளும் இடப்பெற்றிருக்கும்.

3. சிற்றூர்களிலுள்ள சிறிய நூல் நிலையங்களில் அமர்ந்து வாசிப்பதற்கு வசதி இராது. அங்குள்ளவர்கள் நூல்களைத் தம் பெயரில் பெற்றுச் சென்று வீட்டில் வாசிப்பார்கள். அவர்கள் குறித்த காலத்திற்குள் அவற்றைத் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு நூல்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

4. ஒவ்வொரு நூல் நிலையத்திலும் நூல்களின் பெயர்கள் முறையாக அச்சிடப்பெற்ற பட்டியல் ஒன்று இருக்கும். அதில் நூலின் எண், நூற் பெயர், எழுதியவர் பெயர் முதலியன காணப்படும். அப்பட்டியலின் உதவியால் ஒவ்வொருவரும் தாம் பெற விரும்பும் நூல்களை எளிதில் தேர்ந்துகொள்ளலாம்.

5. மேனுட்டு மக்கள் தமது நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் நூல் நிலையங்கள் ஏற்படுத்தியிருக்கிறுர்கள். அரசாங்கத்தாரும், செல்வர்களும் பெருந்தொகை செலவிட்டு ஆயிரக்கணக்கான நூல்களை வாங்கி, நூல் நிலையங்களுக்கு நன்கொடையாக அளிக்கிறுர்கள். இவ்வாறு நூல் நிலையங்கள் எங்கும் பரவி யிருப்பதால், அந்நாட்டு

மக்கள் கல்வியிலும், தொழில் துறைகளிலும் நன்கு தேர்ச்சிபெற்றவராய் விளங்குகின்றனர்.

6. நூல் நிலையங்கள் பல்வேறு துறைகளில் திறமை வாய்ந்தவர்கள் இயற்றிய நூல்களை நமக்கு அளிக்கின்றன. அத்தகைய நூல்கள் நமது அறிவைப் பெருக்க உதவுவன. ஒவ்வொருவரும் அவரவர் அறிவுக்கும் தொழிலுக்கும் ஏற்ற நூல்களை நூல் நிலையங்களிலிருந்து பெற்றுப் படிப்பதால் முன்னேற்ற மடையலாம்.

7. எனவே, நமது அறிவையும், உள்ளத்தையும், வாழ்க்கையையும், உலக அறிவையும், ஒழுக்க முறைகளையும் பெருக்குவது நூல் நிலையங்கள். இத்தகைய நூல் நிலையங்கள் நம் நாடெங்கும் நிறுவப்படவேண்டும். அவற்றிலிருந்து நூல்களைப் பெற்றுப் படித்து, நம் நாட்டு மக்கள் பல துறைகளிலும் முன்னேற்றம் அடைய வேண்டும்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| நூல்நிலையம் | கண்ணாடி | மேனாட்டு |
| பல துறைகள் | பீரோக்கள் | பெருந்தொகை |
| உறுப்பினர் | தூய்மை | பரவி |
| சொந்தமாக | நூற்பெயர் | அத்தகைய |
| நவீனங்கள் | தேர்ந்து | பெருக்குவது |
| முறைப்படுத்தி | உள்ளத்தை | பட்டியல் |

## பயிற்சி

I. விடை கூறுக :

1. நூல் நிலையம் என்பது என்ன?

2. நூல் நிலையம் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கும்?

3. சிற்றூரிலுள்ள நூல் நிலையங்களில் மக்கள் எவ்வாறு நூலைப் பெற்றுப் படிப்பார்கள்?

4. 'நூல் நிலையப் பட்டியல்' என்றால் என்ன? அதில் என்னென்ன காணப்படும்?

5. மேனாட்டு மக்கள் நூல் நிலையங்களால் பெற்றுள்ள பயன் யாது?

6. நூல் நிலையங்களால் நாம் அடையும் பயன்கள் யாவை?

II. கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் ஏற்ற நிறுத்தக் குறிகள் அமைத்து எழுதுக:

அங்கு | ஒவ்வொரு கலையைப் பற்றிய நூல்களும் முறைப்படுத்தப்பட்டு | ஒழுங்காக எண் இடப்பெற்று | வரிசையாக அடுக்கப் பெற்றிருக்கும் | புத்தகங்கள் பீரோ | அலமாரி | பெட்டி முதலியவைகளில் வைக்கப் பெற்றிருக்கும் | நீ ஏதாவது நூல் நிலையத்தைப் பார்த்திருக்கிறாயா | அறிவியல் நூல்களைப் படிப்பது: எவ்வளவு இன்பந் தருகிறது |

III. பின்வரும் வாக்கியங்களிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக:

1. வேடந் ஆகாறம் அறுந்திநான்.

2. உருப்பினறாக உள்ளவர்கள் நூல்களைப் பெரலாம்.

3. அன்தணரும் மற்றவர்களும் வியப்பும் துயறமும் அடைந்தனர்.

4. அவன் ஒரு கழ்வனாகவே இருத்தல் வேண்டும்.

## இலக்கணம்

1. **செல்வர்கள்** நூல் நிலையத்திற்கு **நன்கொடையளித்தார்கள்.** இந்த வாக்கியம் ஒரு செய்தியைத் தெரிவிக்கிறது. இது **செய்தி வாக்கியம்** என்று சொல்லப்படும்.


2. **நமது நாட்டில் நன்கொடைகள் அளிக்கிறார்களா ?** இந்த வாக்கியம் ஒரு கேள்வியை (வினாவை)க்

குறிக்கிறது. இது **வினு வாக்கியம்** என்று சொல்லப் படும்.

3. **மேனுட்டு மக்கள் தொழில் துறையில் நன்கு தேர்ச்சி பெற்று விளங்குகிறுர்கள்.** இந்த வாக்கியத்தி லுள்ள வினைமுற்று, தொழில் நிகழ்ச்சியைக் குறிக்கின் றது. இது **உடன் பாட்டு வாக்கியம்** என்று சொல்லப் படும். **விளங்குகிறுர்கள்** என்னும் வினை முற்று **உடன்பாட்டு வினை**

4. **நம் நாட்டுக் கிராம மக்கள் நவீன விவசாயத் துறை யில் தேர்ச்சி பெற்று விளங்க வில்லை.** இந்த வாக்கியத்தி லுள்ள வினைமுற்று, தொழில் நிகழாமையைக் காட்டு கிறது. இது **எதிர்மறை வாக்கியம்** என்று சொல்லப்படும். **விளங்கவில்லை** என்னும் வினைமுற்று **எதிர்மறை வினை.**

# 6. கருணை வள்ளல்



1. உலகில் பல மதங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்து மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாம் மதம், புத்த மதம் ஆகியவை முக்கியமான மதங்களாம். இவற்றுள் கிறஸ்தவ மதத்தைத் தோற்றுவித்தவர் இயேசு கிறிஸ்து என்னும் பெரியார் ஆவார். அவர் இற்றைக்கு 1955 ஆண்டுகளுக்கு முன் தோன்றினார்.

2. ஆசியாக் கண்டத்தில் பாலஸ்தீன நாட்டில் நாசரேத் என்னும் சிற்றூரில் யோசேப்பு என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார்; அவர் மனைவியார் மேரி அம்மையார். ஒரு நாள் மேரியம்மையார் முன் தேவதூதன் ஒருவன் தோன்றி, "மரியாளே! நீ தேவன் அருளைப் பெற்றவள். தேவனுடைய பரிசுத்த ஆவி உன்மேல் வந்து நிழலிடும். நீ ஒரு திருக்குமாரனைப் பெறுவாய். அக்குழந்தையே தேவ குமாரர். அவருடைய இராச்சியத்திற்கு முடிவே கிடையாது," என்று கூறி மறைந்தது.

3. சில மாதங்கள் சென்றதும் யோசேப்பு, தம் மனைவியை அழைத்துக்கொண்டு பெத்லேகம் என்னும் ஊருக்குச் சென்று கொண்டிருந்தார். கருவுற்றிருந்த மேரியம்மையார் இடை வழியிலே களைப்புற்றார்; அங்குக் காணப்பட்ட ஒரு மாட்டுக் கொட்டிலில் தங்கினார். அந்த இடத்தில் அவ்வம்மையார் தேவதூதன் குறிப்பிட்டவாறு ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள். தேவகுமாரர் பிறப்பை அறிவிக்க, வானத்தில் பல அதிசயங்கள் தோன்றின; ஒரு புதிய நட்சத்திரம் தோன்றி ஒளி வீசி நின்றது. தேவ குமாரர் பிறப்பை உணர்ந்த ஞானிகள் பலர் ஒளி காட்டும் வழியே சென்று இளம்பாலகனைக் கண்டு மகிழ்ந்தார்கள். அக்குழந்தைக்கு இயேசு நாதர் என்று பெயரிட்டார்கள்.

4. யோசேப்பும் மேரியம்மையாரும் இயேசுவின் மகிமையையும் பெருமையையும் உணர்ந்து அவரைக் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்து வளர்த்து வந்தார்கள். இளம் பருவத்திலேயே பிறரிடம் அன்பு பாராட்டுதல், மெய் பேசுதல், கீழ்ப் படிதல் முதலிய எல்லா நற்குணங்களும் இயேசு

விடம் அமைந்திருந்தன. இயேசு பெருமான் முப்பது ஆண்டுகள் தம் பெற்ரோருடன் இருந்து வாழ்ந்துவந்தார். அதன்பின், மெய்ம் மறையை உலகத்தாருக்கு உணர்த்த வேண்டி, அவர் நாச ரேத் என்னும் தமது ஊரினின்று வெளிக்கிளம் பினுர்.

5. இயேசு நாதர் அழகு மிகுந்த தோற்றம் படைத்தவர்; அருள் ஒளி வீசும் முகமுடையவர்; கருணைபொழியும் கண்ணேக்கு உடையவர்; இன் சொல் பேசும் இயல்பு வாய்ந்தவர்; ஏழைகளைக் கண்டு இரங்கும் இளகிய உள்ளம் உடையவர். தேவகுமாரனுகிய இயேசுநாதர் தெய்வத்தன்மை பொருந்தியவர். அவர் பல நோயாளிகளின் தீராப் பிணிகளைத் தீர்த்தார்; முடவர்கள் திரும்பவும் கால் பெறச் செய்தார்; குருடர்கள் இழந்த பார்வையை மீண்டும் பெறச் செய்தார்; இறந்தவர்களைப் பிழைப் பித்தார். இவ்வரிய செயல்களைக் கண்ட மக்கள் எல்லோரும் "மக்களைத் துன்பக் கடலிலிருந்து மீட்டு இன்பக்கரை ஏற்ற வந்த உலக ரட்சகர் இவரே" என்று இயேசுவைப் போற்றினுர்கள்.

6. இயேசு நாதர் பல் வேறிடங்களுக்குச் சென்ருர். அவர் சென்ற இடங்கள்தோறும் திரள் திரளான மக்கள் அவரை வணங்கினுர்கள்; அவர் மொழியும் மெய்ம் மறைகளைக் கேட்டார்கள்; அவர் கொள்கைகளை ஆதரித்தார்கள்; அவர் கூறும் நல்லுரைகளின்படி ஒழுகலானுர்கள். இயேசு நாதர் தம்மைப் பின்பற்றியவர்களில் பன்னிருவரைத் தம் சீடர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இயேசு நாதர் தம் சீடர்களுடன் பல ஊர்களுக்கும்

சென்று பல்லாயிரக் கணக்கான மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தார்.

7. இயேசுவின் பெருமையைக் கண்ட யூதமத குருமார்களுக்கு அவர்மேல் பொருமை உண்டாயிற்று. அவர்கள் இயேசுவை வெறுக்கத் தொடங்கினார்கள் ; இயேசுவைத் தந்திரமாகக் கொன்றுவிட வேண்டும் என்று முடிவு செய்தார்கள். இயேசுவின் சீடர்களில் ஒருவரான யூதாஸ் என்பவர் பகைவர்களுக்கு உடந்தையாக இருந்து தம் குருநாதரை அவர்களுக்குக் காட்டிக் கொடுத்தார். பகைவர்கள் இயேசுவை ரோம அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்கள்.

8. ரோம அதிகாரிகள் இயேசுவைச் சிறையிலடைத்துத் துன்புறுதினார்கள். இறுதியில் அவர்கள் இயேசுவைச் சிலுவையில் நிறுத்தி அவர் உடலில் ஆணிவைத்து அறைந்தார்கள். கருணை வள்ளலான இயேசு நாதர் உடல் முழுதும் குருதி வழிய உயிர் பிரிந்து கொண்டிருக்கும் பொழுது கூட, "பரம பிதாவே, இவர்கள் அறியாமற் செய்யும் குற்றத்தை மன்னித்தருள்வீர்கள் !" என்று தம் பகைவர்களுக்காக ஆண்டவனை வேண்டிக் கொண்டார். அவருடைய தூய உயிர் உடலிலிருந்து பிரிந்தது.

9. இயேசுவின் சீடர்கள், உயிர் பிரிந்த தம் குருநாதரின் உடலைக் கல்லறையில் வைத்துப் புதைத்தார்கள். அது கடந்த மூன்றும் நாள் இயேசு நாதர் உயிரோடு எழுந்தார் ; தம் சீடர்களுக்குக் காட்சியளித்து, நாற்பது நாட்கள் அவர்களுடனிருந்து, அவர்களுக்கு நல்லுரைகள் நவின்று மீண்டும் மறைந்தார்.

10. அதன் பின்னர், அவர் சீடர்கள் பல நாடுகட்கும் சென்று இயேசுவின் நல்லுரைகளை மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். அச்சீடர்களுள் ஒருவராகிய தாமஸ் என்பார் நம் இந்திய நாட்டிற்கு வந்து தொண்டாற்றினர். கருணை வள்ளலான இயேசு கிறிஸ்துவின் கொள்கைகளைப் பின்பற்றுவர்கள் கிறிஸ்தவர்கள் எனப்படுவார்கள். கிறிஸ்து பெருமான் தோன்றிய வருடத்திலிருந்து கிறிஸ்து சகாப்தம் கணக்கிடப்பட்டு வருகின்றது.

### சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| இஸ்லாம் | மீட்க | பரிசுத்த |
| கண்டம் | குருதி | நல்லுரை |
| பாலகன் | கல்லறை | சகாப்தம் |
| மகிமை | நீத்தார் | இற்றைக்கு |
| பெருமான் | நவின்று | தூய |
| கருணை | இயல்பு | தேவதூதன் |
| தெரிந்து | நட்சத்திரம் | தேவகுமாரர் |
| உடந்தை | பாதுகாத்து | இராச்சியம் |
| சிலுவை | மெய்ம்மறை | கருவுற்று |
| அருள் | கொட்டில் | ஈன்றெடுத்தார் |
| ஆவி | ரட்சகர் | குறிப்பிட்ட |
| ஞானி | கவர்ந்தார் | கண்ணுக்கு |

### பயிற்சி

I. விடை கூறுக :

1. சில முக்கியமான மாதங்களின் பெயர்களைக் கூறுக.

2. தேவதூதன் மேரியம்மையாரிடம் கூறியன யாவை ?

3. இயேசு நாதர் பிறந்தபொழுது நேர்ந்த அதிசயங்கள் யாவை ?

4. இயேசு நாதர் தோற்றத்தையும் இயல்பையும் கூறுக.

5. இயேசு நாதர் செய்த அரிய செயல்கள் யாவை ?

6. இயேசு நாதர் எவ்வாறு பகைவரிடம் சிக்கினார் ?

7. பகைவர்கள் அவருக்கு என்ன கொடுமை இழைத்தார்கள் ?

8. பகைவர்களுக்காக இயேசு நாதர் ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டது என்ன ?

9. இயேசு நாதர் மறைவுக்குப் பிறகு சீடர்கள் என்ன செய்தார்கள் ?

II. தெரிந்து கொள் :

புத்தமதத்தைத் தோற்றுவித்தவர் **கௌதம புத்தர்.**
இஸ்லாம் மதத்தை வளர்த்தவர் **முகமது நபி.**

III. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

கண்ணும் கருத்துமாக ; நற்குண நற்செயல்கள் ; இளம்பருவத்திலே ; அரிய செயல் ; தெரிந்தெடுத்து ; உடந்தை; துன்புறுத்தினார்கள்.

IV. 1. சேர்த்தெழுதுக :

| | |
|---|---|
| கரு + உற்று + இருந்த | இளம் + பாலகன் |
| மெய் + மறை | களைப்பு + உற்றார் |
| சிறையில் + அடைத்து | தெரிந்து + எடுத்து |

2. பிரித்தெழுதுக :

| | |
|---|---|
| பெயரிட்டார்கள் | நல்லுரை |
| ஈன்றெடுத்தாள் | நிழலிடும் |
| கண்ணேக்கு | கல்லறை |

## இலக்கணம்

I. **செடி வளர்ந்தது.** இதில் செடி பெயர்ச்சொல்; **வளர்ந்தது** வினைச்சொல்.

பெயர்ச் சொற்கள் ஆறு வகைப்படும். அவை: பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப் பெயர், தொழிற்பெயர் என்பனவாம்.

செடி, மனிதன் — பொருட் பெயர்.
வீடு, சிற்றூர் — இடப் பெயர்.
மாலை, இரவு — காலப் பெயர்.
கிளை, விரல் — சினைப் பெயர்.
நன்மை, அன்பு — பண்புப் பெயர்.
ஆடல், பாடல் — தொழிற் பெயர்.

II. கீழ்க்காணும் பெயர்ச் சொற்களின் வகைகளைக் குறிப்பிடுக.

கொடி, நகரம், மாதம், மாளிகை, நூல்நிலையம், காது, வேடன், துன்பம், நட்சத்திரம், மகிழ்ச்சி, பொறுமை, காலை, மறைதல், கொட்டில், தோன்றுதல்.

# 7. தேனீ




1. இனிப்பான தின்பண்டங்களையே மனிதர் மிகவும் விரும்புகின்றனர். தேன் ஓர் இனிப்பான பொருள். அது பூக்களிலிருந்து கிடைக்கிறது என்பது வியப்பிற்குரியது அல்லவா? ஆயினும், இது உண்மையே. பூக்களினின்றும் தேன் எவ்வாறு கிடைக்கிறது என்பதை இப்பொழுது தெரிந்து கொள்ளலாம்.

2. மரங்களிலும் செடிகளிலும் காணப்படும் பூக்களைச் சுற்றித் தேனீக்கள் பறந்து கொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். தேனீக்கள் ஒரு வகை ஈக்கள். பூக்களின் உள்ளே இனிப்பான ஒரு வகை இரசம் நிறைந்துள்ளது. பூக்களின் அழகிய நிறங்களையும் நறுமணத்தையும் கண்டு தேனீக்கள் அவற்றை நாடிச் செல்கின்றன. தேனீக்களின் வாயில் நீண்ட குழல் போன்ற ஒரு நாக்கு உள்ளது. பூக்களினுள்ளே தேனீக்கள் அந்நாக்கினைச் செலுத்தி, அந்த இரசத்தைச் சேகரிக்கின்றன.

தேனீக்கள் தம் கூடுகளுக்குச் செல்வதற்குள் அந்த இரசம் தேனாக மாறுகிறது. தேனீக்கள் கூட்டை அடைந்ததும், தேனடையில் உள்ள அறைகளில் அத்தேனை நிரப்புகின்றன. இதுவே நமக்குப் பயன் படும் தேன் ஆகும்.

3. சில தேனீக்கள் காடுகளில் உயரமான மரக்கிளைகளில் கூடு கட்டும். அக்கூடு பெரிதாய் இருக்கும். அதற்குத் தேனடை என்பது பெயர். மக்கள் தீப்பந்தங்களைக்கொண்டு தேனீக்களை விரட்டிவிட்டு, அடையை எடுத்துப் பிழிந்து, தேன் எடுத்து, அதனைப் பயன்படுத்துவார்கள். மரக்கிளை களிலும், மரப் பொந்துகளிலும், வீட்டுக் கூரைகளி லும், தேனீக்கள் கூடுகட்டும்.

4. ஒவ்வொரு தேன் கூட்டிலும் மூன்று வகைத் தேனீக்கள் உண்டு. அவை இராணி ஈ, ஆண் ஈ, வேலைக்கார ஈ என்பன. ஒரு கூட்டில் ஒரே




1. இராணி ஈ 2. ஆண் ஈ 3. வேலைக்கார ஈ

இராணி ஈ மட்டுந்தான் இருக்கும். அதுவே தாய்த் தேனீ. அக்கூட்டிலுள்ள எல்லா ஈக்களுக்கும் தாய்த் தேனீ தலைமை வகிக்கும். ஒவ்வொரு கூட் டிலும் பல்லாயிரக் கணக்கான வேலைக்கார ஈக்கள் இருக்கும். அவற்றினிடையே சில ஆண் ஈக்களும்

இருக்கும். அவை சோம்பேறி ஈக்கள். அவை ஒரு வேலையும் செய்யமாட்டா. அவை கூட்டிலுள்ள தேனைக் குடித்துக் கொண்டு, யாதொரு பொறுப்பும் இன்றிக் காலங் கழித்து வரும்.

5. ஓர் இராணி ஈ நூற்றுக்கணக்கான முட்டைகள் இடும். முட்டைகளிலிருந்து முதலில் புழுக்கள் வெளிப்படும். 'அப்புழுக்களை வேலைக்கார ஈக்கள் கருத்தாக வளர்க்கும். சில நாட்களில் அவைகளுக்குச் சிறகுகள் முளைக்கும். பின்பு அவை அறையை விட்டு வெளிவரும். வேலைக்கார ஈக்கள் நெடுந் தூரம் வெளியில் பறந்து சென்று, பூக்களிலிருந்து தேனைக் கொண்டு வந்து, கூட்டிலுள்ள சிற்றறைகளில் சேர்க்கும்.

6. தேன் கூடு மெழுகினால் ஆனது. மெழுகு தேனீக்களின் உடலிலிருந்தே உண்டாகிறது. தேன் கூட்டில் பல சிறு அறைகள் இருக்கும். கூட்டின் அடிப்புறத்திலுள்ள பெரிய அறையில் இராணி ஈ வசிக்கும்.

7. செயற்கை முறையிலும் தேன் சேகரிப்பதுண்டு. தேனீக்கள் இயற்கையாகக் கட்டிய மெழுகு அடைகளைச் சேதம் செய்யாமல் எடுத்து, ஒரு பெட்டியில் வைத்தால், தேனீக்கள் அந்த மணத்தினால் தூண்டப்பட்டு, அப்பெட்டியினுள்ளே குடி கொள்ளும். அப்பெட்டி இரண்டு அடுக்குகளாய் இருக்கவேண்டும். மேலடுக்கிலுள்ள அடைகளில் தேன் சேகரிக்கப்படும்; கீழ்ப்பகுதியில் முட்டைகளும் குஞ்சுகளும் இருக்கும். ஈக்கள் உள்ளே செல்லவும் வெளியே வரவும் அப்பெட்டியில் பல வட்டமான துவாரங்கள் இருக்கும். மேல் அடுக்கைத் தனியே எடுத்து, அதிலுள்ள தேனை

மட்டும் சேகரிக்கலாம். ஈக்களாவது முட்டைகளாவது சேதம் ஆகாமல், தேன் அடைகளைச் சுழலும் எந்திரத்தில் வைத்துச் சுழற்றினால் தேன் வெளி வரும்.

8. தேன் உணவாகவும் மருந்தாகவும் பயன் படுகிறது. தேன் பல மருந்துகளுக்கு இன்றியமையாத சேர்க்கைப் பொருளாகும். அது உடம்புக்கு மிகுந்த ஆரோக்கியத்தைக் கொடுக்க வல்லது. தேனும் தினைமாவும் பண்டைத் தமிழ் நாட்டு வேடுவர்களின் உணவாகும். மரச்சாமான்களுக்கு மெருகிடத் தேன்மெழுகு பயன்படுகிறது.

9. தேனீ வளர்த்தல் இலாபகரமான தொழிலாகும். காடும் மலையும் சூழ்ந்துள்ள இடங்களில் உள்ளவர்கள், இத்தொழிலின் வாயிலாக வருவாய் பெறலாம். பண்ணைகளில் இதை ஓர் உதவித் தொழிலாக மேற்கொள்ளலாம். இத்தொழிலை மிகக் குறைந்த செலவில் செய்யலாம்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| உரியது | பொறுப்பு | சேர்க்கை |
| இரசம் | இன்றி | தினை |
| நறுமணம் | சிறகு | ஆரோக்கியம் |
| நாடி | சிற்றறை | மெருகு |
| செலுத்தி | மெழுகு | இலாபம் |
| தேனடை | செயற்கை | வருவாய் |
| விரட்டி | அடுக்கு | துவாரம் |
| பிழிந்து | சுழலும் | பண்ணை |
| இராணி | எந்திரம் | பயன் |
| யாதொரு | குடி | வேடுவர் |

## பயிற்சி

**I. விடை கூறுக :**

1. தேன் கூடுகளை எங்கெங்கே காணலாம் ?
2. இராணி ஈயின் வேலை என்ன ?
3. தேன் சேகரிக்கும் ஈக்கள் எவை ?
4. ஆண் ஈக்கள் வேலை யாது ?
5. தேன் எவ்வாறு சேகரிக்கப்படுகிறது ?
6. தேன் எவ்வாறு பயன்படுகிறது ?
7. செயற்கை முறையில் தேன் எவ்வாறு சேகரிக்கப்படுகிறது ?

II. சரியான வாக்கியங்களுக்கு எதிரில் ✓ 'குறியும், தவறானவைகளுக்கு எதிரில் × குறியும் இடுக.

1. பூக்களிலிருந்து தேன் உண்டாகிறது.
2. ஒவ்வொரு கூட்டிலும் மூன்று வகைத் தேனீக்கள் உண்டு.
3. ஒரு கூட்டில் பல இராணி ஈக்கள் இருக்கும்.
4. தேன்கூடு மெழுகினால் ஆனது.
5. தேன் ஒரு நஞ்சுப் பொருள்.
6. தேனீ வளர்ப்பதற்கு மிகுந்த செலவாகும்.

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மெழுகு—— ——உண்டாகிறது.
2. தேனீக்கள் வாயில்—— ——போன்ற ஒரு நாக்கு உள்ளது.
3. புழுக்களை ——ஈக்கள் கருத்தாக வளர்க்கும்
4. ஓர் இராணி—— ——இடும்.

## இலக்கணம்

1. **திணை** : உயர் திணை, அஃறிணை என இரு வகைப்படும்.

**உயர்திணை:** மக்கள், தேவர் ஆகியோரது பெயர்கள். (உ - ம்.) முருகன், கமலம், இந்திரன்.

அஃறிணை: உயர்திணை யல்லாத மற்ற உயிர்ப் பிராணிகளின் பெயர்களும், உயிரில்லாத பொருள்களின் பெயர்களுமாம்.

(உ - ம்) மாடு, தேனீ, மரம், பலகை.


2. பால்: ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால் எனப் பால் ஐவகைப்படும். அவற்றுள் முதல் மூன்றும் உயர்திணைக் குரியன; மற்றிரண்டும் அஃறிணைக் குரியன.

| | |
|---|---|
| ஆணைக் குறிப்பது ஆண்பால்<br>பெண்ணைக் குறிப்பது பெண்பால்<br>ஆண் பெண்களில் பலரைக் குறிப்பது பலர்பால் | உயர்திணை |
| அஃறிணையில் ஒன்றைக் குறிப்பது ஒன்றன் பால்<br>அதற்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பலவின்பால் | அஃறிணை |

இயேசுநாதர், பாண்டியன்—உயர்திணை, ஆண்பால்.
பெரியம்மை, அரசி —உயர்திணை, பெண்பால்.
மக்கள், மனிதர்கள் —உயர்திணை, பலர்பால்.
மாடு, செடி —அஃறிணை, ஒன்றன்பால்.
மாடுகள், செடிகள் —அஃறிணை, பலவின்பால்.

3. திணை, பால் குறிப்பிடுக:


| | | |
|---|---|---|
| அந்தணன் | மன்னன் | எலிகள் |
| குழல் | மனைவி | பாணன் |
| குழந்தைகள் | மலர் | குபேரன் |
| கோவில் | யோசேப்பு | குதிரை |


1
2
3
4
5
6
7
8

# 8. வேளாண்மை

1. ‘ உலக மக்கள் பல தொழில்களைச் செய்து வருகிறார்கள் ; ஆனால் எல்லாத் தொழில்களிலும் சிறந்தது உழுது உண்டு வாழ்வதே ஆகும்’ எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். வேளாண்மை என்பது பயிர்த்தொழில். பயிர்த்தொழில் செய்பவர் வேளாளர் எனப்படுவர். உணவும் உடையும் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. இவற்றைப் பயிர்த்தொழில் செய்துதான் பெறக்கூடும்.

2. வேளாண்மை செய்பவர்கள் உலகத்தார்க்குப் பேருபகாரிகள் ஆவார்கள். அவர்கள் விளை பொருள்களை உற்பத்தி செய்தாற்றான் மக்களுக்கு உணவுப் பொருள் கிடைக்கும். நமது நாட்டில்



பெரும்பாலார் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஆயினும், உழைப்புக்குத் தகுந்த பலன் ஏற்படுவதில்லை. ஏனெனில், பண்டை முறையிலேயே இன்றும் இத்தொழில் நடைபெற்று வருகிறது. நிலத்தை ஆழமாக உழுவதால் பலன் அதிகம் காணும். ஆனால் நம் கலப்பைகள்

நிலத்தை மேலோடு சிறிது கீறித்தான் விடுகின் றன. நூதன எந்திர சாதனங்களாகிய இரும்புக் கலப்பைகளைக் கொண்டு நிலத்தை ஆழமாக உழ வேண்டும். 'அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்,' என்னும் பழமொழி இவ்வுண்மையை வற் புறுத்துகின்றது.

3. மேலும், நிலங்களுக்குச் சிறந்த எருக் களை இடவேண்டும். சாம்பல், கால்நடைகளின் சாணம், குப்பைகள், பசுந்தழைகள் முதலியன சிறந்த எருக்கள் ஆகும். ஒவ்வொரு வீட்டிலும் எருக்குழிகளை அமைத்து, அவற்றில் எருவைக் கொட்டி வைக்க வேண்டும். இவற்றில் சேமிக்கப் படும் எருவை அக்காலங்களில் எடுத்து நிலங் களில் சேர்க்க வேண்டும். பயிர்கள் எருவின் சாரத்தைத் தம் வேர்களின் வாயிலாகக் கவர்ந்து கொள்ளும். செயற்கை எருக்களையும் உபயோகிக் கலாம். இவை இரசாயன முறையில் தயார் செய் யப்பட்டவை.

4. நிலத்தில் விதைக்கும் விதைகளும் சிறந்த வைகளாய் இருக்க வேண்டும். சிறந்த விதை களைச் சேமித்து வைப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அறுவடைக் காலத்தில் நன்றாக முற்றின மணிகளைச் சேகரிக்கவேண்டும். விதைக் கும் காலத்தில் அவற்றை விதைக்க வேண்டும். சிறந்த எருக்களும் சிறந்த விதைகளும் நல்ல பலனை அளிக்கும்.

5. காலம் தவறாமல் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும் ; உரிய காலத்தில் களை பிடுங்க வேண்டும் ; தரிசான நிலங்களை உழுது, உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும் ; காய்

கறிச் செடிகளையும் பழமரங்களையும் வளர்க்க வேண்டும்.

6. நமது நாட்டில் இப்பொழுது மக்களுக்குப் போதுமான உணவுப் பொருள்கள் உற்பத்தியாவதில்லை. வெளிநாடுகளிலிருந்து அதிக விலைக்குத் தானியங்களை வாங்குகிறோம். இதனால், நமக்குச் செலவு அதிகம். ஆதலால், ஒற்றுமையாக உழைத்துத் தேவைக்குத் தகுந்த விளைபொருள்களை உண்டாக்க வேண்டும். வேளாண்மைத் தொழில் முன்னேற்றம் அடைவதற்குத் தேவையான வழிகளை நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். வேளாண்மையைப் பெருக்கினால், உணவு உற்பத்தி பெருகும் ; நாடு செழிக்கும் ; நாமும் நலம் பெறுவோம்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| வேளாண்மை | சாம்பல் | இரசாயனம் |
| பேருபகாரி | சாணம் | பசுந்தழை |
| தகுந்த | குப்பை | கவனம் |
| ஏனெனில் | தயார் | முன்னேற்றம் |
| சாதனம் | செலவு | ஆராய்ச்சி |
| கீறி | கொட்டி | கவர்ந்து |
| நூதன | சாரம் | தரிசான |

## பயிற்சி

I. விடை கூறுக:

1. *தொழில்களில் சிறந்தது எது ? ஏன் ?*
2. *'அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்'—இதை விளக்குக.*
3. *எருக்களைச் சேமிப்பது எவ்வாறு ?*
4. *விதைகள் எப்படி இருக்கவேண்டும் ?*
5. *உணவு உற்பத்தி எப்பொழுது அதிகரிக்கும் ?*

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. பயிர்த் தொழில் செய்பவர்——எனப்படுவர்.
2. வேளாண்மை——உலகத்தாருக்குப் —— ஆவார்கள்.
3. செயற்கை எருக்கள்—— முறையில் தயார் செய்யப்பட்டவை.
4. சிறந்த —— சிறந்த —— நல்ல பலனை அளிக்கும்.
5. அதிக விலைக்குத் தானியங்கள் ——.

## இலக்கணம்

1. எண் என்பது எண்ணிக்கை

எண் இருவகைப்படும்: (1) **ஒருமை**. (2) **பன்மை**. ஒரு பொருளைக் குறிப்பது **ஒருமை எண்**. ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது **பன்மை எண்**.

தெரு, கடிதம், எரு, தழை, விதை—ஒருமை எண்.

தெருக்கள், கடிதங்கள், எருக்கள், தழைகள், விதைகள்—பன்மை எண்.

2. அரசன் — உயர்திணை — ஆண்பால். — ஒருமை எண்.

மனைவி — உயர்திணை — பெண்பால் — ஒருமை எண்.


மக்கள் — உயர்திணை — பலர்பால் — பன்மை எண்.

காய் — அஃறிணை — ஒன்றன்பால்— ஒருமை எண்.

தழைகள் — அஃறிணை — பலவின்பால் — பன்மை எண்.

3. **திணை, பால், எண், குறிப்பிடுக:**

அரசர், மலைகள், ஆடு, பகைவர்,
கிளி, புறாக்கள், வேடன், காடு.



# 9. தமிழர் திருநாள்



1. தமிழ் நாட்டில் நாம் பல பண்டிகைகளைக் கொண்டாடுகிறோம். தீபாவளி, நவராத்திரி முதலிய பண்டிகைகள் இந்திய நாடு முழுவதும் இந்துக்களால் கொண்டாடப்படுகின்றன. ஆனால் பொங்கல் பண்டிகை நமது தமிழகத்திற்கே உரிய பண்டிகை. இப் பண்டிகை தமிழ்நாடு தவிர வேறெங்கும் கொண்டாடப்படுவதில்லை. அதனால் இதைத் தமிழர் திருநாள் என்று கூறலாம்.

2. பொங்கல் பண்டிகை இயற்கைச் சக்திகளைவழிபடும் நோக்கத்தோடு கொண்டாடப் படுகிறது. நமது உயிர் வாழ்க்கைக்கும், மற்ற ஜீவராசிகளின் உயிர் வாழ்க்கைக்கும் இன்றியமையாத சூரி

யனை வழிபடுவதே இப் பண்டிகையாகும். சூரியன் நமக்கு வெப்பங் கொடுக்கிறது ; சூரியன் வெப்பத்தால் கடல் நீர் ஆவியாக மாறுகிறது ; நீராவி மழையாகப் பொழிந்து நமக்கு நீரைக் கொடுக்கிறது. ஆகவே, சூரியன் நமக்கு வெப்பமும் நீரும் கொடுத்துதவும் இயற்கைச் சக்தியாக இருக்கிறது. வெப்பமும் நீரும் இன்றிப் பயிர்கள் விளையா ; பயிர்கள் விளையாவிடில் நமக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கமாட்டா. ஆனதால், உயிர் வாழ்க்கைக்கு முதற் காரணமாகிய சூரியனுக்கு வணக்கம் செலுத்தும் நோக்குடன் இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது.

3. ஒவ்வோர் ஆண்டும் தை மாதம் முதல் நாளன்று இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. சூரியன் வான வழியில் ஆண்டுதோறும் தை மாதம் முதல் நாளன்று பூமத்திய ரேகையைத் தாண்டி வடதிசையில் தோன்றத் தொடங்குகிறது. இந்த நாளை 'மகர சங்கராந்தி' என்றும், 'உத்தராயண புண்ணிய காலம்' என்றும் கூறுவதுண்டு. இத்தகைய நன்னாளில் இப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

4. தமிழ் நாட்டில் பயிர்கள் முற்றி அறுவடை ஆகும் காலம் தை மாதத்தை ஒட்டியே அமைகின்றது. விவசாயிகள் அப்பொழுது புது நெல் அறுவடை செய்து குவித்திருப்பார்கள். நமக்கு உயிர் கொடுக்கும் உணவுப் பொருள்களைப் பெற உதவும் சூரியனைத் தமிழர்கள் தை மாதம் முதல் நாளன்று வழிபடுவது மிகவும் பொருத்தமானதே. ஆதலால் இதனை விவசாயப் பண்டிகை என்றும் கூறலாம்.

5. பொங்கல் பண்டிகைக்கு முதல் நாள் போகிப் பண்டிகை என்று கூறப்படும். 'போகி' என்பது இந்திரனைக் குறிக்கும் சொல். இந்திரன் மழைக்குக் காரணமான தெய்வமாகக் கருதப்படு வதால், இந்திரனை வழிபடும் நோக்கத்துடன் போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. நமக்கு நீரைக் கொடுக்கும் மழைக்குக் காரணமான தெய் வத்தை நாம் வழிபடுவது மிகவும் பொருத்தமே யாகும்.

6. பொங்கல் பண்டிகையன்று, தமிழர்கள் புதிய ஆடைகள் அணிந்துகொள்வார்கள்; பால் பொங்கல் சமைப்பார்கள்; சூரிய ஒளி வீசும் வீட் டின் முற்றத்தில் அழகாகக் கோலமிட்டு, பொங்கல் சோற்றையும், கரும்பு, மஞ்சள், தேங்காய், பழம் முதலியவைகளையும் வைப்பார்கள். குடும்பத்தி லுள்ள அனைவரும் ஒருங்குகூடி, சூரியனை நோக்கி நின்று வழிபாடு செய்வார்கள். அதன் பின் பொங் கற் சோற்றை இன்பமாக உண்டு மகிழ்வார்கள்.

7. பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் என்று சொல்லப்படும். உழவர்கள் பயிர்த் தொழிலை நடத்துவதற்கு மாடுகள் இன்றியமை யாதன. ஆதலால், பசு, எருது ஆகிய மாடுகளுக்கு நன்றி செலுத்தி அவற்றைச் சிறப்பிக்கும் பொருட்டு அந்த நாளை மாட்டுப் பொங்கலாகக் கொண்டாடுகிறார்கள். அன்று, மாடுகளை நீராட்டி மஞ்சள் பூசி, நன்கு அணி செய்வார்கள்; அவை களுக்குப் பொங்கல் சோறும் பழமும் கொடுத்து உண்ணச் செய்து தமது நன்றிக்கு அறிகுறியாக வழிபடுவார்கள்.

8. பொங்கல் பண்டிகை தமிழர்களுக்கு மிகவும் இன்பமான நாள். அவர்கள் அன்று தமக்கு நோயற்ற வாழ்வும், குறையற்ற செல்வமும் ஆண்டு முழுவதும் அமைய வேண்டும் என்று இறைவனை வேண்டிக்கொள்வார்கள்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| நவராத்திரி | நன்ஞன் | வானவழி |
| வேறெங்கும் | போகி | குறிக்கும் |
| திருநாள் | அணி | ஜீவராசி |
| வழிபடும் | ஒளி | பொழிந்து |
| நோக்கம் | ஒட்டியே | பொருத்தம் |
| நிலவுலகு | வழிபாடு | பொங்கல் |
| ஆவி | நீராட்டி | பொருட்டு |
| நீராவி | அறிகுறி | மறுநாள் |

## பயிற்சி

**I. விடை கூறுக:**

1. பொங்கல் பண்டிகையை ஏன் 'தமிழர் திருநாள்' என்று கூறலாம்?

2. பொங்கல் பண்டிகை என்ன நோக்கத்தோடு கொண்டாடப்படுகிறது?

3. சூரியன் எவ்வாறு நமது உயிர் வாழ்க்கைக்கு முதற் காரணமான இயற்கைச் சக்தியாகும்?

4. பொங்கல் பண்டிகை ஏன் தை மாதம் முதல் நாளன்று கொண்டாடப்படுகிறது?

5. பொங்கல் பண்டிகையை ஏன் 'விவசாயப் பண்டிகை' என்று கூறலாம்?

6. போகிப் பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?

7. பொங்கல் பண்டிகை யன்று தமிழர்கள் என்ன செய்வார்கள்?

8. மாட்டுப் பொங்கல் ஏன் கொண்டாடப்படுகிறது?

## இலக்கணம்

1. **இடம்:** தன்மை, முன்னிலை, படர்க்கை, என மூவகைப்படும்.

**தன்மை** - பேசுவோர்.

(உ - ம்.) நான், நாம், நாங்கள்.

**முன்னிலை** - முன்னின்று பேசக் கேட்போர்.

(உ - ம்.) நீ, நீர், நீங்கள்.


**படர்க்கை** - பேசப்படுவோர், அல்லது பேசப்படுவது

(உ - ம்.) அவன், அவள், அவர், அவர்கள்.
அது, அவை.

2. தடித்த எழுத்திலுள்ளவை என்ன இடம் என்பது குறிப்பிடுக:

1. **நான்** சேலம் போகிறேன்.
2. **பசு** புல்லை மேய்கிறது.
3. **நீ** எங்குச் செல்கிறாய்?
4. **அவை** பறந்து வந்தன.
5. **நீங்கள்** எப்பொழுது வந்தீர்கள்?
6. **அது** மேசை மேல் இருக்கும்.

# 10. தேசிங்கு மன்னன்



1. ஷா ஆலம் என்றொரு முகலாயச் சக்கரவர்த்தியார் முன்னொரு காலத்தில் டில்லி நகரில் ஆட்சி புரிந்துவந்தார். அவருக்குச் சிற்றரசர்கள் பலர் கப்பம் கட்டி வந்தனர். அவர்களுள் ஆர்க்காட்டு நவாபும் ஒருவர். செஞ்சிக் கோட்டை மன்னரான தரணி சிங்கு என்பவர் ஆர்க்காட்டு நவாபுக்குக் கப்பம் கட்டி வந்தார்.

2. ஷா ஆலத்தினிடம் ஒரு சிறந்த குதிரை இருந்தது. அப்புரவியை அடக்கிச் சவாரி செய்ய ஒருவராலும் இயலவில்லை. அதனை அடக்கிச் சவாரி செய்பவருக்குப் பரிசு வழங்குவதாகவும், தோல்வியுற்றோர் சிறை புக நேரும் என்று சக்கரவர்த்தியார் விளம்பரம் செய்தார்.

3. பல சிற்றரசர் பரியை அடக்க முயன்று தோற்றனர். தரணி சிங்கும் தோல்வியுற்றதனுல், சிறையில் அடைக்கப்பட்டார்.

4. தரணி சிங்கின் மகன் தேசிங்கு. தன் தந்தையார் சிறை சென்றபோது, தேசிங்கு சிறு குழந்தை. அரசியே தன் மைந்தனை அருமையாக வளர்த்து வந்தாள். தேசிங்கு உரிய பருவத்தில் கல்வி கேள்விகளில் தேர்ச்சி அடைந்தான்; அரசர்க்குரிய படைக்கலப் பயிற்சியிலும் தேர்ச்சி பெற்றுச் சிறந்த போர் வீரனுய் விளங்கினுன்.

5. தன் தந்தையார் டில்லியில் சிறைப்பட்டிருப்பதை அறிந்த தேசிங்கு, தன் நண்பனுடன் அந்நகரை அடைந்தான். அவன் நேராகச் சக்கரவர்த்தியாரின் சபைக்குச் சென்று, அப்பரியை அடக்க அனுமதி கோரினுன். ஷா ஆலம் அளித்த ஆணையின்படி தேசிங்கு குதிரையின்மீது பாய்ந்து ஏறினுன்; அதன் முரட்டுத்தனத்தை அடக்கி, நெடுநேரம் அதன்மீதிருந்து சவாரி செய்தான். அதுவரையில் ஒருவருக்கும் அடங்காத அக்குதிரை, தேசிங்குக்கு அடங்கிவிட்டது. ஷாஆலம் மகிழ்ச்சியுற்று, அக்குதிரையை அவனுக்கே பரிசாக அளித்தார்; தரணி சிங்கைச் சிறையினின்றும் விடுதலை செய்தார்; 'இனிக் கப்பம் செலுத்த வேண்டா,' என்று ஆணையும் வழங்கினுர்.

6. தந்தையாரும் மகனும் செஞ்சியை அடைந்தனர். தாய் பெரிதும் மகிழ்ந்தாள். சில நாட்களில் முதுமையால் தரணி சிங்கு இறந்தார். தேசிங்கு அரசுரிமை பெற்றுன். அவனுடைய ஆருயிர் நண்பனுகிய மகமது கான் அவனுக்குப் படைத்தலைவன் ஆனுன்.

7. வருடந்தோறும் ஆர்க்காட்டு நவாபுக்குச் செலுத்தவேண்டிய கப்பத்தை அது முதல் தேசிங்கு செலுத்தவில்லை. அதனால் நவாபு சினம் கொண்டார். கப்பத்தை வாங்கி வரும்படி நவாபு செஞ்சிக்குச் சில படைவீரர்களை அனுப்பினார். தேசிங்கு, சக்கரவர்த்தியார் தனக்கு அளித்துள்ள உரிமையைக் கூறிக் கப்பம் கட்ட மறுத்துவிட்டான். நவாபு கோபம் கொண்டு, செஞ்சியின்மேல் படையெடுத்தார்.

8. நவாபின் சேனைகள் செஞ்சிக் கோட்டையை வளைத்துக்கொண்டன. தேசிங்கு தன் படைத் தலைவனை மகமது கானுக்குச் செய்தி அனுப்பினான்; உடனே செஞ்சிக்கு வந்து படைகளைப் போர்க்களத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே அச்செய்தி. அச்சமயம் மகமது கானுக்குத் திருமணம் நடந்துகொண்டிருந்தது. ஆயினும் மகமது கான் தன் திருமணத்தை மறந்தான்; தன் உயிர் நண்பனும் மன்னனுமான தேசிங்கு ஆணையைத் தலைமேற்கொண்டு செஞ்சியை அடைந்து, தன் படையைக் கோட்டைக்கு வெளியே நிறுத்திக் கடும்போர் புரிந்தான். நவாபின் படைகள் சின்னபின்னமாயின. மகமது கான் வெற்றியுடன் மன்னனைக் காண விரைந்து சென்றான். வழியிற் நவாபின் படைவீரன் ஒருவன் மறைந்திருந்து, மகமது கானைச் சுட்டு வீழ்த்தினான்.

9. ஆருயிர் நண்பன் வஞ்சனையால் மாண்ட செய்தியைக் கேட்ட தேசிங்கு, மிகவும் வருந்தினான்; பகைவரைக் கொன்று வஞ்சம் தீர்க்க

உறுதி கொண்டான்; தன் குதிரைமீது ஏறிச் சென்று, வீராவேசத்துடன் போர் புரிந்து, நவாபின் சேனையைச் சிதற அடித்தான். நவாபின் படைகள் எதிர் நிற்க முடியாமல் தோல்வியடைந்தன. ஆயினும், தன் நண்பன் மாண்ட துக்கத்தினுல் தேசிங்கு உயிர் வாழ மனமின்றித் தன் வாளால் தன்னையே மாய்த்துக் கொண்டான். அவன் மனைவி தீக்குளித்து இறந்தாள். அந்தக் கற்பரசியின் பெயரால் ஏற்பட்ட ஊருக்கு இராணிப்பேட்டை என்பது பெயர்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| முகலாயர் | மைந்தன் | தீர்க்க |
| சக்கரவர்த்தி | பருவம் | படைவீரன் |
| சிற்றரசர் | ஆணை | முரட்டுத்தனம் |
| நவாபு | முதுமை | வீராவேசம் |
| கப்பம் | மாய்த்து | போர்க்களம் |
| புரவி | சினம் | கடும்போர் |
| பரி | தலைமேல் | படைக்கலம் |
| கோரினன் | வஞ்சனை | சின்னபின்னம் |
| அனுமதி | வஞ்சம் | கற்பரசி |
| அரசி | உறுதி | அரசுரிமை |
| அடக்கி | மாண்ட | சிதற |

## அருஞ்சொற் பொருள்

*பரி, புரவி - குதிரை; மைந்தன், புதல்வன் - மகன்; படைக்கலம் - போரில் பயன்படும் ஆயுதங்கள்; ஆணை - கட்டளை; மாய்த்து - கொன்று; அனுமதி - உத்தரவு; ஆருயிர் நண்பன் - உயிருக்குயிரான நண்பன்.*

## பயிற்சி

**I. விடை கூறுக :**

1. *தரணி சிங்கு ஏன் சிறையில் அடைபட்டார்?*
2. *தேசிங்கு எவ்வாறு தன் தந்தையை மீட்டான்?*

3. தேசிங்கு, சக்கரவர்த்தியாரிடமிருந்து பெற்ற பரிசும் ஆணையும் யாவை?

4. நவாபு ஏன் செஞ்சியின்மேல் படையெடுத்தார்?

5. மகமது கானின் நட்பின் பெருமை எவ்வாறு விளங்குகிறது?

6. தேசிங்கு எவ்வாறு இறந்தான்?

## II. எதிர்ச் சொற்கள் :

சிற்றரசர் × பேரரசர் நண்பன் × பகைவன்
முதுமை × இளமை இறந்தான் × பிறந்தான்

## இலக்கணம்

I. தேசிங்கு குதிரையை **அடக்கினன்**—இந்த வாக்கியத்தில் **அடக்கினன்** என்னும் சொல் தேசிங்கு செய்த செயலை (வினையை)க் குறிக்கிறது. இவ்வாறு வினையைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** என்று சொல்லப்படும்.

1. தரணி சிங்கு விடுதலை **அடைந்தார்.**
2. மகமது கான் **போரிடுகிருன்.**
3. மன்னன் வெற்றி **பெறுவான்.**

மேலே கண்ட வாக்கியங்களைக் கவனியுங்கள்.

(1) **அடைந்தார்** என்ற தொழில் முன்பே நடந்துவிட்டதைக் குறிக்கிறது. தொழில் நடந்த காலம் **இறந்தால ம்** என்று சொல்லப்படும்.

(2) **போரிடுகிருன்** என்பது, நிகழ்ந்துகொண்டிருக்கும் தொழிலைக் குறிக்கிறது. நடைபெறுகின்ற காலம் **நிகழ்காலம்** என்று சொல்லப்படும்.

(3) **பெறுவான்** என்பது, செயல் இனி நடக்கப் போவதை (எதிர்பார்க்கப் படுவதை)க் குறிக்கிறது. நடைபெறப் போகும் காலம் **எதிர்காலம்** எனப்படும்.

II. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச்சொற்களின் காலத்தை எழுதுக:

1. குதிரை கனைக்கிறது.
2. வேலன் ஏர் உழுதான்.
3. மாடு வைக்கோல் தின்றது.
4. குரங்கு மரத்திலிருந்து இறங்குகிறது.
5. தந்தை நாளை வருவார்.
6. நான் ஊருக்குச் சென்றேன்.
7. நான் பரீட்சையில் தேறுவேன்.

III. இப்பாடத்தின் 5-ஆம் பத்தியில் இறந்த காலம் காட்டும் வினைமுற்றுக்கள் எட்டு இருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுக:

IV. கீழ்க்காணும் வாக்கியங்களில் உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறையாகவும், எதிர்மறை வாக்கியங்களை உடன்பாட்டு வாக்கியமாகவும் மாற்றி எழுதுக:

(உ-ம்.) நான் பாடம் படித்தேன்.
நான் பாடம் படிக்கவில்லை.

1. முருகன் ஊருக்குச் சென்றான்.
2. அப்துல் படம் வரையவில்லை.
3. தந்தை நாளை வருவார்.
4. கமலம் கோலம் போடுவாள்.

# 11. குருவியும் குரங்கும்



பாடுறு மூடனுக்குப்
        பற்பல போதித் தாலும்
வீடுடை யவனை வீட்டை
        இழந்திடச் செய்வான் என்று
நேடுறு சன்மன் சொல்வான்:
        நெடியதோர் பழும ரத்தில்
கூடுகொண் டனஇ ரண்டு
        தூக்கணங் குருவி தாமே. (1)

குளிரினால் நடுங்கி வானக்
        கொடுமழை யால்ந னைந்து
நளிர்சுரத் தோடு தேகம்
        நடுங்கியே பற்கள் கிட்டி

வளமறு குரங்கொன் றங்கு
வந்தது; குருவி பார்த்தே
இளகிய மனத் தினலே
இன்சொலால் ஒன்று சொல்லும்: (2)

“கைகள்கால் இருந்தும் இந்தக்
கன்மத்தை அனுப விக்கும்
செய்திஎன் ?” என்ன, “ஊசி
மூஞ்சிகொள் சிறிய மூடா,
வைதுநீ புத்தி சொல்ல
வல்லேயோ!” எனக்கோ பித்து
நெய்திடும் அதன்தன் கூட்டை
நெடுங்கையால் பிய்த்த தன்றே. (3)

பஞ்ச தந்திரம்] [வீரமார்த்தாண்ட தேவர்

## அருஞ்சொற் பொருள்

பாடு+உறு - (பாடுறு) துன்பப்படும்; போதித்தாலும் - அறிவுரை உபதேசித்தாலும்; நேடுறு நல்லெண்ணம் பொருந்திய; சன்மன் - அந்தணன்; நெடிய - உயர்ந்து வளர்ந்த ; பழுமரத்தில் - பழுத்துக் குலுங்கும் மரத்தில் ; கன்மத்தை - துன்பத்தை; நெய்திடும் - நெய்ததுபோல் கட்டியிருந்த; நெடுங்கையால் - தனது நீண்ட கைகளால்.

## பயிற்சி

I. **விடை கூறுக :**

1. தூக்கணங் குருவிகள் எங்குக் கூடு கட்டிக் கொண்டிருந்தன?

2. குரங்கு எத்தகைய நிலையில் அம்மரத்திற்கு வந்து சேர்ந்தது?

3. குரங்கைப் பார்த்துக் குருவி யாது கேட்டது?
4. குரங்கு குருவிக்குக் கூறிய பதில் யாது?
5. குரங்கு பிறகு என்ன செய்தது?

II. இக்கதையைக் குருவி கூறுவது போலச் சொல்லுக:

III. தெரிந்துகொள்.

| | |
|---|---|
| வீடுடையவனை | — வீடு உடையவனை |
| நெடியதோர் | — நெடியது ஓர் |
| குரங்கொன்றங்கு | — குரங்கு ஒன்று அங்கு |
| எனக்கோபித்து | — என கோபித்து |

## இலக்கணம்

1. இராமன் பந்தை வீசினான்.
2. பந்து இராமனால் வீசப்பட்டது.

மேற்கண்ட வாக்கியங்களைக் கவனி. முதல் வாக்கியத்தில் **இராமன்** எழுவாய். இரண்டாம் வாக்கியத்தில் **பந்து** எழுவாய். முதல் வாக்கியத்தில் **பந்தை** என்னும் சொல் செயப்படுபொருள். முதல் வாக்கியத்தின் செயப்படுபொருள், இரண்டாம் வாக்கியத்தில் எழுவாயாக அமைந்திருக்கிறது. வாக்கியங்களின் கருத்தும் மாறவில்லை.


1. கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள செயப்படுபொருளை, எழுவாயாக அமைத்து எழுதுக:

(1) வேலன் மரத்தை வெட்டினான்.
(2) குரங்கு கூட்டைப் பிரித்தது.
(3) நவாபு படை வீரரை அனுப்பினார்.
(4) தமிழர்கள் இந்திரனை வழிபட்டார்கள்.

2. கீழ்க்காணும் எழுவாய்களைச் செயப்படுபொருளாக மாற்றி எழுதுக.

(1) படம் முருகனால் வரையப்பட்டது.
(2) மேசை தச்சரால் செய்யப்பட்டது.
(3) கூடு குருவியால் கட்டப்பட்டது.
(4) கப்பல் மாலுமியால் செலுத்தப்பட்டது.

# 12. சிறந்த வாழ்க்கை




1. பெருமை பெற்ற நமது பாரத நாட்டில் கிராமங்களே அதிகம். நவீன நாகரிகத்தின் பயனுகப் பல நகரங்கள் தோன்றியுள்ள போதிலும் பெரும்பான்மையான மக்கள் இன்னும் கிராமங்களிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். நகரங்களில் ஓய்வில்லாமல் தொழில்செய்யும் மக்களுக்குக் கிராம வாழ்க்கை அமைதியை அளிக்கும். கிராமத்திலுள்ள இயற்கைக் காட்சிகள் மனத்திற்கு இன்பம் தரும். சோலைகளும், நீர் நிலைகளும், பசும்புல் தரைகளும் மாசு மறுவில்லாத மனம் படைத்த மக்களின் நிலையும் காண்பவர் மனத்தைக் கவரும் தன்மை வாய்ந்தவை. இத்தகைய கிராம வாழ்க்கையைப் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

2. கிராமங்களில் வசிப்பவர்களில் பெரும்பாலார் வேளாண்மைத் தொழில் செய்து வாழ்கின்றனர். மக்கள் உயிர் வாழ்வதற்கு உணவே இன்றியமையாதது. உணவுப் பொருளைக் கிராமவாசிளே விளைவித்துத் தருகிறார்கள். நிலத்தை உழுது, பண்படுத்தி, விதைத்து, நாற்று நட்டு, நீர் பாய்ச்சி, களைபிடுங்கி, அறுவடை செய்து, பல விதமான தானியங்களை அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள்.

3. கிராம மக்களின் வாழ்க்கை சோம்பர் வாழ்க்கையன்று. காலையில் கோழி கூவுமுன் அவர்கள் தோளின்மேல் கலப்பையைத் தாங்கி, மாடுகளை ஓட்டிக்கொண்டு நிலங்களுக்குச் செல்வார்கள் ; நடுப்பகல் வரை கழனிகளில் வேலை செய்வார்கள் ; நடுப்பகலில் அவர்களுடைய மனைவி மக்கள் கொண்டு வரும் உணவை உண்டு, பின்னும் மாலை வரை வயல் வேலைகளைச் செய்வார்கள் ; கதிரவன் மாலையில் மறைந்ததும், தத்தம் வீடுகளுக்குத் திரும்புவார்கள்.

4. கிராமங்களிலுள்ள வீடுகள் பெரும்பாலும் மண்ணாலாகிய சிறு குடிசைகளே. அவை தென்னங் கீற்றுக்களாலும், வைக்கோலாலும் வேயப்பட்ட கூரைகளை யுடையவை. பெண்கள் தினந்தோறும் தங்கள் வீடுகளைப் பெருக்கி மெழுகுவார்கள் ; பண்டிகை நாட்களிலும் திருவிழாக் காலங்களிலும் வீடுகளுக்குச் செம்மண் இட்டு, அழகு செய்வார்கள். செல்வர், ஓட்டு வீடுகளிலும் மாடி வீடுகளிலும் வசிப்பர்.

5. கிராம மக்கள் எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர்கள். அவர்களுடைய உடையும் உணவும் எளியவை. அவர்கள் நல்ல தேகக்கட்டு படைத்

தவர்கள் ; நேர்மையான குணம் உடையவர்கள் ; தைரியமும் சுறுசுறுப்பும் வலிமையும் பொருந்திய வர்கள் ; நாகரிக வாழ்க்கையின் ஆடம்பரங்களை விரும்பாதவர்கள்.

6. ஆனால், இப்பொழுது கிராமங்கள் சீரழிந்துவிட்டன. பிழைப்பின் பொருட்டுப் பலர் நகரங்களை நாடுகின்றனர். கிராம மக்களில் பெரும் பாலார் கல்வியறிவு இல்லாதவர். ஏழ்மையும் நோயும் அவர்களை வருத்துகின்றன. கிராமமெங்கும் அசுத்தம் குடிகொண்டுள்ளது. நீர் நிலைகள் வற்றி நீர்வசதி யின்றி உள்ளன.

7. இந்நிலைமை சீரடைய வேண்டும்; கிராமம் நேர்த்தியாகவும் தூய்மையாகவும் இருத்தல் வேண் டும். வீடுகள் காற்றும் வெளிச்சமும் உள்ளவை களாகக் கட்டப்பட வேண்டும். நீர் நிலைகள் சுத்த மாக வைக்கப்படவேண்டும். ஒவ்வொரு கிராமத் திலும் ஒவ்வொரு பாடசாலை வேண்டும்; ஒரு வாசக சாலை, ஒரு கூட்டுறவுச் சங்கம், பொது விளையாட்டு இடம் ஆகிய யாவும் இருக்க வேண்டும். அப்பொழுது கிராம வாழ்க்கை மகிழ்ச்சி பொருந் தியதாய் இருக்கும்.

8. இவ்வாறு கிராமங்கள் சீர்திருந்தினால், படித்தவர்களும் அங்கு வசிப்பார்கள் ; கிராமத் தைச் சீர்திருத்தத் தங்களாலான உதவியைச் செய் வார்கள். கிராம மக்கள் ஓய்வு நேரங்களை வீணாக் காமல், ஏதேனும் ஒரு குடிசைத் தொழிலை மேற் கொள்ள வேண்டும் ; கிராமத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்; ஒற்றுமையாக வாழ வேண்டும். பொறாமையும் பிணக்கும் வறுமையும் கிராமங்களினின்று நீங்க வேண்டும். மனித சமூகத்

தில் அன்பும் அமைதியும் நிலவ வேண்டுமாயின், கிராமங்கள் செழிக்க வேண்டும்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| நவீன | எளிபவை | சமூககம் |
| ஒய்வு | வலிமை | நிலவ |
| மாசு | சீரடைய | வாய்ந்தவை |
| மறு | தூய்மை | தேகக்கட்டு |
| கழனி | பிண்ணுக்கு | நாடுகின்றனர் |
| கதிரவன் | வறுமை | சீரழிந்து |

## பயிற்சி

I. விடைகூறுக:

1. கிராம வாழ்க்கையில் காண்பவர் மனத்தைக் கவரும் தன்மை வாய்ந்தவை யாவை?
2. கிராம மக்களின் வாழ்க்கை எப்படிப்பட்டது?
3. கிராமத்தில் வீடுகள் எப்படி இருக்கும்?
4. இப்பொழுது கிராமங்களின் நிலைமை என்ன?
5. எப்பொழுது கிராம வாழ்க்கை மகிழ்ச்சி தரும்?
6. கிராமங்கள் செழிக்க என்ன செய்ய வேண்டும்?

II. சரியா தவரு என்பதை எழுது: சரியானல் வாக்கியத்திற்கு நேராக ✓ குறியிடு; தவருனல் ✗ குறியிடு:

1. கிராமங்கள் இந்தியாவில் மிகக் குறைவு.
2. கிராம மக்கள் ஆடம்பர வாழ்க்கையில் விருப்பம் உள்ளவர்கள்.
3. செல்வர் மாடி வீடுகளில் வசிப்பர்.
4. கிராமங்களில் நீர் நிலைகள் சுத்தமாய் இருப்பதில்லை.

III. நீ ஒருகிராமத்திற்குச் சென்று சுற்றிப் பார்த்த விவரத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுது.

## IV. சேர்த்து எழுதுக :

குடிசை + தொழில் ; நீர் + நிலை.
தேகம் + கட்டு ; கிராமம் + எங்கும்.

## இலக்கணம்

குருவி பார்த்தது.

குரங்கு குருவியைப் பார்த்தது.

இவ்வாக்கியங்களைக் கவனி. இரண்டு வாக்கியங்களிலும் 'குருவி' என்னும் பெயர் இருக்கிறது. ஆனால் முதல் வாக்கியத்தில் அது 'பார்த்தது' என்னும் பயனிலைக்கு எழுவாயாக இருக்கிறது. இரண்டாம் வாக்கியத்தில் அதே பெயர் குரங்கினால் பார்க்கப்பட்ட பொருளாக வேறு பட்டிருக்கிறது. இவ்வாறு ஒரு பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது **வேற்றுமை** எனப்படும். தமிழில் அவ்வேற்றுமை எட்டு வகைப்படும்.

இரண்டாவது வாக்கியத்தில் 'குருவி' என்னும் பெயரோடு 'ஐ' என்பது சேர்ந்து வந்துள்ளதல்லவா? அது அப்பெயர் ஏற்றுள்ள வேற்றுமையை அறிவிக்கும் அறிகுறியாக அமைந்துள்ளது. அது **வேற்றுமை உருபு** எனப்படும். எட்டு வேற்றுமைகளில் முதல் வேற்றுமைக்கும், எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை. இரண்டு முதல் மற்ற ஆறு வேற்றுமைகளுக்கும் தனித்தனி உருபு உண்டு.

முதல் வேற்றுமை : இயல்பான பெயரே முதல் வேற்றுமை.

இரண்டாம் வேற்றுமை உருபு : **ஐ.**

மூன்றும் வேற்றுமை உருபு : **ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன்.**

நான்காம் வேற்றுமை உருபு : **கு.**

ஐந்தாம் வேற்றுமை உருபு : **இன், இல், நின்று இருந்து.**

ஆறும் வேற்றுமை உருபு: அது, அ, உடைய.
ஏழாம் வேற்றுமை உருபு: இல், கண், இடம்.
எட்டாம் வேற்றுமை உருபு: இதற்குத் தனி உருபு இல்லை. படர்க்கைப் பொருளை முன்னிலைப்படுத்தி அழைப்பதே இதன் பொருள்.

(உ-ம்.) 1. முருகன் கண்டான்.
2. முருகனைக் கண்டான்.
3. முருகனோடு சென்றான்.
4. முருகனுக்குக் கொடுத்தான்.
5. முருகனின் பெரியவன்.
6. முருகனது புத்தகம்.
7. முருகனிடம் இருக்கிறது.
8. முருகா வா.

# 13. உள்ளன்பு

## (மௌன வாசிப்பு)



1. பாலஸ்தீனம் என்னும் நாட்டில் ஓர் ஆலயம் இருந்தது. பல திசைகளிலிருந்தும் மக்கள் அவ்வாலயத்திற்குத் திரள்திரளாக வருவார்கள்; காணிக்கை செலுத்துவார்கள். காணிக்கை செலுத்த ஓர் உண்டி உண்டு. அதில் ஒவ்வொருவரும் காணிக்கை போடுவது வழக்கம்.

2. இயேசு நாதர் தம் சீடர்களுடன் ஒரு நாள் அவ்வாலயத்திற்கு எழுந்தருளினார். அவர் காணிக்கை உண்டிக்கு எதிரில் நின்று, மக்கள் காணிக்கை செலுத்துவதைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

3. செல்வர் பலர், அவ்வுண்டியில் பொற்காசுகளைப் போட்டனர்; சிலர் வெள்ளி நாணயங்க

ளைச் செலுத்தினர்; மற்றும் சிலர், வேறு நாணயங் களை இட்டனர்.

4. ஆனல் அவர்களுள் ஒருவராவது உள் ளன்புடன் காணிக்கை செலுத்தவில்லை; பிறர் மதிப்பைப் பெறவும், ஆடம்பரத்திற்காகவும் பொன்னையும் வெள்ளியையும் உண்டியில் குவித் தனர். அதனல் அவர்கள் வறுமை அடையவில்லை; அக்காசுகளை அவர்கள் ஒரு பொருட்டாகவும் மதிக்கவில்லை.

5. இறுதியில் ஓர் ஏழைப் பெண் அங்கு வந் தாள்; அவள் ஓர் அநாதை. அவள் ஒரு கந்த லான ஆடையை அணிந்திருந்தாள்; அதன் ஒரு மூலையில் இருந்த ஒரு சிறு முடிப்பை அவிழ்த்தாள். அதில் ஒரு செப்புக் காசு இருந்தது. அதைத் தன் கையில் எடுத்தாள்.

6. "ஆண்டவரே, நான் ஏழை! ஓர் அநாதை! என் சொத்தெல்லாம் இச்செப்புக்காசுதான்! என் சிறு காணிக்கையைக் கண்டு என்னை இகழ்ந்து வெறுக்க வேண்டா! இதனை ஏற்றருளக் கோரு கிறேன்!" என்று சொல்லிக்கொண்டே அவள், உண்டியில் காணிக்கையைச் சேர்த்தாள்; பின்பு கடவுளை வணங்கித் தன்வழியே சென்ருள்.

7. இயேசு நாதர் அக்காட்சியைக் கண்டார். அவ்வநாதையின் உள்ளன்பைக் கண்டு அவர் மனம் உருகினர்; தம் சீடர்களை நோக்கி, "சீடர் களே, அப்பெண்ணின் பக்தியைப் பாருங்கள்! அவளே ஆண்டவனுக்கு விருப்பமானவள். தன் னிடம் இருந்த யாவற்றையும் அவள் தானம் செய்

தாள். மற்றவர்கள் ஆடம்பரத்தில் விருப்பம் உள்ளவர்கள்; பிறர் தம்மைப் புகழவேண்டும் என்று தருமம் செய்பவர்கள்; தெய்வ பக்தி உள்ளவர்கள் போல நடிப்பவர்கள். உள்ளன்புடன் நேசிப்பவர்களையே ஆண்டவன் நேசிக்கிறார். ஆதலால், உள்ளன்புடன் நாம் கடவுளை வணங்க வேண்டும்," என்று உபதேசித்தார்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| ஆலயம் | அநாதை | நடிப்பவர் |
| காணிக்கை | முடிப்பு | நேசிப்பவர் |
| உண்டி | இகழ்ந்து | பொருட்டாக |
| பொற்காசு | ஏற்றருள | கந்தலான |
| உள்ளன்பு | உருகினர் | அவிழ்த்தாள் |

## பயிற்சி

**விடை கூறுக:**

1. பாலஸ்தீனத்திலுள்ள ஆலயத்திற்கு மக்கள் எதற்காக வருவார்கள்?
2. செல்வர் பலர் எதற்காகக் காணிக்கை செலுத்தினர்?
3. அநாதைப்பெண் செலுத்திய காணிக்கை யாது?
4. இயேசு நாதர் தம் சீடருக்கு யாது கூறினர்?

## இலக்கணம்

பின் வரும் வாக்கியங்களில் வேற்றுமை ஏற்றுள்ள வாக்கியங்களைக் குறித்து, உருபையும் வேற்றுமையையும் கூறுக:

1. உண்டியில் காணிக்கையை இட்டாள்.
2. நிலங்களுக்குச் செல்வார்கள்.
3. முட்டையிலிருந்து புழுக்கள் வெளிப்படும்.
4. நமது பெருமை.
5. அவர்களுடைய மனைவி மக்கள்.
6. பாரத நாட்டில் கிராமங்களே அதிகம்.
7. வாளால் மாய்த்துக் கொண்டான்.

# 14. மறையருளிய பெரியார்



1. தமிழ் நூல்களில் தலைசிறந்தது திருக்குறள் ஆகும். இந்நூல் உலகிலுள்ள பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது ஒரு சிறந்த நீதி நூல். இதனைத் தமிழ் மறை என்று பாராட்டுகிறார்கள். இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர் என்ற பெரியார். இவர் தெய்வப் புலவர் என்றும் சிறப்பிக்கப் பெறுவார்.

2. திருவள்ளுவர் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சென்னையைச் சார்ந்த திருமயிலையில் வாழ்ந்து வந்தார். அவர் நெசவுத் தொழில் செய்து வந்தார் ; அத்தொழிலில்

கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தார். வாசுகி அம்மையார் திருவள்ளுவர் மனைவியார். அவ்வம்மையார் கற்பரசியார்; கணவர் கருத்தறிந்து நடந்து வந்தவர்.

3. வாசுகி அம்மையாரது கற்பின் பெருமையைப் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. ஒரு நாள் திருவள்ளுவர் காலையில் பழையமுது சாப்பிட உட்கார்ந்தார். அப்பொழுது அவர், தம் மனைவியாரை அழைத்து, "அமுது சுடுகிறது; விசிறி கொண்டுவந்து வீசு," என்று சொன்னார். அம்மையார் எதிர் பேசவில்லை; "பழையமுது சுடுமா?" என்று கேட்கவுமில்லை. உடனே விசிறி கொண்டு வீசினார். மற்றொரு சமயம் வாசுகி அம்மையார் கிணற்றில் நீரெடுத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது திருவள்ளுவர் அவரை எதற்கோ அழைத்தார். உடனே அம்மையார் தாம் நீரெடுத்துக் கொண்டிருந்த கயிற்றை அப்படியே பாதிக் கிணற்றில் விட்டு விட்டுத் தம் கணவரிடம் ஓடி வந்தார். திரும்ப அவர் கிணற்றடிக்குச் சென்ற பொழுது, கயிறு தாம் விட்டு வந்த நிலையிலேயே இருக்கக் கண்டார்.

4. திருவள்ளுவர் சிறந்த தமிழ்ப் புலவர். அவரைக் காணுமாறு செல்வச் சீமான்களும், பெரு நிலக் கிழார்களும், மன்னர்களும், தமிழன்பர்களும் வருவதுண்டு. அந்நாளில் பெரிய அளவில் கப்பல் வாணிகம் செய்து வந்த ஏலேல சிங்கர் என்பவர் திருவள்ளுவரிடம் கல்வி பயின்றார்; திருவள்ளுவருடைய நல்லுரைகளின் பயனாகப் பல தருமங்களைச் செய்தார்.

5. திருவள்ளுவர் மக்களுக்கு நீதி நெறிகளைப் புகட்டும் நோக்கத்துடன் திருக்குறள் என்னும் நூலை இயற்றினர். அந்நூல் குறள் என்ற ஒரு வகைச் செய்யுளால் ஆகியுள்ளது. திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது ; இவை முறையே அறத்துப் பால், பொருட்பால், காமத்துப் பால் என்று கூறப் படும். இந்நூல் நூற்று முப்பத்து மூன்று சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் அதிகாரம் என்பது பெயர். ஒவ்வோர் அதிகாரமும் பத்துக் குறட்பாக்களைக் கொண்டது. ஆகவே, திருக்குறளில் 1,330 குறட்பாக்கள் உள்ளன.

6. திருக்குறளில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளும், விலக்க வேண்டிய தீய குணங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மன்னர், அமைச்சர், தூதுவர் முதலியவர் களுடைய ஒழுக்க நெறிகள் இந்நூலில் விளக்கப் பட்டுள்ளன.

7. திருக்குறள் அழியாப் புகழ்படைத்த நூல். அதனை ஆக்கி அருளிய திருவள்ளுவர் நம்மிடையே என்றென்றும் புகழுடம்புடன் வாழ்வார் என்பதில் ஐயம் இல்லை.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| தலைசிறந்தது | நீதி நூல் | மொழிபெயர்க்கப்பட்டு |
| தமிழ்மறை | ஊதியம் | கற்பரசியார் |
| பழையமுது | அறம் | நிலையிலேயே |
| அதிகாரம் | தூதுவர் | பெருநிலக்கிழார் |
| குறட்பா | ஒழுக்க | தமிழன்பர்கள் |
| நற்பண்பு | நெறி | அழியாப் புகழ் |

## பயிற்சி

**விடை கூறுக :**

1. திருக்குறள் யாரால் இயற்றப்பட்டது?
2. அதற்கு வேறு பெயர் என்ன?
3. வாசுகியாரின் நற்பண்புகள் யாவை?
4. வாசுகியாரின் கற்பின் பெருமையை விளக்கும் வரலாறுகள் யாவை?
5. திருக்குறளை அவரியற்றிய தன் நோக்கம் யாது?
6. திருக்குறளின் மூன்று பெரும் பிரிவுகள் யாவை?
7. அதிகாரம் என்று எதற்குப் பெயர்?
8. குறட்பாக்களின் எண் எத்தனை?

## இலக்கணம்

திருவள்ளுவர் திருக்குறள் என்னும் நூலை இயற்றினர்.

திருக்குறள் என்னும் நூல் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.

இவற்றுள் முதல் வாக்கியத்தில் 'இயற்றினர்' என்பது, திருவள்ளுவர் செய்த வினையைக் குறிப்பதால் **செய்வினை.**

இரண்டாவது வாக்கியத்தில் 'இயற்றப்பட்டது' என்பது, திருவள்ளுவரால் செய்யப்பட்ட வினையைக் குறிப்பதால் **செயப்பாட்டு வினை.**

(1) பின் வரும் வாக்கியங்களில் உள்ள செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்றிச் சொல்லுக.

தேசிங்கு குதிரையை அடக்கினன்.
குரங்கு கூட்டைப் பிய்த்தது.
அவள் முடிப்பை அவிழ்த்தாள்.

(2) செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாக மாற்றிச் சொல்லுக.

சேனையால் கோட்டை வளைக்கப்பட்டது.
ஏலேல சிங்கரால் பல தருமங்கள் செய்யப்பட்டன.

# 15. நூல் நூற்கும் புழு



1. ஊணுக்கு அடுத்தபடியாக மக்களுக்கு வேண்டுவது உடை. மக்கள் பருத்தியாடை, கம்பள ஆடை, பட்டாடை முதலிய பலவகை ஆடைகளை உடுத்துகிறார்கள். பருத்திச் செடியில் உண்டாகும் பஞ்சை நூலாக நூற்றுப் பருத்தி யாடை நெய்கிறார்கள். அடர்த்தியான ஆட்டு மயிரைக் கத்தரித்து, நூலாக நூற்று, கம்பள ஆடைகள் நெய்கிறார்கள். பட்டாடைக்கு மூலப் பொருளான பட்டு நூல், இவற்றைப் போலத் தயாரிக்கப்படுவது அன்று. அது இயற்கையில் நூலாகவே கிடைக்கிறது.

2. பட்டு நூல் ஒருவகைப் புழுவினால் நூற்கப் படுகிறது. பட்டுப் பூச்சி புழு நிலையில் இருக்கும் பொழுது இந்நூல் நூற்கப்படுகிறது. பட்டுப் புழு தான் உறங்குவதற்குத் தன்னைச் சுற்றி கூடு ஒன்று கட்டிக் கொள்கிறது. அந்தக் கூடு முழு வதும் பட்டு நூலால் ஆனதாகும்.

3. பட்டுப் பூச்சிகள் பெரும்பாலும் முசுக் கட்டை மரங்கள் பயிராகும் இடங்களிலேயே வசிக் கும். ஏனெனில், பட்டுப் புழுக்களுக்கு முசுக்கட்டை இலைகளே உணவாம். தாய்ப் பட்டுப் பூச்சி முசுக் கட்டை இலைகளின் மேல் நூற்றுக்கணக்கான முட்டைகள் இடும். சூரிய வெப்பத்தால் இவை ஒரு வாரத்தில் பொரிந்து, சிறு பட்டுப் புழுக்கள் வெளிவரும். இவை சாம்பல் நிறமாய் இருக்கும்; அறைக்கால் அங்குல நீளம் இருக்கும். பட்டுப் புழு முசுக்கட்டை இலைகளைத் தின்று வளரும். புழு நிலையில் இருக்கும் பொழுது, இவை நாலைந்து முறை மேல் தோலை உரித்துக்கொள்ளும். மூன்று அல்லது நான்கு வார காலத்தில் இவை இரண்டங் குல நீளமுள்ள பொன்னிறமான புழுக்களாகும்.

4. பிறகு ஒவ்வொரு பட்டுப்புழுவும் தன்னைச் சுற்றி ஒரு கூடு கட்டத் தொடங்கும். புழுவின் தலையிலுள்ள நுட்பமான துவாரத்திலிருந்து பிசுக் குள்ள ஒரு திரவம் நூலிழை போல் வெளிவந்து, காற்றுப் பட்டதும் உலர்ந்து பட்டு நூலாகிறது. புழு தன் தலையை வேகமாகப் பல திசைகளிலும் அசைத்து, பட்டு நூலால் தன்னைச் சுற்றி ஒரு கூடு கட்டிக்கொள்ளும். கூடு கட்டி முடிந்ததும் அது கூட்டினுள் அசைவற்றுக் கிடக்கும். அப் பொழுது அதன் உடலில் பல மாறுதல்கள் ஏற்படு கின்றன. அதற்கு இறக்கைகள் முளைக்கின்றன; தலை, வயிறு, மார்பு, கால்கள் ஆகிய உறுப்புக்கள் அமைகின்றன. பத்து நாட்களில் இந்த வளர்ச்சி முற்றுப் பெறுகிறது. முழு வளர்ச்சியடைந்த பட்டுப் பூச்சி கூட்டைக் கிழித்துக்கொண்டு வெளி வந்து பறக்கத் தொடங்குகிறது.

5. பட்டு நூல் சேகரிப்பவர்கள் பட்டுப் புழு முழுவளர்ச்சியடையும் வரையில் காத்திருக்க மாட்டார்கள். ஏனெனில், பட்டுப் பூச்சி வெளியே வரும்போது பட்டுநூல் அறுந்து போகும். தொடர்ச்சியான நூலைப் பெறுவதற்காக, அவர்கள் புழுக்கள் கூடுகளினுள் இருக்கும்போதே, கூடுகளைக் கொதிநீரில் போட்டு, உள்ளேயிருக்கும் புழுக்களைக் கொன்று விடுவார்கள். பிறகு கூட்டிலுள்ள நூலின் ஒரு முனையைக் கண்டு பிடித்துச் சக்கரத்தில் சுற்றி, கூட்டிலிருந்து நூலைப் பிரிப்பார்கள். சுமார் 2,500 கூடுகளிலிருந்து ஒரு பவுண்டு நிறையுள்ள பட்டு நூல் கிடைக்கும்.

6. பட்டாடை உறுதியும், பளபளப்பும், மென்மையும் உடையது. எனவே, இது நெடுங் காலம் உழைக்கும். இது ஓரளவு வேர்வையை உறிஞ்சி ஆவியாக்கும்; உடல் வெப்பம் வெளியேருதபடியும் காக்கும். ஆதலால், பட்டாடைகளை எல்லாக் காலங்களிலும் அணிந்து கொள்ளலாம். ஆனுல் பருத்தி ஆடையைவிட இதன் விலை மிகவும் அதிகம். ஆகையால் ஏழை மக்கள் பட்டாடைகளை வாங்கி அணிய முடிவதில்லை.

7. சீனு, ஜப்பான் ஆகிய நாடுகளில் பட்டு நூலை மிகுந்த அளவில் சேகரிக்கிருர்கள். நமது தென்னுட்டில் கொள்ளேகாலம் என்னுமிடத்திலும், மைசூர் இராச்சியத்திலும் பட்டுப் புழுக்களை வளர்த்து, பட்டு நூல் சேகரிக்கிருர்கள்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| ஊண் | அசைந்து | உறிஞ்சி |
| உலர்ந்து | இறக்கை | பட்டாடை |
| நூலிழை | பவுண்டு | கத்தரித்து |
| பிசுக்கு | மென்மை | மூலப்பொருள் |
| திரவம் | அங்குலம் | முசுக்கட்டை |
| முனை | துவாரம் | நுட்பமான |
| நிறை | மாறுதல் | அசைவற்று |
| பொரிந்து | அறுந்து | தொடர்ச்சி |
| பொன்னிற | கொதிநீர் | மாறுதல் |

## பயிற்சி

விடை கூறுக:

1. பட்டுப் பூச்சி எங்கு வசிக்கும்?
2. பட்டுப் புழுவின் உணவு என்ன?
3. பட்டுப் பூச்சிக்குப் புழுப் பருவத்தில் நிகழ்வன யாவை?
4. பட்டு நூலிழை எப்படி உண்டாகிறது?
5. கூட்டினுள் புழு என்ன மாறுதலை அடைகிறது?
6. புழு கூட்டினுள் இருக்கும் போதே ஏன் கூடுகளை எடுத்து விடுகிறார்கள்?
7. பட்டு நூல் சேகரிப்பது எவ்வாறு?
8. பட்டாடைகளின் தன்மைகள் யாவை?
9. பட்டாடைகளை ஏழைகள் ஏன் அணிய முடிவதில்லை?
10. பட்டு நூல் எங்கெங்குச் சேகரிக்கிறார்கள்?

## இலக்கணம்

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்

திருவள்ளுவர் வாழ்ந்தார்.

முதல் வாக்கியத்தில் செயப்படுபொருள் உள்ளது. இரண்டாவது வாக்கியத்தில் செயப்படுபொருள் இல்லை. இதற்குக் காரணம் முதல் வாக்கியத்தில் உள்ள 'இயற்றினார்' என்னும் வினை, செயப்படு பொருளைப் பெற்று வரும் தன்மையுடையது. இரண்டாவது வாக்கியத்தில் உள்ள 'வாழ்ந்தார்' என்னும் வினை, செயப்படுபொருள் பெறும் தன்மை இல்லாதது. வினைச் சொற்களில் செயப்படுபொருள் பெறும் தன்மை உள்ளவையும், அத் தன்மை இல்லாதவையும் என்று இருவகை உண்டு. செயப்படுபொருள் பெறும் தன்மை உள்ள வினை, செயப் படுபொருள் குன்றாத வினை எனப்படும். அத்தன்மை இல்லாத வினை, செயப்படுபொருள் குன்றிய வினை எனப்படும்.

இப்பாடத்தில் வந்துள்ள வினைகளில் செயப்படு பொருள் குன்றாத வினைகளையும், குன்றிய வினைகளையும் தனித்தனி எடுத்து எழுதுக.

# 16. கறுப்பு வைரம்

1. இரத்தின வகைகளில் வைரமே விலையுயர்ந்ததும் உறுதியானதுமாகும். வைரம் தனது ஒளியாலும் பளபளப்பாலும் மன்னர் முடியிலும், மாதர் அணியிலும், செல்வர் விரலணிகளிலும் அமைந்து பெருமை பெறுகிறது. ஆனால் 'கறுப்பு வைரம்' என அறிஞரால் போற்றப்படும் நிலக்கரியோ, தனது அரிய உபயோகத்தால், நாகரிக உலகத்திற்கே உயிர் நாடியாய் விளங்குகிறது.

2. நிலத்திலிருந்து தோண்டி எடுக்கப்படுவதால், இதனை நிலக்கரி என வழங்குகின்றனர். இது நிலத்தின் ஆழமான பகுதிகளில் பாறை பாறையாய் இருக்கிறது. இதனைச் சுரங்கம் தோண்டி எடுக்கிறார்கள். முற்காலங்களில் பெருங் காடுகளாய் இருந்து பூகம்பத்தாலோ அல்லது வேறு காரணங்களாலோ பூமியிற் புதைந்து போன மரங்களே நிலக்கரியாய் மாறுகின்றன. பூமியின் உட்பாகம் வெப்பமானது. புதையுண்ட மரங்கள் பூமியின் அழுத்தத்தினால் இறுகியும், வெப்பத்தினால் கருகியும் கரியாய் மாறுகின்றன.

3. கரிச் சுரங்கங்களில் கரி எடுக்கும் தொழிலாளர்கள் இருபக்கமும் கூர்மையுடையதும், மரப்பிடியோடு கூடியதுமான நீண்ட கோடரியால் அதை வெட்டி எடுப்பர். சிற்சில இடங்களில் கடப்பாரைகளால் பெயர்த்து எடுப்பதுமுண்டு. பெரிய அடுக்குகளாய் உள்ள இடங்களில் வெடிகள் வைத்தும் கரியைப் பெயர்ப்பர். கரி அடுக்குகள் சிற்சில இடங்களில் மூன்று அங்குலக் கனமும், சில இடங்களில் பத்து அல்லது பன்னிரண்டு

அடிக் கனமும் உள்ள பாறைகளாய் படிந்திருக்கும்.

4. சுரங்கத்தில் பெயர்க்கப்பட்ட கரியைச் சிறு கட்டிகளாக உடைத்து, ஆடவரும் பெண்டிரும் சிறுவர்களும் கூடைகளில் நிரப்பி மேலே கொண்டு வந்து சேர்ப்பார்கள். பெரிய சுரங்கங்களில் கரிப் பாறைகளை வெட்டுவதற்கும், மேலே கொண்டு வருவதற்கும் எந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுரங்கங்கள் பூமியின் அடியில் இருப்பதால், மழை நீர் சுரங்கங்களுள் சென்று தேங்கும். அந்நீரை எந்திரங்களின் உதவியால் வெளிப்படுத்துவார்கள். சிற்சில சமயங்களில் சுரங்கங்களில் உண்டாகும் நச்சுக் காற்றுக்கள் கரித்தூள்களுடன் கலப்பதால் வெடி விபத்து ஏற்படுவதுமுண்டு.

5. கரிச் சுரங்கங்களுள் இருள் நிறைந்திருக்கும். அங்குச் சாதாரண விளக்கை எடுத்துச் செல்லுதல் மிக்க ஆபத்தை விளைக்கும். சுரங்கங்களில் இருளை ஒழிக்க மின்சார விளக்குகளும், நச்சுக் காற்றை வெளிப்படுத்த மின்சாரவிசிறிகளும் அமைக்கப்பட்டுள்ளன. நமது அரசாங்கத்தார் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்யும் வேலையாட்களையும் அவர்கள் கருவிகளையும் நன்கு மேற்பார்வை செய்து வருகின்றனர்.

6. நமது நாட்டில் அஸ்ஸாம், பலுச்சிஸ்தானம், ஐதராபாத், வங்காளம், பீகார் முதலிய இடங்களில் நிலக்கரி மிகுதியாக வெட்டியெடுக்கப்படுகின்றது. நமது தென்னாட்டில் தென்ஆற்காடு ஜில்லாவில் நெய்வேலி என்னுமிடத்தில் பழுப்பு நிறமான ஒரு வகை நிலக்கரிச் சுரங்கம் உள்ளது.

நமது அரசியலார் மேற்பார்வையில் அவ்விடத்தில் நிலக்கரியைத் தோண்டியெடுக்கும் வேலைகளும் தொடங்கப் பெற்றுள்ளன. இந்திய நிலக்கரிச் சுரங்கங்களைப் பற்றிக் கூறும் அறிஞர்கள், ஏறக் குறைய இன்னும் மூவாயிரம் ஆண்டுகட்கு இந்திய நிலக்கரிச் சுரங்கங்களில் நிலக்கரி கிடைக்கும் என்று கூறுகின்றார்கள்.

7. நமது நாட்டில் கிடைக்கும் நிலக்கரியில் பெரும்பகுதி புகை வண்டிகளுக்கும், சிறு பகுதி நகரங்களிலுள்ள பெரிய தொழிற்சாலைகட்கும் பயன்படுத்தப்படுகின்றன. நீராவிக் கப்பல்களுக் கும் மின்சார உற்பத்தி நிலையங்கட்கும் நிலக்கரி தேவைப்படுகிறது. நம் நாட்டில் உபயோகப் பட்டது போக, எஞ்சியுள்ள கரியைச் சிங்கப்பூர், எகிப்து முதலிய நாடுகளுக்கு அனுப்புகின்றனர்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| இரத்தினம் | கருகி | தேவை |
| விரலணி | இறுகி | மூவாயிரம் |
| நிலக்கரி | கோடரி | பெரும்பகுதி |
| சுரங்கம் | நிரப்பி | சிறுபகுதி |
| புதைந்து | முடி | கடப்பாரை |
| உடைத்து | நச்சு | மேற்பார்வை |
| வைரம் | விபத்து | பெயர்த்து |
| பாறை | எஞ்சி | அழுத்தம் |

## பயிற்சி

**விடை கூறுக :**

1. *நிலக்கரி எவ்வாறு உண்டாகிறது ?*
2. *நிலக்கரி ஏன் அப்பெயர் பெற்றது ?*
3. *நிலக்கரிச் சுரங்கங்கள் எவ்வாறு அமைந்துள்ளன ?*

4. நிலக்கரி எவ்வாறு தோண்டி எடுக்கப்படுகிறது?

5. சுரங்கங்களில் தேங்கும் நீரை என்ன செய்வார்கள்?

6. சுரங்கத்தில் என்ன விபத்து நேரிடும்?

7. நமது நாட்டில் எங்கெங்கு நிலக்கரி கிடைக்கிறது?

8. நிலக்கரி எவ்வாறு பயன்படுகிறது?

## இலக்கணம்

சிறுவன் கல்வி **கற்கிருன்.**

ஆசிரியர் சிறுவனுக்குக் கல்வி **கற்பிக்கிருர்.**

இவற்றுள் முதல் வாக்கியத்தில் உள்ள 'கற்கிருன்' என்னும் வினை எழுவாயாகிய சிறுவன் தானே செய்வதாக இருக்கிறது. இது **செய்வினை** எனப்படும். இரண்டாவது வாக்கியத்தில் உள்ள 'கற்பிக்கிருர்' என்னும் வினை, எழுவாயாகிய ஆசிரியர் தானே செய்யாமல் பிறனுகிய சிறுவனைக்கொண்டு செய்வதாக உள்ளது. இது **பிறவினை** எனப்படும்.

| **தன்வினை** | **பிறவினை** |
|---|---|
| செய் | செய்வி |
| உண் | உண்பி |
| படி | படிப்பி |
| பாடு | பாடுவி |
| ஆடு | ஆட்டு |
| உருள் | உருட்டு |
| எழு | எழுப்பு |
| உருகு | உருக்கு |
| காய் | காய்ச்சு |
| படு | படுத்து |
| அருந்து | அருத்து |
| உண் | ஊட்டு |
| காண் | காட்டு |

நன்கு உச்சரித்துப் படி :

I. (1) வாழைப் பழம் பழுத்து விழுந்தது.
(2) பழம் நழுவிப் பாலில் விழுந்தது.
(3) வியாழக்கிழமை சொற்பொழிவு நிகழும்.
(4) வாழிய வாழிய வாழிய கைத்தொழில்.

II. (1) பிள்ளைகள் பள்ளிக்கூடம் சென்றார்கள்.
(2) வெள்ளிக்கிழமை பள்ளி உண்டு.
(3) வெள்ளிக்கிண்ணம் விலை மிகுதி.
(4) பள்ளத்தில் தண்ணீர் வழிந்து ஓடிற்று.

III. (1) வெல்லம் இனிப்பாய் இருக்கும்.
(2) வால் அறுந்த எலி.
(3) கொல்லையில் மிளகாய் விளைந்தது.
(4) பல்லி சுவரில் ஏறுகிறது.

நன்றாக உச்சரித்துப் படி.

| | |
|---|---|
| வலை | வளை |
| வால் | வாள் |
| பல்லி | பள்ளி |
| பால் | பாழ் |
| மலை | மழை |
| வெல்லம் | வெள்ளம் |
| கொல்லை | கொள்ளை |

வேறுபாடு அறிந்து கொள்.

| | |
|---|---|
| வாழி | வாளி |
| விலை | விளை |
| விழைவு | விளைவு |
| குளம் | குலம் |
| நீளம் | நீலம் |
| பலம் | பழம் |
| கலம் | களம் |

# 17. கடிதங்கள்

நாம் பிறருக்குச் செய்திகளை யறிவிப்பதற்குக் கடிதங்கள் வரைகின்றோம். பெற்றோர்க்கும் உறவினர்களுக்கும் எழுதும் கடிதங்கள், நண்பர்களுக்கு வரையும் கடிதங்கள், வர்த்தகர்களுக்கு வரையும் கடிதங்கள், அழைப்புக் கடிதங்கள் எனக்கடிதங்கள் பலவகைப்படும். கீழே சில மாதிரிக் கடிதங்கள் தரப்பட்டுள்ளன.

## பெற்றோர்க்கு

37, எழுபதடிச் சாலை,
ஆர். எஸ். புரம்,
கோவை,
10-1-1955.

அன்புமிக்க தந்தையவர்களுக்கு,

வணக்கம். அரையாண்டுத் தேர்வின் முடிவு நேற்று வெளியிடப்பட்டது. தமிழ்மொழித் தேர்வில் நான் அதிக மதிப்பெண் பெற்றுள்ளேன். சென்ற காலாண்டுத் தேர்விலும், இந்த அரையாண்டுத் தேர்விலும் நானே முதன்மையான மதிப்பெண் பெற்றுள்ளேன். இவ்வாண்டுத் தமிழ்ப் பரிசு எனக்குத்தான் அளிக்கப்படும் என்று எங்கள் ஆசிரியர் இன்று வகுப்பில் அறிவித்தார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தேர்வு முடிவுகளை அறிந்த மாமா, இன்று காலை

எனக்குப் புதியதொரு பவுண்டன் பேனு பரிசளித்தார். அது மிகவும் நன்ருயிருக்கிறது.

தாயார், அக்காள் யாவருக்கும் என் பணிவான வணக்கத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள மகன்,
மாணிக்கம்

திருவாளர்,
க. இரத்தினசாமி அவர்கள்,
37, பொன்னவனம் வீதி,
திருநெல்வேலி.

நண்பனுக்கு

5, புதுக்கரைச் சாலே,
சென்னே-6,
14-12-1954

அன்புமிக்க பாலு,

வரவிருக்கும் அரையாண்டுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவாய் என்று நம்புகிறேன். கிறிஸ்துமஸ் வாரம் இங்கு மிகவும் சிறப்பாக இருக்கும். இம்முறை பொருட்காட்சிச் சாலேயில் காணத் தகுந்த காட்சிகள் பல அமைக்கப்பட்டிருக்கின்றன. மின்சார இலாகாவினர் காட்சிப் பகுதியை எல்லோரும் அவசியம் காணவேண்டும். உன் தந்தையாரிடம் அனுமதி பெற்று, இங்கு வந்து, பத்து நாட்கள் தங்கியிருக்குமாறு கோருகிறேன். நீ சென்னேக்கு வந்து சேரும் நாளேயும் நேரத்தையும்

அறிவித்தால் நான் எழும்பூர் இரயில் நிலயத்திற்கு வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன்.

என் தந்தையாரிடம் என் பணிவான வணக்கத்தைத் தெரிவிக்கவும். உன் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்,
உனதன்புள்ள நண்பன்
சுந்தரம்.

| |
|---|
| செல்வன் பலராமன்,<br>27, ஆண்டிச் செட்டித் தெரு,<br>குகை, சேலம். |

## அழைப்புக்கடிதம்

'மாணவர் கழகம்',
திருவள்ளுவர் கல்வி நிலயம்,
தஞ்சாவூர்,
10-10-1954.

அன்புமிக்க பெரியீர்,

சால வணக்கம். எங்கள் கல்வி நிலயத்தில் நிறுவப்பட்டுள்ள 'மாணவர் கழக' ஆண்டு விழா 20-11-1954 அன்று நிகழவிருக்கிறது. அவ்விழாவிற்குத், தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் தலைமை தாங்க இசைந்துள்ளார்கள். தாங்கள் எங்கள் கழக விழாவிற்கு வந்திருந்து 'திருக்குறட் சிறப்பு' என்னும் பொருள் பற்றிப் பேசி, எங்களையும் எங்கள் கழகத்தையும் சிறப்

பிக்குமாறு தங்களைப் பெரிதும் வேண்டிக்கொள்கின்றேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள சிறுவன்,
பொன்னுசாமி,
(செயலாளன்.)

உயர் திருவாளர்,
புலவர் இளங்கோ அவர்கள்,
திருவள்ளுவர் நிலையம்
17, தென்னூர்ப் பெருஞ்சாலை,
திருச்சிராப்பள்ளி.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| அரையாண்டு | தேர்வு | அவசியம் |
| காலாண்டு | கழகம் | நிலையம் |
| மதிப்பெண் | தகுதி | தலைமை |
| முதன்மை | இலாகா | தயைகூர்ந்து |

## பயிற்சி

1. உன் நண்பன் அழைப்பிற்கிணங்கி நீ அவன் ஊருக்கு வருவதாக ஒரு கடிதம் எழுது.

2. உன் ஊரில் நடந்த ஒரு திருவிழாவைப்பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

## இலக்கணம்

**கோடரியால் கரியை வெட்டி எடுப்பர்.**

கோடரியால்—அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை எண், படர்க்கை இடம், மூன்றும் வேற்றுமை.

கரியை — அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை எண்; படர்க்கை இடம், இரண்டாம் வேற்றுமை.

இவ்வாறு வாக்கியங்களில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் இலக்கண அமைதி கூறுவது சொல்லிலக்கணம் கூறுவதாகும். திணை, பால், எண், இடம், வேற்றுமை என்பன பெயர்ச்சொற்களுக்கு உரிய **இலக்கணங்கள்.** பெயர்ச்சொல்லுக்கு இலக்கணம் கூறும்போது இவ்வைந்தையும் அறிந்து கூறவேண்டும்.

எடுப்பர்—இது வினைச்சொல். இதற்கும் திணை, பால், எண், இடம் என்னும் இலக்கணங்கள் உண்டு; ஆனால் வேற்றுமை கிடையாது. வினைச் சொற்கள் வேற்றுமை ஏற்க மாட்டா; ஆனல் காலம் காட்டும். ஆகவே வினைச் சொல்லுக்குச் சொல்லிலக்கணம் கூறும்போது திணை, பால், எண், இடங்களோடு வேற்றுமைக்குப் பதிலாகக் காலம் கூற வேண்டும்.

எடுப்பர்—உயர்திணை, பலர்பால், பன்மை எண், படர்க்கை இடம், எதிர்காலம்.

# 18. அரசவையில் ஒரு நாள்



1. பண்டைக் காலத்தில் தமிழகம் சேர சோழ பாண்டியர்கள் என்னும மூவேந்தரால் ஆளப்பட்டு வந்தது. சோழ அரசர்கள் உறையூரைத் தலைநகரா கக்கொண்டு சோழ நாட்டை ஆண்டு வந்தார்கள். சோழ அரசர்களில் கரிகால் வளவன் சீரும் சிறப்பு மாய் ஆட்சி நடத்திப் பேரும் புகழும் பெற்று விளங் கியவன்.

2. கரிகாலன் இளமைப் பருவத்திலேயே மிக்க மதிநுட்பம் படைத்தவன்; உலகியல் அறிவு மிகுந்தவன்; அரசர்க்கு வேண்டும் நுண்ணறிவும் நற்பண்புகளும் வாய்ந்தவன். இளமைப் பருவ முடையவனாயினும் கரிகாலன் அரசியலிற் சிறந்து விளங்கினான். அவன் எந்தக் காரியத்தையும் ஆழ்ந்து சிந்தித்து முடிவு செய்யும் இயல்புள்ள வன். எப்படிப்பட்ட சிக்கலான வழக்குகளையும்

ஆய்ந்தோய்ந்து சிந்தித்து நடுநிலை தவருமல் தீர்ப்ப ளிக்கும் நுண்ணறிவும் திறமையும் கரிகாலன்பால் இயல்பாகவே அமைந்திருந்தன.

3. ஒரு முறை, வேறுநாட்டைச் சேர்ந்த வயது முதிர்ந்த புலவர் இருவர் தமக்குள் மாறுபட்டனர். அவரவர் கட்சியே நேர்மையானது என்று இருவரும் வாதாடினர்கள். அவர்களால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. இறுதியில் அவர்களிருவரும் தம் வழக்கைச் சோழ அரசன் முன் சென்று உரைத்து நியாயம் பெறலாம் எனக் கருதி, கரிகாலன் அரச வைக்கு வந்தார்கள். அவர்கள் அதற்கு முன் கரி காலனை நேரிற் கண்டதில்லை. அரசு கட்டிலில் இளைஞனை கரிகாலன் அமர்ந்திருப்பதைக் கண்டு 'இந்த இளைஞன் நம் வழக்கைக் கேட்டுத் தீர்ப்புக் கூற வல்லவனு?' என்று இரு புலவர்களும் ஐயங் கொண்டனர்; தயங்கி நின்றனர்.

4. புலவர்கள் தயக்கத்தைக் கரிகாலன் குறிப் பால் அறிந்துகொண்டான். கரிகால் வளவன் அவர்களை யழைத்து, "புலவர்களே! நீங்கள் ஏதோ வழக்குரைக்க வந்தவர்கள் போலக் காணப் படுகின்றீர்கள். உங்கள் வழக்கைத் தீர விசாரித் துத் தீர்ப்புக் கூறத்தக்க நீதிபதி ஒருவரை அனுப்பு கின்றேன். அவரிடம் நீங்கள் தீர்ப்புப் பெற்றுச் செல்லலாம்," என்று கூறி, அரியணையை விட்டெ ழுந்து உள்ளே சென்முன்.

5. அரசவையில் இருந்தவர்கள், 'யாது நிக ழப் போகிறதோ! அரசர் எந்த நீதிபதியை அனுப் புவாரோ!' என்று திகைப்புற்றிருந்தனர். சிறிது

நேரத்தில் வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் அரச வையை அடைந்து, இருக்கையில் அமர்ந்தார். அவர் புலவர்களை நோக்கி, "'பெரியோர்களே, உங்கள் வழக்கிற்குத் தீர்ப்பளிக்குமாறு அரசர் பெருமான் எனக்குப் பணித்திருக்கிறார். உங்கள் வழக்கினை விளக்கிக் கூறுவீர்களாக," என்று கூறினார்.

6 புதிய நிதிபதியைக் கண்ட புலவர்கள் இருவரும், 'வயது முதிர்ந்த இவரே நமது வழக்கைத் தீர்க்க வல்லவர்,' என்று மனந்தேறினர்; அவரவர் கட்சியை விரிவாய் எடுத்துக் கூறினர். புதிய நீதிபதி அவர்கள் கூறினவற்றைக் கூர்ந்து கவனித்தார்; சிறிது நேரம் சிந்தனை செய்தபின், சபையோரும் வழக்குரைத்தவர்களும் வியப்புறுமாறு நேர்மையான தீர்ப்பை அளித்தார். புலவர்கள் இருவரும் அவர் கூறிய தீர்ப்பு நேர்மையானதே என்று ஒப்புக்கொண்டார்கள்,

7. 'சிக்கலான இவ்வழக்கை நேர்மையாகத் தீர்த்துவைத்த இந்த நுண்ணறிவாளர் யாவரோ!' என்று எல்லோரும் வியந்தனர். சபையோர் வியப்பைக் குறிப்பாலுணர்ந்த புதிய நீதிபதி, தாம் அணிந்து கொண்டிருந்த வேற்றுடைகளையும், நரைமுடியையும் அகற்றினார். புதிய நீதிபதி இருந்த இடத்தில் கரிகால் வளவன் புன்சிரிப்புடன் காட்சியளித்தான். அரசனின் நுண்ணறிவை எல்லோரும் பாராட்டினார்கள்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| மதிநுட்பம் | இளைஞன் | நரை |
| உலகியல் | தயக்கம் | தீர்த்து |
| நற்பண்பு | வழக்கு | சீரும் சிறப்பும் |
| அரசியல் | தீர்ப்பு | பேரும் புகழும் |
| சிக்கல் | அரியணை | ஆய்ந்தோய்ந்து |
| நுண்ணறிவு | வியப்பு | மாறுபட்டனர் |
| நியாயம் | குறிப்பு | நுண்ணறிவாளர் |
| இயல்பு | வேற்றுடை | பணித்திருக்கிறார் |
| அரசுகட்டில் | அகற்றினார் | மனந்தேறினர் |

## அருஞ்சொற் பொருள்

மதிநுட்பம் - புத்திக்கூர்மை; நற்பண்பு - நற்குணங்கள்; நுண்ணறிவு - நுட்ப புத்தி; அரசுகட்டில் - அரியணை, அரசர்கள் அமரும் சிங்காதனம்; பணித்திருக்கிறார் - கட்டளையிட்டிருக்கிறார்.

## பயிற்சி

**விடை கூறுக:**

1. கரிகால் வளவன் இயல்புகளையும் பண்புகளையும் எழுதுக.

2. புலவர்கள் சோழ அரசர் சபைக்கு ஏன் வந்தார்கள்?

3. கரிகாலனைக் கண்டதும் புலவர்கள் கருதியது யாது?

4. புலவர்கள் தயக்கத்தைக் கண்ட கரிகாலன் யாது செய்தான்?

5. புதிய நீதிபதியைக் கண்டதும் புலவர்கள் ஏன் மனந்தேறினர்?

6. புதிய நீதிபதியின் தீர்ப்பைக் கேட்ட சபையோர் என்ன கூறி வியந்தனர் ?

7. கரிகாலனே புதிய நீதிபதியாக வந்தவன் என்பதைச் சபையோர் எவ்வாறு அறிந்துகொண்டனர் ?

## இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குச் சொல் இலக்கணம் எழுதுக :

1. **ஆடு புல்லை மேய்ந்தது.**
2. **கரிகாலன் வழக்கை** விசாரித்தான்.
3. **புலவர்கள்** மகிழ்ச்சி **அடைந்தார்கள்.**
4. **பெண்கள்** மலரைப் பறித்தார்கள்.
5. **மரங்கள்** சாய்ந்து **விழுந்தன.**
6. **நான்** பாடத்தைப் **படிக்கிறேன்.**
7. **நீ** எதை வாங்கினாய்?
8. **அவர்கள்** பணத்தைப் **பெறுவார்கள்.**
9. தமிழர்கள் **இந்திரனை** வணங்கினார்கள்.
10. **மரங்கள் பழுத்தன.**

# 19. காப்பிச் செடி

1. தினந்தோறும் பலர் காப்பிப்பானம் பருகுகின்றனர் அல்லவா ? காப்பிக்கொட்டையைப் பக்குவமாக வறுத்துப் பொடி செய்து, கொதிக்கும் நீரில் அப்பொடியைத் தகுந்த அளவு சேர்த்து, வடிகட்டி, பாலும் சர்க்கரையும் கலந்து குடிக்கின்றனர். காப்பிப்பானம் சுறுசுறுப்பை அளிக்கும். ஆயினும், அதை மிதமாகவே பருகவேண்டும். அளவு மீறினுல் அமுதமும் நஞ்சாகும் அன்றே ?



2 காப்பிக்கொட்டை காப்பிச் செடியில் உண்டாகிறது. காப்பிச் செடி ஆப்பிரிக்காவில் இயற்கையாகவே வளர்ந்தது. பின்னர், அது அரேபியாவில் பயிர்செய்யப்பட்டது. அரேபியர் அதை மற்ற நாடுகளில் பரவச் செய்தார்கள். நமது நாட்டில் அச்செடி முதன் முதல் மைசூரில் பயிர்செய்யப்பட்டது.

3. சென்னை இராச்சியத்தில் நீலகிரி, சேர்வராயன், பழனி ஆகிய மலைப் பகுதிகளிலும், மைசூரின் சில பாகங்களிலும் காப்பிச் செடி பயிராக்கப்படுகிறது. அச் செடி நன்கு பயிராவதற்கு வெயிலும் மழையும் மிதமாய் இருக்க வேண்டும். வேரில் மழை நீர் தங்காத மலைச் சரிவுகளில் அச்செடி செழிப்பாக வளரும். காப்பிச் செடி சுமார் பதினெட்டு அடி உயரம் வளரும்.

ஆனால், அதை ஐந்தாறு அடிகளுக்கு மேல் வளர விடுவதில்லை. ஏனெனில், அதிக உயரம் வளர்ந்தால் அதிலிருந்து பழங்களைப் பறிப்பது அரிது. குட்டையாக வெட்டிவிட்டால், செடி தரையில் படரும்; அப்பொழுது பழங்களைப் பறிப்பது எளிது.

4. முதலில் காப்பி விதைகளை நாற்றங்காலில் இரண்டு அங்குல ஆழமுள்ள குழிகளில் புதைக்க வேண்டும்; செடிகள் முளைத்த பின்பு அவைகளை எடுத்து ஓரடி ஆழமுள்ள குழிகளில் நடவேண்டும். காப்பிச் செடியில் முதலில் வெண்மையான மலர்கள் தோன்றும்; அம்மலர்கள் நல்ல மணம் உள்ளவை. ஒவ்வொரு பூவிலிருந்தும் ஒவ்வொரு பழம் தோன்றும். பழம் சிவப்பு நிறமாய் இருக்கும். பழங்களின் உள்ளே சதைப்பற்று இருக்கும்; சதைக்குள்ளே இரண்டு கொட்டைகள் காணப்படும். அவற்றில் சில உருண்டையாயும், சில தட்டையாயும் இருக்கும். அவற்றின் நடுவில் ஒரு பிளவு காணப்படும்.

5. நட்ட இரண்டாண்டுகளில் காப்பிச்செடி பலன் அளிக்கும். சித்திரை, வைகாசி மாதங்களில் பழங்கள் முற்றும். அப்பொழுது அவற்றைப் பறித்துச் சேகரிப்பார்கள். பழத்தின் மேலுள்ள தோலை நீக்கிக் கொட்டைகளை வெயிலில் உலர்த்துவார்கள். பின்பு அவற்றைச் சுத்தம் செய்வார்கள். கொட்டைகளை விற்றுப் பொருள் ஈட்டுவார்கள்.

6. தென் அமெரிக்காவில் பிரேஸில் என்னும் நாட்டில் காப்பிக்கொட்டை மிகுதியாகப் பயிர் செய்யப்படுகிறது. இலங்கையில் பலவிடங்களிலும் அது பயிராகிறது. காப்பியை மிதமின்றிப் பருகினால்

பசி ஏற்படாது; செரிக்கும் சக்தியும் குறையும்; பிற்காலத்தில் நீரிழிவு போன்ற நோய்களும் உண்டாகும். மிதமாகப் பருகினல் செரிக்கும் சக்தியும் சுறு சுறுப்பும் உண்டாகும்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| பக்குவம் | உருண்டை | நீரிழிவு |
| மிதமாய் | தட்டை | பதினெட்டு |
| ஏனெனில் | பிளவு | வடிகட்டி |
| கடினம் | முற்றும் | சதைப்பற்று |
| படரும் | செரிக்கும் | ஈட்டுவார்கள் |
| பறிப்பது | அரிது | தங்காத |

## பயிற்சி

I. விடை கூறுக :

1. காப்பிச் செடி இயற்கையாகவே எங்கு வளர்ந்தது?
2. நம் நாட்டில் முதன்முதல் காப்பி எங்குப் பயிர் செய்யப்பட்டது?
3. நம் இராச்சியத்தில் காப்பிச் செடி பயிரிடப் படும் இடங்கள் யாவை?
4. காப்பிச் செடியை ஏன் அதிக உயரமாக வளர விடுவதில்லை?
5. காப்பிச் செடியைப் பயிரிடுவது எவ்வாறு?
6. காப்பிப் பழத்தின் தோற்றத்தை விவரிக்க.
7. பழங்களை எப்பொழுது சேகரிப்பார்கள்?
8. காப்பிப் பானம் பருகுவதால் உண்டாகும் பயன் என்ன?
9. காப்பிப் பானம் எவ்வாறு தயாரிக்கின்றனர்?

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. காப்பிச் செடி சுமார் —— ——உயரம் வளரும்.
2. காப்பி மலர்கள் —— —— உள்ளவை.
3. கொட்டைகளை விற்றுப் பொருள்——.
4. காப்பியை——பருகினல்——ஏற்படாது.

## இலக்கணம்

கரி + காலன் = கரிகாலன்
காப்பி + செடி = காப்பிச் செடி

இவற்றுள் ஒவ்வொன்றிலும் இரண்டு இரண்டு சொற்கள் சேர்ந்திருக்கின்றன. இவ்வாறு இரு சொற்கள் ஒன்றேடு ஒன்று சேரும் சேர்க்கை, **புணர்ச்சி** எனப்படும்.

இவற்றுள் முதலில் நிற்கும் சொல் **நிலைமொழி.** அதனேடு சேர வரும் சொல் **வருமொழி.** புணர்ச்சியில் நிலைமொழியின் கடைசி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் ஒன்றேடு ஒன்று சேரும்.

கரி + காலன் = கரிகாலன்
மதி + நுட்பம் = மதிநுட்பம்

இவ்வாறு இரு சொற்கள் புணரும்போது அவை, எவ்வித வேறுபாடும் அடையாமல் முன் இருந்தபடியே புணர்வதுண்டு. இது **இயல்புப் புணர்ச்சி** எனப்படும்.

காப்பி + செடி = காப்பிச் செடி
மின்சாரம் + இலாகா = மின்சார இலாகா

இவ்வாறு இரு சொற்கள் புணரும்போது அவை சிறிய வேறுபாடு அடைந்து புணர்வதும் உண்டு. இது **விகாரப் புணர்ச்சி** எனப்படும்.

ஏன் + எனில் = ஏனெனில்
மேல் + உள்ள = மேலுள்ள

மெய்யெழுத்தைக் கடைசியில் உடைய நிலைமொழியின் முன், உயிரெழுத்தை முதலில் உடைய வருமொழி வந்து புணரும்போது, அம்மெய்யெழுத்தும் உயிரெழுத்தும் சேர்ந்து உயிர் மெய் யெழுத்தாகிப் புணரும்.

கல் + உரல் = கல்லுரல்
கண் + இமை = கண்ணிமை

நிலைமொழியின் கடைசியில் உள்ள மெய்யெழுத்து தனிக் குற்றெழுத்தை அடுத்து வந்திருந்தால், அதன் முன் உயிரெழுத்து வரும்போது, இரட்டித்துப் புணரும்.

# 20. மாணவர் கழக விழா

1. எங்கள் பள்ளியில் நாங்கள் அமைத்திருக்கும் 'திருவள்ளுவர் மாணவர் கழகத்தின்' ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்குப் பாடசாலைகளின் தணிக்கையாளர் தலைமைவகித்து எங்களுக்கு அறிவுரை கூறினர். அவர் கூறியதாவது :

2. "அன்பார்ந்த மாணவர்களே ! சிறுவர்களாகிய நீங்கள் ஒற்றுமையாக நின்று கழகம் அமைத்துச் சிறந்த முறையில் செயலாற்றிவருவதையறிந்து மனம் மகிழ்கிறேன். ஒவ்வொரு பள்ளியிலும் இது போல் கழகங்கள் அமைக்கப்பெற்று நடைபெற்று வந்தால் மாணவர்கள் ஒப்புரவிலும், சமூக அறிவிலும் சிறந்து விளங்குவார்கள் என்பதற்கு ஐயம் இல்லை.

3. "நீங்கள் எல்லோரும் குடும்பத்தில் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறீர்கள். குடும்பத்திலுள்ள அனைவரும் ஒற்றுமையாக இருந்தால்தான் குடும்ப வாழ்க்கை இன்பமாக இருக்கும். உங்கள் கிராமத்தில் பல குடும்பத்தினர் வசிக்கின்றனர் அல்லவா? கிராமத்திலுள்ள அனைவரும் ஒருவர்க்கொருவர் அக்கம்பக்கத்தினர். அக்கம்பக்கத்தார்களை நீங்கள் உங்கள் உடன் பிறந்தவர்களாகக் கருதவேண்டும். பல குடும்பங்கள் சேர்ந்த தொகுதியே சமூகம் எனப்படும். குடும்பத்தில் நீங்கள் எவ்வாறு ஒற்றுமையாக இருந்து வருகிறீர்களோ அதேபோல, சமூகத்திலும் ஒற்றுமையாக இருந்து வரவேண்டும். ஒற்றுமை இருந்தால்தான் சமூக வாழ்க்கை நலந்தருவதாகும்.

4. "'பல துளி பெரு வெள்ளம்' என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். மலையில் பொழியும் சிறு மழைநீர்த் துளிகள் ஒன்று சேர்ந்துதான் ஆற்றில் வெள்ளமாகக் கரைபுரண்டு வருகிறது. நீர்த்துளி தனியாக இருக்கும்போது அதற்கு. எவ்விதச் சக்தியும் இருப்பதில்லை; அது சூரிய வெப்பத்தால் ஆவியாகி மறைந்து விடுகிறது. ஆனால் பல நீர்த்துளிகள் சேர்ந்து பெருகும் ஆற்று வெள்ளத்திற்குள்ள சக்தி அளவிடற்கரிது; அது வானளாவிய பெரு மரங்களையும் பெயர்த்துத் தள்ளுகிறது; ஓங்கி உயர்ந்த கரைகளையும் உடைத்தெறிந்து ஓடுகிறது; உறுதியாகக் குறுக்கே கட்டப்பட்டுள்ள கற்பாலங்களையும் தகர்த்துத் தள்ளுகிறது; பெரிய நகரங்களையும் அழித்துவிடுகிறது.

5. "மனிதன் ஒருவன் தனித்திருக்கும்போது இவன் சக்தியற்றவனாய் இருக்கிறான். ஆனால் பல மனிதர்கள் ஒன்று சேர்ந்துவிட்டால் செயற்கரிய செயல்களை விரைவில் செய்து முடிக்க முடிகிறது. ஆகவே, சமூகம் ஒற்றுமையாக ஒன்று கூடிச் செயலாற்றினால்தான் மக்கள் சிறப்புடன் வாழ முடியும். சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை.

6. "குடும்பத்திலுள்ளவர்கள் எப்படி ஒருவர்க்கொருவர் உயர்வு தாழ்வு கருதுவதில்லையோ அதுபோலவே, சமூகத்திலும் உயர்வு தாழ்வு கருதக் கூடாது. மக்கள், சாதி, சமய, இன வேறுபாடுகளைப் பாராட்டக் கூடாது. வேற்றுமை ஒழித்து ஒற்றுமை காணவேண்டும். ஆண்டவன் முன் ஏழையும் செல்வனும் சரி சமமான மதிப்புடை

யவர்களே. ஆகவே, எல்லோரும் ஒரே குலம், எல்லோரும் ஒரே தாய்வயிற்று மக்கள் என்னும் பரந்த மனப்பான்மை கொண்டு வாழவேண்டும். கவியரசர் பாரதியார் "எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்திய மக்கள்" என்று கூறியதை எப்பொழுதும் மனத்தில் கொள்ள வேண்டும். சிறுவர்களாகிய நீங்கள் இந்த இளம் பருவத்திலேயே இவற்றை நன்குணர்ந்து ஒழுக வேண்டும். இன்றைச் சிறுவர்களாகிய நீங்களே நாளை இந்தியக் குடிமக்களாக விளங்குவீர்கள். உங்களுக்கு நிறைந்த அறிவும், நீண்ட ஆயுளும் நல்க இறைவனை வேண்டுகின்றேன்," என்று கூறி, தமது சொற்பொழிவை முடித்தார்.

4. எங்கள் தலைமை ஆசிரியர் தலைவருக்குப் பூமாலைகள் அணிவித்துச் சிறப்பித்தார். இறுதியில் எங்கள் கழகச் செயலாளர் பொன்னுசாமி நன்றி கூற, விழா இனிது முடிந்தது.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| தொகுதி | விரைவில் | தணிக்கையாளர் |
| சமூகம் | பெயர்த்து | செயலாற்றி |
| வலிமை | தகர்த்து | அளவிடற்கரிது |
| இனம் | கற்பாலம் | வானளாவிய |
| வேறுபாடு | சொற்பொழிவு | செயற்கரிய |

## பயிற்சி

விடை கூறுக:

1. 'சமூகம்' என்பது என்ன?

2. பெருவெள்ளத்தின் தன்மை என்ன?

3. 'பல துளி பெரு வெள்ளம்' என்பது எதை எடுத்துக் காட்டக் கூறப்பட்டது?

4. எவ்வாறான வேற்றுமைகளை ஒழித்து ஒற்றுமை காண வேண்டும்?

89445
சென்னை-600 008.

## இலக்கணம்

**காபி + செடி = காப்பிச் செடி**
**நீர் + துளி = நீர்த் துளி**

இச்சொற்கள் புணரும்போது முன் இல்லாத ஓர் எழுத்துப் புதிதாகத் தோன்றியுள்ளது. இது **தோன்றல் விகாரம்** அல்லது **மிகுதல் விகாரம்** எனப்படும்.

பின் + காலம் = பிற்காலம்
சொல் + பொழிவு = சொற்பொழிவு

இச்சொற்கள் புணரும்போது முன் இருந்த ஓர் எழுத்து, வேறோர் எழுத்தாகத் திரிந்துள்ளது. இது **திரிதல் விகாரம்** எனப்படும்.

மின்சாரம் + இலாகா = மின்சார இலாகா
சூரியன் + வெப்பம் = சூரிய வெப்பம்

இவற்றுள் முன் இருந்த ஓர் எழுத்து இல்லாமல் கெட்டு உள்ளது. இது **கெடுதல் விகாரம்** எனப்படும்.

மணி + அடி = மணியடி
தீ + ஒளி = தீயொளி
மலை + அருவி = மலையருவி

இ, ஈ, ஐ என்னும் உயிரெழுத்துக்களுள் ஒன்றைக் கடைசியில் உடைய நிலைமொழியின் முன் உயிரெழுத்தை முதலிலே உடைய வருமொழி வந்தால் இடையில் 'ய்' என்னும் மெய்யெழுத்தைப் பெற்றுப் புணரும்.

பல + ஆறு = பலவாறு
நிலா + ஒளி = நிலாவொளி
திரு + அடி = திருவடி
பூ + இதழ் = பூவிதழ்
தே + ஆலயம் = தேவாலயம்
கோ + இல் = கோவில்

இவற்றுள் இ, ஈ, ஐ என்னும் மூன்றும் அல்லாத மற்ற உயிரெழுத்துக்களைக் கடைசியிலே உடைய நிலைமொழிகளின் முன், உயிரெழுத்தை முதலிலே உடைய வருமொழி வந்து புணரும்போது, இடையில் 'வ்' என்னும் மெய்யெழுத்து வந்துள்ளது.

# 21. இறந்தவன் எழுந்தான்!

## காட்சி 1

**இடம் :** கிருஷ்ணதேவராயர் அரசவை
**காலம் :** பகல்
**நடிகர் :** இராயர், அப்பாஜி, இராமன், காவலர்கள்.

இராயர் : அப்பாஜி! நம் இராமனை ஏன் இரு தினங்களாகக் காணவில்லை ?

அப்பாஜி: அரசே, அவனுக்கு உடல் நலமில்லை என்று கூறிக்கொண்டார்கள். நமக்கு இது வரையில் தகவல் இல்லை.

(தெனாலிராமன் சோர்ந்த நடையுடன் சபைக்குள் வருகிறான்.)

இராமன் : மன்னர் மன்னவா, வணக்கம்.

இராயர் : இராமா, எங்கே உன்னை இரண்டு நாட்களாகக் காணவில்லை ? ஏன் சோர்ந்து போயிருக்கிறாய்?

இராமன் : அரசே, அதைச் சொல்லவும் நா எழவில்லை. விதியை வெல்ல யாரால் இயலும் ? சோதிடர்கள் நான் இன்னும் நாலைந்து நாட்களில் இறந்துவிடுவேன் என்று சொன்னார்கள். அதற்கேற்ப இரண்டு நாட்களாகவே உடல் நலம் குன்றியிருக்கிறது.

இராயர் : என்ன, சோதிடர்கள் கூறினார்களா ?

இராமன் : மன்னவ, மெய்யாகவே நான் பிறந்தபோதே அதனைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அந்த நாளும் நெருங்கி விட்டது. நமது அரசவைச் சோதிடர்கூட அவ்வாறுதான் கூறினர்.

இராயர் : நமது சோதிடரா கூறினர்?

இராமன் : ஆம், அரசே. அதுதான் எனக்கும் கவலையாக இருக்கிறது. என் மனைவி மக்களின் கதி என்னுவது என்பதே என் கவலை.

இராயர் : இராமா, அதுபற்றி நீ சிறிதும் கவலைப்பட வேண்டாம். ஒருக்கால் அப்படி ஏதாகிலும் நேர்ந்துவிட்டால், உயிர் உள்ளளவும் நான் அவர்களைக் காப்பாற்றுவேன்.

இராமன் : வேந்தே, இந்த உறுதிமொழி ஒன்றே போதுமானது. இனி நான் எள்ளளவும் கவலையில்லாமல் இறப்பேன். என் மனைவி இத்தனை நாள் ஏதோ பேதையாக வாழ்ந்துவிட்டாள். அவள் ஒன்றும் அறியாதவள்; மக்களும் சிறுவர்கள். உங்களை நம்பித்தான் நான் இறைவன் திருவடிகளைச் சேர்வேன்.

## காட்சி 2

| | |
|---|---|
| இடம் : | இராயர் அரண்மனை |
| காலம்: | காலை |
| நடிகர் : | இராயர், காவலாள் |

(காவலாள் தெனுலி ராமன் இறந்துவிட்டான் என்று இராயரிடம் செய்தி அறிவிக்கிருன்.)

இராயர் : ஆ! இராமன் இறந்து விட்டானு! என் செவிகளை நம்ப முடியவில்லையே! நான் கேட்கும் செய்தி உண்மைதானு?

**காவலாள் :** மெய்தான், அரசே. நமது விகட கவியார் நேற்று நள்ளிரவில் இறந்து போனாராம். இன்று விடியற்காலையில் அவரை அடக்கம் செய்து விட்டார்களாம்.

**இராயர் :** கொடிது, கொடிது! அவன் வீட்டிற்குச் சென்று அவன் மனைவி மக்களுக்கு ஆறுதல் கூறுவோம்.

**தன்னுள் :** அவன் இறந்திருந்தால் நமக்கு உடனே அறிவிக்காமல் இருக்கமாட்டார்கள். நமக்குத் தெரிவிக்காமல் அடக்கமும் செய்ய மாட்டார்கள். இதில் ஏதோ சூது இருக்கிறது. வழக்கம் போலவே இராமன் ஏதாவது,குறும்புத்தனம் செய்திருப்பான். எதற்கும் அவன் வீட்டிற்குச் சென்று பார்ப்போம்.

**இராயர் :** காவலா, மற்றக் காவலர்களையும் அழைத்துக்கொண்டு வா. எல்லோரும் இராமன் வீட்டிற்குச் செல்வோம்.

## காட்சி 3

| | |
|---|---|
| **இடம் :** | தெனாலிராமன் வீடு |
| **காலம் :** | முற்பகல் |
| **நடிகர் :** | இராயர், இராமன் மனைவி மக்கள், காவலர்கள், |

(இராயரும் காவலர்களும் இராமனுடைய வீட்டிற்கு வந்து சேர்கிறார்கள்.)

**இராமன் மனைவி :** மன்னர் மன்னவா! வர வேண்டும்.

**இராயர் :** அம்மா, உன் கணவர் மறைந்தது பற்றி என்போல் வருந்துபவர்கள் வேறு எவருமிரார்.

இறைவன் விதித்த விதியை யாரால் மாற்ற முடியும்? நாம் என்ன செய்யலாம்! மனந்தேறிக் கொள்வதே அறிவுடைமை.

இ. மனைவி: அரசர்க்கரசே, நான் ஒரு பேதை; என் மக்களும் சிறுவர்கள். என் கணவரும் தங்களை நம்பியே ஒன்றும் அதிகமாகச் சேமித்து வைக்காமல் போய்விட்டார்.

இராயர்: ஆம், அம்மா. அதற்கு நாம் என்ன செய்யலாம்? ஒவ்வொருவரும் தம் வாழ் நாளில், பிற்காலத்திற்கு வேண்டுமே என்று சேமித்து வைக்கத்தான் வேண்டும். இராமன் இதில் தவறி விட்டால் அதற்கு யார் ஈடு செய்ய முடியும்? உள்ளதைக் கொண்டு அமைதியடைய வேண்டுவது தான் நேர்மை.

இ. மனைவி: ஐயா, எனக்கு என் உடன் பிறந்தார் தவிர வேறு யாரும் ஆதரவளிப்பார் கிடையாது.

இராயர்: அவர்களிடமே சென்று இருங்கள். அம்மணி. உங்களுக்குள்ள செல்வங்களை என்னிடம் அடைக்கலமாக வைத்துச் செல்லுங்கள். உங்களுக்கு வேண்டும்பொழுது என்னிடம் பெற்றுச் செல்லுங்கள்.

இ. மனைவி: அப்படியே செய்வேன், அரசே, [ஒரு பெரிய பெட்டியைச் சுட்டிக் காட்டி] ஐயா, அதோ அந்தப் பெட்டியிருக்கிறதே, அதுதான் எங்கள் செல்வம். அதனைத் தாங்கள் பாதுகாத்துத் தந்தால் அதுவே எங்களுக்குப் பேருதவியாகும்.

இராயர்: அப்படியே செய்வேன், அம்மணி. நீங்கள் அமைதியாக உங்கள் பிறந்தகத்தில் போய்

இருந்து வாருங்கள். நான் இந்தப் பெட்டியை இப்பொழுதே எடுத்துச் செல்கிறேன்.

## காட்சி 4

| | |
|---|---|
| **இடம் :** | *அரசவை* |
| **காலம் :** | *முற்பகல்* |
| **நடிகர் :** | *இராயர், அப்பாஜி, இராமன், காவலர்கள்.* |

இராயர் : அப்பாஜி, இந்தப் பெட்டியை இராமன் வீட்டிலிருந்து எடுத்து வந்தேன். அவன் சேமித்து வைத்திருந்த விலையுயர்ந்த பொருள்களெல்லாம் இதனுள் இருக்கின்றனவாம்.

அப்பாஜி : இருக்கலாம். இருப்பினும் நாம் அதனுள் என்னென்ன இருக்கின்றன என்று பார்த்து விடுதல் நலம் எனக் கருதுகிறேன்.

இராயர் : ஆம், அப்படியே செய்வோம்.

*(காவலர்கள் பெட்டியைத் திறக்கிறார்கள். இராமன் துள்ளிக் குதித்து வெளியே வருகிறான்.)*

இராயர் : யார், இராமனா அல்லது அவனுடைய ஆவியா ?

அப்பாஜி : இராமனே தான் !

இராயர் : இராமா, என்ன அதிசயம் இது ? நீ இறந்து போகவில்லையா ?

இராமன் : அரசே, உங்களை நம்பி நான் உயிர் விடலாமா ! நீங்கள் கொடுத்த வாக்குறுதி என்ன ? நீங்கள் நடந்து கொண்டது என்ன ?

இராயர் : அப்படியா ! என்னைச் சோதனை செய்தாயா ? நீ அப்படி ஏதாவது செய்வாய் என்று

நானறிவேன். அதனால்தான் இவ்வாறு நடந்து கொண்டேன். உன் குறும்புத் தனத்தை நான் அறிய மாட்டேனா?

(சபையில் எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| சோர்ந்த | பேதை | மனந்தேறி |
| எழவில்லை | கொடிது | ஒருக்கால் |
| சோதிடர் | ஆறுதல் | உள்ளளவும் |
| காவலர் | உறுதிமொழி | எள்ளளவும் |
| நள்ளிரவு | பிற்காலம் | எவருமிரார் |
| விதி | அடைக்கலம் | அறிவுடைமை |
| ஏற்ப | வாக்குறுதி | ஆவி |

## இலக்கணம்

செடி + தழைத்தது = செடி தழைத்தது.
பொழுது + புலர்ந்தது = பொழுது புலர்ந்தது.

இவற்றுள் சொற்கள் எழுவாயும் பயனிலையுமாக உள்ளன. அதனால் வல்லெழுத்து மிகாமல் இயல்பாகப் புணர்ந்துள்ளன. இவ்வாறே நிலைமொழியும் வருமொழியும் எழுவாயும் பயனிலையுமாகப் புணரும்பொழுது இயல்பாகப் புணரும்.

பழத்தை + பறிப்பர் = பழத்தைப் பறிப்பர்.
விளக்கு + கொடுப்பர் = விளக்குக் கொடுப்பர்.

இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை உருபேற்ற சொற்களின் முன், வல்லெழுத்து மிகுந்துள்ளது. இவ்வாறே, இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை உருபேற்ற நிலைமொழிகளின் முன், வல்லெழுத்தை முதலிலே உடைய வருமொழி வந்தால் மிகுந்து புணரும்.

**ஓடி + போனான் = ஓடிப் போனான்.**
**எடுத்து + கொடுத்தான் = எடுத்துக் கொடுத்தான்.**

வினையெச்சங்களின் முன் வல்லெழுத்து மிகுந்திருக்கிறது. சில வினையெச்சங்களின் முன் வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால் மிகுந்து புணரும்.

**கண்ட + காட்சி = கண்ட காட்சி.**
**படித்த + பாடம் = படித்த பாடம்.**

பெயரெச்சங்களின் முன் வல்லெழுத்து மிகாமல் இயல்பாகப் புணர்ந்துள்ளது. பெயரெச்சங்களின் முன் வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால் மிகாது; இயல்பாகப் புணரும்.

# செய்யுட் பாடங்கள்

## I. வணக்கம்

### 1. கலைமகள்

வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள் ;
வீணை செய்யும் ஒலியி லிருப்பாள் ;
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள் ;

உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள் நின் ,றொளிர்வாள் ;
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்.

—பாரதியார்

### 2. பரம்பொருள்

சூரியன் வருவது யாராலே ?
சந்திரன் திரிவது எவராலே ?
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணிற்படுவன அவை என்ன ?

பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வது எவராலே ?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி ?
அதைநாம் எண்ணிட வேண்டாவோ? (1)

அல்லா என்பார் சிலபேர்கள் ;
அரன் அரி என்பார் சிலபேர்கள் ;
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள் ;

சொல்லால் விளங்கா ' நிர்வாணம் '
என்றும் சிலபேர் சொல்வார்கள்.
எல்லாம் இப்படிப் பலபேசும்
ஏதோ ஒரு பொருள் இருக்கிறதே ! (2)

அந்தப் பொருளை நாம் நினைந்து
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்.
எந்தப் படியாய் எவர் அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன ?

நிந்தை பிறரைப் பேசாமல்,
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம் ; அதை வணங்கிடுவோம்
வாழ்வோம்; சுகமாய் வாழ்ந்திடுவோம். (3)

—வே. இராமலிங்கம் பிள்ளை

## II. நீதி

### 1. மூதுரை

நீரளவே யாகுமாம் நீராம்பல் ; தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு ;—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம் ;
குலத்தளவே யாகுமாம் குணம். (1)

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையா தாம் ;—கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல். (2)

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடதாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல் ;—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மே லிட்ட கலம். (3)

அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர் ;—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு. (4)

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையுங் காப்பார் அறிவுடையோர் ;—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். (5)

—ஔவையார்

## 2. நல்வழி

ஆற்றுப் பெருக்கற்(று) அடிசுடும்அந்
நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் ;—ஏற்றவர்க்கு
நல்ல-குடிபிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. (1)

மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை ;—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா(து) அளிப்பரேல்,
உற்றா(ர்) உலகத் தவர். (2)

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் ;
வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது;—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். (3)

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு ;—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் ; கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். (4)

ஆவாரை யாரே யழிப்பார்? அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பிப்பார்?—ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல்? (5)

—ஔவையார்

## 3. நீதி வெண்பா

ஈக்கு விடந்தலையி(ல்); எய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே;—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே; துர்ச்சனர்க்(கு)
அங்குமுழு தும்விடமே யாம். (1)

கொம்புளதற் கைந்து; குதிரைக்குப் பத்துமுழம்;
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே;—வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. (2)

கற்பூரம் போலக் கடலுப்(பு) இருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு!—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல்? (3)

இன்னல் தரும்பொருளை ஈட்டுதலும் துன்பமே;
பின்னதனைப் பேணுதலும் துன்பமே;—அன்ன(து)
அழித்தலும் துன்பமே; யந்தோ! பிறர்பால்
இழத்தலும் துன்பமே யாம். (4)

### 4. விவேக சிந்தாமணி

ஒப்புடன் முகம்ம லர்ந்தே
உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலும்
உண்பதே அமுதம் ஆகும் ;
முப்பழ மொடுபால் அன்னம்
முகம்கடுத் திடுவர் ஆயின்
கப்பிய பசியி னோடு
கடும்பசி ஆகுந் தானே. (1)

ஆபத்துக் குதவாப் பிள்ளை,
அரும்பசிக் குதவா அன்னம்,
தாபத்தைத் தீராத் தண்ணீர்,
தரித்திர மறியாப் பெண்டிர்,
கோபத்தை அடக்கா வேந்தன்,
குருமொழி கொள்ளாச் சீடன்,
பாபத்தைத் தீராத் தீர்த்தம்
பயனில்லை ஏழுந்தானே. (2)

## III. சதகச் செய்யுட்கள்

### 1. திருவேங்கடசதகம்

சந்திரன் இலாஇரவு, மதுரமில் லாதகவி,
தனயரில் லாத செல்வம்,
சற்சனர் இலாதவூர், புரவியில் லாதபடை,
தளபதிஇல் லாத சேனை,
பைந்தொடி யிலாதமனை, பாடலில் லாவோசை,
பத்தியில் லாத பூசை,
பார்த்திப ரிலாதபட் டணம், யூக மந்திரிகள்
பற்பலர் இலாத வரசு,

கந்தமில் லாத மலர், சத்தியமில் லாத வாய்,
கல்வியில் லாத தேகம்,
கனவினய மில்லா நியோகி, சுசி யில்லாத
கன்மம், உப தேசமில்லா

மந்த்ரமிதை வித்வசன மில்லாத சபைஎன்பர் ;
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே!
வரதவேங் கட ராயனே.

## 2. அறப்பளீச்சுர சதகம்

வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டும் ; கற்ற
வழியிலே நிற்க வேண்டும் ;
வளைகடல் திரிந்து பொருள் தேடவேண்டும்; தேடி
வளர் அறம் செய்ய வேண்டும் :

சீலமுடை யோர்களைச் சேரவேண்டும் ; பிரிதல்
செய்யா திருக்க வேண்டும் ;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண்டும்; கொண்டு
தியாகம் கொடுக்க வேண்டும் ;

ஞாலமிசை பல தருமம் நாட்டவேண்டும் ; நாட்டி
நன்றாய் நடத்த வேண்டும் ;
நம்பனிணை அடிபூசை பண்ணவேண்டும்; பண்ணி
னுலுமிகு பக்தி வேண்டும் ;

ஆலமமர் கண்டனே ! பூதியணி முண்டனே !
அநக ! எம தருமை மதவேள் !
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீச் சுர தேவனே !

# IV. பல வகை

## 1. வெண்ணிலா

மீன்கள் கோடி கோடிசூழ
வெண்ணிலாவே !—ஒரு
வெள்ளியோடம் போலவரும்
வெண்ணிலாவே ! (1)

வளர்ந்து வளர்ந்துவந்த
வெண்ணிலாவே !—பகல்
வாடிவாடிப் போவதேனோ?
வெண்ணிலாவே ! (2)

பந்தடிப்போம் உன்னையென்று
வெண்ணிலாவே !—நீயும்
பாரில்வர அஞ்சினையோ
வெண்ணிலாவே ! (3)

ஆழியும் நீ வரக்கண்டு
வெண்ணிலாவே !—குதித்(து)
ஆடுவதெக் காரணமோ?
வெண்ணிலாவே ! (4)

ஆதாரம் ஒன்றில்லாமல்
வெண்ணிலாவே !—நீயும்
அந்தரத்தில் நிற்பதேனோ?
வெண்ணிலாவே ! (5)

சுற்றித் திரிவது மேன்?
வெண்ணிலாவே—உனக்குச்
சொந்தஇடம் ஒன்றில்லையோ?
வெண்ணிலாவே ! (6)

அண்டிவாராய் நீ யெனினும்
வெண்ணிலாவே !—இன்னும்
அகன்றெங்கும் போய்விடாதே
வெண்ணிலாவே ! (7)

பறக்கச் சிறகிருந்தால்
வெண்ணிலாவே ?—என்றன்
பக்கம் வந்து சேருவேனே
வெண்ணிலாவே ! (8)

பால்போல் நிலவெறிக்கும்
வெண்ணிலாவே !—உன்றன்
பாங்கில்விளை யாட வாராய்
வெண்ணிலாவே ! (9)

பாங்கில்விளை யாடவந்தால்
வெண்ணிலாவே !—நல்ல
பால்தருவேன் ; பழந்தருவேன்
வெண்ணிலாவே ! (10)

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

## 2. புதிய மாடு

இட்டமுடன் முதலியார் வாங்கிவந்த
காளை தினம் இருபோர் தின்னும் ;
சட்டமுடன் கொள்ளுண்ணும்; புல்லுண்ணும்;
அதைப்பண்டி தன்னிற் பூட்டக்
கிட்டவரின் முட்டவரும் ; தொட்டவர்மே
லேசாயும் ; கீழே வீழும்;
எட்டாள்கள் தூக்கிடினும் தடிகொண்டு
தாக்கிடினும் எழுந்தி ராதே !

—ச. வேதநாயகம் பிள்ளை

## V. நாட்டுப் பாடல்

அடிசில் சமைக்க ஆரணங்கு தானிணைந்து
பாண்டத்தைக் கழுவி பனிநீர் உலைவார்த்து
சன்னசம்பா தன்னரிசி தீட்டி உலையிட்டாள்
முத்துப்போல் சாதம் வடித்தாள் இளங்கொடியாள்
நந்தியெனும் பூசினிக்காய் நாலுவிதங் கறிசமைத்
வாழைக்காய் பொரியலிட்டாள் [தாள்
வழுதுணங்காய்க் குழம்பு
கொத்தவரைக் காய்கள் குலையோடே பொரியலிட்டாள்
பாகற்காய் பச்சடியும் பயற்றங்காய் தான் பொரியல்
அத்தி விறகொடித்துத் தித்திக்கப் பால்காய்ச்சி
புத்துருக்கு நல்ல நெய்யாம் பால்போல் பருப்புக்களும்
அதிரசமும் தேங்குழலும் ஆறுசுவைக் கறிவகையும்
கடுக சமையலிட்டாள் கன்னி இளமயிலும்.

—பவளக்கொடி மாலை

# செய்யுட்பாடக் குறிப்புரை

## I. வணக்கம்

1. ஒலி - ஓசை ; குலவு - பொருந்தும்; கவிதை - பாடல் ; பாவலர் - புலவர் ; வேதத்தின் உள் நின்று ஒளிர்வாள் - வேதத்தின் உட்பொருளாய் நின்று விளங்கு வாள் ; வாசகம் - அறிவுரை.

2. காரிருள் - (கருமை+இருள்) கருமையான இருட்டு; பேரிடி- (பெருமை+இடி) பெருத்த ஒலிசெய் யும் இடி; அல்லா - இஸ்லாம் மதத்தைத் தழுவுபவர் வணங்கும் கடவுள் பெயர் ; அரன் - சிவன், அரி - திரு மால்; வல்லான் அவன் - எல்லாம் செய்யவல்ல அவன் ; பரமண்டலத்தில் - மோட்ச உலகில்; தந்தை - கிறிஸ்தவ மதத்தினர் வணங்கும் கடவுளாகிய பரமபிதா, நிர்வா

ணம் - முத்திநிலை (புத்த மதத்தினர் கொள்கை); குல விடுவோம் - உறவுகொண்டு மகிழ்வோம்; நிந்தை - பழி வந்திப்போம் - வணங்கித் துதித்திடுவோம்.

## II. நீதி

### 1. மூதுரை

1. நீராம்பல் - நீரில் வளரும் அல்லி; நீரளவே ஆகுமாம் - தண்ணீர் உள்ள நிலை வரையிலுமே வளரும் தன்மையுடையது; மேலைத் தவத்தளவே - முன் செய்த தவத்தின் அளவாகவே; குலத்தளவே - ஒருவன் பிறந்த குலத்தின் அளவே.

2. பண்டு - முதலில்; விண்டுமி - (உமி விண்டு) அரிசியை மூடியிருக்கும் மேல்தோல், உமி, நீங்கினால்; கொண்டபேர் ஆற்றலுடையார்க்கும் - மிகுந்த வலிமை படைத்தவருக்கும், அளவின்றி - தம் வலிமைக்கு மீறிய.

3. விடதாரி -விடத்தைப் போக்கும் விட வைத்தியன்; பாங்கறியா -(பாங்கு+அறியா) நன்மையை அறியாத; புல் அறிவாளர் - அற்ப புத்தி உடையவர் ; கலம்- மண்குடம்.

4. அற்ற குளத்தின் - குளத்தில் நீர் வற்றிய காலத்து; அறு நீர்ப்பறவை - நீங்கும் நீர்வாழ் பறவைகள் ; உற்றுழி - துன்பம் நேர்ந்த காலத்து; தீர்வார் - நீங்குபவர்; ஒட்டி யுறுவார்; - அகலாது உறவுகொண்டிருப்பர்.

5. சாந்தனையும் -(சாம்+தனையும்) சாகும் வரையிலும்; ஆந்தனையும் - (ஆம்+தனையும்) ஆகும் வரையிலும்; குறைக்கும் தனையும்-வெட்டுமளவும்.

### 2. நல்வழி

1. ஆற்றுப் பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும்-ஆற்றில் பாய்ந்தோடும் நீர் பெருக்கு வற்றி, ஆற்று மணலில் நடப்பவர்கள் பாதங்களைச் சுட்டெரிக்

கும் காலத்திலும் ; உலகு ஊட்டும்-உலக மக்களுக்கு நீர் வழங்கும் ; ஏற்றவர்க்கு - யாசிப்பவர்களுக்கு ; நல்கூர்ந்தாராலும் - வறுமை அடைந்தாலும் ; இசைந்து-மனமொப்பி.

2. இரந்து அழைப்பார் - வேண்டி அழைப்பவர்கள் ; சுரந்தமுதம் - (சுரந்து+அமுதம்) பாலைச் சுரந்து; கற்று - (கன்று+ஆ) கன்றையுடைய பசு ; கரவாது - ஒளிக்காமல் ; உற்றார் - உறவினராவர்.

3. வேழத்தில் - யானை மத்தகத்தின்; பட்டு உருவும் கோல் - உள்ளே துளைத்துச் செல்லும் அங்குசம் ; நெட்டிருப்புப் பாரை—(நெடு+இரும்பு+பாரை) நீண்ட இரும்பினாலாகிய உறுதியான கடப்பாரை; நெக்கு இடைவெளி ; பசுமரத்தின் -இளஞ் செடியின்.

4. நாகம் - நல்ல பாம்பு ; நஞ்சு உடைமை - தான் விடங்கொண்டிருத்தலை ; கரந்து உறையும் - புற்றுக்குள் மறைந்திருந்து வசிக்கும் ; புறங்கிடக்கும் - மறைந்திராமல் வெளியே இருக்கும்; கரவுடையார்- (கரவு+உடையார்) வஞ்சகம் உடையவர்கள் ; கரப்பர் - மறைப்பர் ; கரவார் - மறைக்க மாட்டார்.

5. அம்புவி அதன் மேல் -அழகிய பூமியின் மேலே; ஆவாரை- (நல்வினையால் நெடுங்காலம்) உயிர் வாழ்வதற்கு உரியவரை ; சாவாரை - (தீவினையினால்) இறத்தற்குரியவரை ; தவிர்ப்பிப்பார் - தப்பச் செய்வார் ; ஓயாமல் - ஒழியாமல்; ஐயம் - பிச்சை ; மெய்- உண்மை.

நெடுங்காலம் உயிர் வாழ்வதற்குரியவரை இடையிலே அழிக்க வல்லவர் யாவர் ? அன்றி இறத்தற்குரியவரை இறவாமல் நிறுத்த வல்லவர் யாவர் ? ஒழியாமல் பிச்சையெடுக்கச் செல்பவரைத் தடுக்கவல்லவர் யாவர்? இவையாவும் உண்மை யென்று கொள்ளத் தக்கவை.

## 3. நீதி வெண்பா

1. ஈக்கு விடம் தலையில் எய்தும் - ஈக்கு நஞ்சு தலையில் பொருந்தி யிருக்கும் ; இரும் தேளுக்கு- பெரிய தேளுக்கு ; வாய்த்த - பொருந்திய; வாழும் - இருக்கும்; நோக்கரிய பைங்கண் அரவு - காண்பதற்கும் அரிய பசுமை பொருந்திய கண்களையுடைய நாகத்திற்கு ; பல் அளவே - பல்லில் இருக்கும் ; அங்கம்-உடல்.

2. கொம்பு உளதற்கு ஐந்து - கொம்புள்ள விலங்கு களுக்கு ஐந்து முழத் தூரமும்; வெம்பு கரிக்கு ஆயிரம்- வருத்துகின்ற யானைக்கு ஆயிரமுழத் தூரமும் ; வேண் டும் - விலகல் வேண்டும்; வம்பு செறி தீங்கினர் கொடுமை நிறைந்த துட்டர்கள் ; நீங்குவதே - விலகுவதே; நெறி - வழி.

3. பொற்பு ஊரும் - அழகு மிகுகின்ற; புல்லியர்-பாவிகள் ; புகல்-சொல்வாயாக.

4. இன்னல் தரும் - துன்பம் தருகின்ற; பேணுத லும் - பாதுகாத்தலும்; அன்னது - அச்செல்வத்தை, பிறர்பால் இழத்தலும்- பிறரிடத்து (அச்செல்வத்தைக் கொடுத்து) இழந்து போதலும்.

## 4. விவேக சிந்தாமணி

1. ஒப்பு- அன்பு ; அமுதம் - அமிர்தம், தேவர் உணவு; முப்பழம் - வாழை, பலா, மா ஆகிய முக்கனி கள் ; முகம் கடுத்து இடுவர் ஆகில்-முகம் சுளித்துப் படைப்பார்களேயானால் ; கப்பிய - மண்டிய; கடும் பசி - மிகுந்த பசி.

2. அன்னம் - உணவு; தாபம் - தாகம் ; தீர்த்தம்; புண்ணிய தீர்த்தலங்கள் ; பயனில்லை - உதவாதவை.

## III. சதகச் செய்யுட்கள்

1. மதுரம் இல்லாத கவி - இனிமையற்ற பாடல்; தனயர் - பிள்ளைகள்; சற்சனர் - நன்மக்கள்; புரவி யில்லாத படை - குதிரைப் படை யில்லாத சேனை; தளபதி - தலைவன்; பைந்தொடி - பசுமையான பொன் வளையல்களை யணிந்த பெண்மணி; மனை - வீடு; பார்த்திபன் - அரசன்; யூகம் - நுண்ணறிவு; கந்தம் - நறுமணம்; சத்தியம் - மெய், உண்மை; கன வினயம்- மிகுந்த மரியாதை; நியோகி - தவசி; சுசி - சுத்தம், தூய்மை; கன்மம் - நற்காரியங்கள்; மந்த்ரம் - மந்திரம்; வித்வ சனம் - கற்றறிந்த அறிஞர்கள்; உறை - வசிக்கின்றன.

2. வாலிபம் - இளம் பருவம்; வளைகடல் உலகத்தை வளைத்து பரந்துள்ள கடல்; வளர் அறம்- நன்மையை விளர்விக்கும் தருமம்; சீலம் - நல்லொழுக்கம்; தியாகம் - பரிசில்; ஞாலமிசை - உலகத்தில்; நாட்ட வேண்டும் - நிலைபெற்றிருக்குமாறு செய்யவேண்டும்; ஆலமமர் கண்டனே - (ஆலம் + அமர்) நஞ்சை உண்டு நெஞ்சில் அடக்கிய நீலநிறக் கழுத்தையுடைய பரமசிவனே; பூதி - திருநீறு, விபூதி; முண்டனே- நெற்றியை யுடையவனே; அநக- குற்றமற்றவனே.

## IV. பல வகை

### 1. வெண்ணிலா

மீன்கள் - விண்மீன்கள்; நட்சத்திரங்கள்; பாரில் - பூமியில்; ஆழி-கடல்; ஆதாரம்-பற்று; அந்தரத்தில்- பற்று இல்லா இடமாகிய வானத்தில்; அண்டி- நெருங்கி, நிலவு எறிக்கும்- நிலாக் காயும்; பாங்கில்- அருகில்.

### 2. புதிய மாடு :

இட்டமுடன் - விருப்பமுடன்; போர் - வைக் கோற்போர்; பண்டி -வண்டி.

## V. நாட்டுப் பாடல்

அடிசில் - உணவு; ஆரணங்கு - அழகு நிறைந்த பெண் (பவளக்கொடி); பனிநீர்- குளிர்ந்த தெளிந்த நீர்; இளங்கொடியாள் - இளங்கொடி போன்ற பவளக்கொடி; வழுதுணங்காய் - கத்தரிக்காய்; புத்துருக்கு - புதிய தாய்க் காய்ச்சி உருக்கிய ; பொன்போல்-பொன்போன்ற மஞ்சள் நிறம் படைத்த ; கடுக—விரைவாக; கன்னி-மணமாகாத மங்கை.

# வினாக்கள்

## I. வணக்கம்

1. கலைமகள் இருக்கும் இடங்கள் யவை ?

2. கலைமகள் எதன் உட்பொருளாவாள் என்று கூறப்பட்டுள்ளது?

3. வானத்தில் நாம் காண்பன யாவை?

4. பரம்பொருளை ஒவ்வொரு மதத்தவரும் எவ்வாறு பேசுகிறார்கள்?

5. நமது கடமை என்ன?

## II. நீதி

### 1. மூதுரை

1. அறிவு, செல்வம், குணம்—இவை எவற்றிற்குத் தக்கவாறு அமையும்?

2. அற்பருக்குச் செய்யும் உதவி என்ன ஆகும்? எது போல?

3. ஏற்ற உறவு யார்? எது போல?

4. தகாத உறவு யாவர்? எது போல?

5. அறிவுடையோர் தன்மை யாது?

6. மரத்தின் தன்மை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

## 2. நல்வழி

1. நல்ல குடிப் பிறந்தார் இயல்பு யாது?
2. ஆற்றின் தன்மை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
3. உலகத்தவர்க்கு உற்றார் எவர்? எது போல?
4. அங்குசம் எங்குப் பாயும், எங்குப் பாயாது?
5. பாறை எதற்கு நெக்கு விடாது, எதற்கு விடும்?
6. உலகில் உண்மையென்று கொள்ளத் தக்கவை யாவை?
7. நாகம் ஏன் மறைந்து வசிக்கிறது ?
8. யார் தம்மை மறைத்துக் கொள்வர் ? எது போல ?
9. யார் தம்மை மறைத்துக் கொள்ளமாட்டார்? எது போல ?

## 3. நீதி வெண்பா

1. ஈ, தேள், நாகம்—இவைகளுக்கு நஞ்சு எங்குப் பொருந்தி யிருக்கும் ?
2. துர்ச்சனருக்கு நஞ்சு பொருந்திய இடங்கள் யாவை ?
3. எந்தெந்த விலங்குகளுக்கு எவ்வளவு தூரம் விலகியிருத்தல் நன்மை தரும் ?
4. யாரைக் கண்டால் கண்ணிற் படாத தூரம் விலகிச் செல்ல வேண்டும்?
5. செல்வம் துன்பந் தரும் என்பதை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

## 4. விவேக சிந்தாமணி

1. உப்பில்லாக் கூழும் அமுதமாகும் எப்பொழுது?
2. கடும்பசி ஆகுந்தானே. எப்பொழுது?
3. பயனில்லாதன ஏழு கூறுக.

## III. சதகச் செய்யுட்கள்

1. பயன் தாரதவை பத்து கூறுக.

2. வித்தை கற்க வேண்டுவது எப்பொழுது?

3. எவ்வாறு பொருள் தேட வேண்டும்? பொருள் தேடி என்ன செய்ய வேண்டும்?

4. யாருடன் சேர வேண்டும்? சேர்ந்த பின் யாது செய்ய வேண்டும்?

## IV. பல வகை

TB 031(S) N56

1. வானத்தில் தோற்றமளிப்பன யாவை?

2. வெண்ணிலா தோற்றம் என்ன?

3. வெண்ணிலா எங்கு எப்படி இருக்கிறது?

4. வெண்ணிலா சுற்றித் திரிவது எதனால்?

5. அருகில் விளையாட வந்தால் வெண்ணிலாவுக்கு என்ன தருவதாகக் கூறப்படுகிறது?

6. புதிய மாட்டின் பண்பை விவரிக்க.

## V. நாட்டுப் பாடல்கள்

1. பவளக்கொடி சமைத்த பொரியல் வகைகள் யாவை?

2. பவளக்கொடி என்னென்ன உணவு வகைகள் சமைத்தாள்?

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
29445
சென்னை 600 008.

RSR
1162

# DRAVIDA MANI VACHAKAM

STANDARD V

BY

E. RATNABAI DAVIS, M. ED.

AND

REV. BR. M. A. MANUEL, S.H.J., B.A., L.T.

THE INTERNATIONAL PUBLISHING CO.

NUNGAMBAKKAM, MADRAS

*Copyright ]*

*[Price As. 11*

Wrapper Printed at Nathans Press, Madras - 2.